விலை ரூபா 20 பக்கங்கள் 28

# உதயன்

சுடர் 31 கதிர் 058 வள்ளுவர் ஆண்டு 2047 தை 09, சனிக்கிழமை 23.01.2016

SLAS, SLEAS
போட்டிப் பரீட்சைக்கான வகுப்புக்கள்
இலங்கை நிர்வாகசேவை உயர் அதிகாரிகளின் வழிகாட்டலில்
ஆரம்பம் 24.01.2016 காலை 9.00மணி
EDI
தொடர்பு - 076-5075451

# அதிகளவில் சீன முதலீடுகள் இலங்கையை நோக்கி வரும்

## மத்திய வங்கி ஆளுநர் அதிரடித் தகவல்

-டாவோஸிலிருந்து உதயன் பிரதிநிதி-

டாவோஸ், ஜனவரி 23
முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் காலத்திலும் பார்க்க அதிகமான சீன முதலீடு இலங்கையை நோக்கி வருகின்றது என்று இலங்கையின் மத்திய வங்கி ஆளுநர் அர்ச்சுன மகேந்திரன் தெரிவித்தார்.
இப்போது சீன நிறுவனங்கள் முழு அளவில் வருகின்றன. முன்னர் இருந்ததிலும் பார்க்க, அதிகமான பெரிய திட்டங்களுடன் வருகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார்.
உலகப் பொருளாதார அமையத்தின் வருடாந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக வந்திருக்கும் இலங்கை உயர்மட்டக் குழுவில் மத்திய வங்கி ஆளுநரும் அங்கம் வகிக்கிறார். நேற்றுக் காலையில் 'உதயன்' பத்திரிகையிடம் பேசிய அவர், ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட சீன முதலீட்டுத் திட்டங்கள் தொடரும் என்றார்.
மகிந்த ராஜபக்ச அரசு சீனா பக்கம் அதிகம் சாய்வதாக எழுந்த எண்ணத்தின் அடிப்படையிலேயே அதனை மாற்றிமைத் திரிபால சிறிசேன - பக். 22

## 3 வயதுச் சிறுவன் கிணற்றில் வீழ்ந்து சாவு

வவுனியா, ஜன.23
வவுனியாவில் நேற்று மதியம் மூன்று வயதுப் பாலகன் கிணற்றில் தவறி விழுந்து உயிரிழந்துள்ளார்.
வவுனியா இரணை இலுப்பைக்குளம் பகுதியைச் சேர்ந்த ஜெகநாதன் ரஜீபன் என்ற சிறுவனே கிணற்றில் தவறி விழுந்து உயிரிழந்துள்ளார். பக். 22

## இந்திய மீனவருக்கு வரவேற்பு

யாழ்ப்பாணம், ஜன. 23
விடுதலை செய்யப்பட்ட இந்திய மீனவர்களுக்கு இராமேஸ்வரம் பகுதியில் உறவினர்களால் உற்சாக வரவேற்பளிக்கப்பட்டது.
இலங்கைக் கடல் எல்லைக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைதாகிப் பின்னர் விடுவிக்கப்பட்ட 102 மீனவர்கள் சுமார் 50 நாள்களின் பின்னர் நேற்றுத் தமது தாயகத்தை சென்றடைந்துள்ளனர்.
2015ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19ஆம் திகதி முதல் இந்த மாதம் 5ஆம் திகதி வரை கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்களே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டனர்.
கைதான பக். 23



## வடக்கு முதல்வரை சந்தித்தார் வைரமுத்து

யாழ்ப்பாணம், ஜன. 23
யாழ்ப்பாணம் வந்துள்ள கவியரசு வைரமுத்து வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.
நேற்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் வருகை தந்த கவிஞர் வைரமுத்து, யாழ். கோவில் வீதியில் அமைந்துள்ள வடக்கு மாகாண முதலமைச்சரின் இல்லத்தில் சந்தித்தார்.
நேற்று இரவு 7.00 மணியளவில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.
இந்தச் சந்திப்பில், பக். 23

## நவாலித் தாக்குதல் பெருந் தவறு; ராணுவம், அரசே முழுப் பொறுப்பு

### சம்பவத்தை அறிந்தபோது கூச்சலிட்டு குமுறினேன் என்கிறார் சந்திரிகா



கொழும்பு, ஜன.23
யாழ்.நவாலித் தேவாலயத்தின் மீது விமானக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதான செய்தியை அறிந்தபோது நான் இராணுவத்தினரையும் விமானப் படையினரையும் நோக்கி உரத்துக் கத்தினேன். இந்தத் தாக்குதல் ஒரு தவறு. எது எப்படியிருந்தாலும் அதற்கு விமானப் படையினரும் இராணுவத்தினரும் அரசும் முழுப் பொறுப்பேற்க வேண்டும்.
இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.
'உதயனு'க்கு வழங்கிய பிரத்தியேக நேர்காணலின்போது எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்ட பக். 22

## எதிர்க்கட்சித் தலைவராக சம்பந்தனை ஏற்கமுடியாது

### புதிய கட்சி ஆரம்பிப்பேன் கோத்தபாய நேற்று சூளுரை



கொழும்பு, ஜன. 23
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனை எதிர்க்கட்சித் தலைவராக ஏற்க முடியாது. புதிய கட்சியை உருவாக்கும்போது அதில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த பங்கெடுப்பார். பொதுமக்கள் விரும்பினால் நானும் அரசியலுக்கு வருவேன்.
இவ்வாறு முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.
ரக்னா லங்கா நிறுவன விசாரணைகளுக்காக சாட்சி வழங்க ஊழல்களுக்கு எதிரான விசா பக். 22

## பருத்தித்துறையில் பஸ் சாரதி மீது தாக்குதல்

பருத்தித்துறை, ஜன.23
இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறைச் சாலையில் கடமையாற்றும் பஸ் சாரதி ஒருவர் நேற்று இரவு 8.30 மணியளவில் இனந்தெரியாதவர்களால் மோசமாகத் தாக்கப்பட்ட நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
நேற்று இரவு 8.30 மணியளவில் பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியின் முன்னால் உள்ள ஆரம்பப் பாடசாலைப் பிரதான வீதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. பக். 23

## பாதுகாப்புச் செயலாளர் ஜனவரி 27 யாழ். வருகை

### படைவசம் உள்ள காணிகளின் விவரங்களைத் திரட்டுவதற்காக

யாழ்ப்பாணம், ஜன. 23
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பணிப்புக்கு அமைய, முப்படையினர் வசமுள்ள காணிகளின் விவரங்களைத் திரட்டுவதற்காக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி எதிர்வரும் 27 ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.
வடக்கில் பக். 22

முச்சந்தி முரளி



அம்மையார் ஏன் இப்போ இதைச் சொல்லுறா ?...

## பேராசிரியர் சிற்றம்பலத்தை கடிந்துகொண்டார் சம்பந்தன்



வவுனியா, ஜன. 23
தமிழ் மக்கள் பேரவையின் கூட்டத்தில் பங்குகொண்டமைக்காகத் தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரான பேராசிரியர் சி.க.சிற்றம்பலத்தைக் கடிந்து கொண்டார் தமிழ்த் பக். 22

## 6 பிள்ளைகளின் தந்தை காய்ச்சலால் உயிரிழப்பு

கிளிநொச்சி, ஜன. 23
ஒரு வித காய்ச்சலினால் பீடிக்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட குடும்பஸ்தர் ஒருவர் சேர்க்கப்பட்டு 3 மணித்தியாலங்களின் பின் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.
இவ்வாறு உயிரிழந்தவர் பாலையடி, மல்லாவிப் பகுதியைச் சேர்ந்த இரத்தினம் சூசைராஜா (வயது-56) என்ற ஆறு பிள்ளைகளின் பக். 23

யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி
இன்னும் 6 நாள்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கஞ்சாப் பொதிகளுடன் கைதாகினார் இளைஞர்

மன்னார்,ஜன.23

பல லட்சம் ரூபா பெறுமதியான கஞ்சாப்பொதியுடன் மன்னார் பாலியாற்றுப் பகுதியில் வைத்து நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட விசேட போதைப் பொருள் குற்றத்தடுப்புப் பிரிவின் உப பொலிஸ் பரிசோதகர் எச்.எம். யூ.ஹேரத் தெரிவித்தார்.



மன்னார் மாவட்ட விசேட போதைப்பொருள் குற்றத்தடுப்பு பிரிவுக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலையடுத்து மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் டபிள் யூ.எ.எம்.விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கு அமைவாக உப பொலிஸ் பரிசோதகர் எச்.எம். யூ.ஹேரத் தலைமையில் 9 பேர் அடங்கிய பொலிஸ் குழுவினர் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை 2.30 மணியளவில் பாலியாற்று பிரதான வீதியில் வைத்து மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த குறித்த நபரை மடக்கிப் பிடித்துள்ளனர்,

குறித்த நபரிடம் இரண்டு கஞ்சாப் பொதிகள் காணப்பட்டதாகவும், அவை 4 கிலோ 160 கிராம் நிறை கொண்ட பல இலட்சம் ரூபா பெறுமதியானவை என மன்னார் மாவட்ட விசேட போதைப் பொருள் குற்றத் தடுப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட நபர் தற்போது மன்னார்சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றார்.

குறித்த நபர் விசாரணைகளின் பின், மன்னார் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்படவுள்ளதாக மன்னார் மாவட்ட விசேட போதைப் பொருள் குற்றத்தடுப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.

(த-ஜ-56)

# வீட்டிலிருந்தவர்களைத் தாக்கி நகை, பணம் கொள்ளையடிப்பு

*மன்னாரில் அதிகாலை சம்பவம்*

மன்னார்,ஜன.23

மன்னார் எழுத்தூர் கிராம அலுவலகர் பிரிவுக்குட்பட்ட வீடு ஒன்றினுள்நேற்றுவெள்ளிக்கிழமை அதிகாலை 1.30 மணியளவில் நுழைந்த கொள்ளையர்கள் வீட்டில் ஆழ்ந்த நித்திரையில் இருந்தவர்களைக் கண்மூடித்தனமாகத் தாக்கிவிட்டுப் பல இலட்சம் ரூபா பெறுமதியான நகை, பணம் மற்றும் கையடக்கத்தொலைபேசி ஆகியவற்றை கொள்ளையடித்துச் சென்ற சம்பவம் மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

மன்னார் எழுத்தூர் பகுதியைச் சேர்ந்த முருங்கன் பாடசாலையின் ஆசிரியரான நிவீன் பெர்ணாண்டோ என்பவரது வீட்டிலேயே குறித்த சம்பவம் இடம் பெற்றுள்ளது.

குறித்த ஆசிரியர் மற்றும் அவருடைய மனைவி, தந்தை மற்றும் மூன்று பிள்ளைகள் சம்பவதினமான வெள்ளிக்கிழமை அதிகாலை குறித்த வீட்டில் ஆழ்ந்த நித்திரையில் காணப்பட்டுள்ளனர்.

இதன்போது அதிகாலை 1.30 மணியளவில் வீட்டின் பின்புறமாக வந்த கொள்ளையர்கள் வீட்டின் மீது ஏறி ஓட்டைக் கழற்றி உள்ளே இறங்கினர்.

வீட்டின் உள்ளே மூன்று கொள்ளையர்கள் சென்றுள்ளனர். இவர்களில் இருவர் முகத்தைத் துணியினால் மறைத்தவாறும், ஒருவர் முகத்துக்கு எதுவும் கட்டாதவாறும் சென்றுள்ளனர்.

அங்கு ஆழ்ந்த நித்திரையில் காணப்பட்ட ஆசிரியர், அவரின் தந்தை மற்றும் மனைவி ஆகியோர் மீது தடிகளினால் கண்மூடித்தனமாக தாக்கியுள்ளனர்.

அதன் பின் அவர்களை அச்சுறுத்தி அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த பல இலட்சம் ரூபா பெறுமதியான நகைகள் மற்றும் பணத்தைக் கொள்ளையடித்ததோடு, பெறுமதியான கையடக்கத்தொலைபேசிகளையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

கொள்ளையர்கள் தப்பிச் சென்ற நிலையில் காயமடைந்த ஆசிரியர் அபாயக் குரல் எழுப்பியதையடுத்து, அயலவர்கள் குறித்த வீட்டுக்குச் சென்றபோது குருதி வெள்ளத்தில் காணப்பட்ட குறித்த மூவரையும் மீட்டு மன்னார் பொது வைத்தியசாலையில் அனுமதித்தனர். குறித்த மூவருடைய தலை மற்றும் உடற்பகுதியில் பலத்த காயங்கள் ஏற்பட்டுள்ளன.

மன்னார் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட மூவரும் சிகிச்சை பெற்று வந்த நிலையில், மேலதிக சிகிச்சைக்காக ஆசிரியரின் மனைவி யாழ்.வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

சம்பவம் இடம் பெற்ற வீட்டுக்கு விரைந்து வந்த பொலிஸார் தடயங்களைப் பார்வையிட்டதோடுமேலதிகவிசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். குறித்த சம்பவம் அப்பகுதி மக்கள் மத்தியில் பெரிய அச்சத்தை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(த-ஜ-56)

# ஒரு நாளில் மட்டும் 11 பேர் விசர்நாயால் கடியுண்டனர்

சாவகச்சேரி,ஜன.23

ஒரே நாளில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் உள்ளிட்ட 11 பேர் விசர்நாய்க் குட்டியினால் கடியுண்டு சாவகச்சேரி வைத்தியசாலையில்சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் சாவகச்சேரி சிவன் கோயில் பகுதியில் நேற்று முன்தினம்இடம்பெற்றது.

வீதியில் கண்டெடுத்த இரண்டு மாதம் நிரம்பிய நாய்க்குட்டியை பாடசாலைக்குச் சென்று திரும்பிய அந்தப் பகுதியைச் சேர்ந்த சிறுவன் வீட்டுக்குத் தூக்கி வந்துள்ளார். நேற்று முன்தினம் மாலை திடீரென உமிழ்நீர் சொரிந்த நிலையில் நாய்க்குட்டி வீட்டில் உள்ள ஐந்து சிறுவர்களையும், அவர்களது பெற்றோரையும் கடித்துள்ளது.

அத்துடன் அயல் வீட்டில் உள்ள இரு சிறுவர்கள் உட்பட நால்வருக்கும் கடித்துள்ளது. இதனால் நாயை இரவு பிடித்துக் கட்டி வைத்ததாகவும், காலையில் நாய்க்குட்டி இறந்த நிலையில் காணப்பட்டதெனவும் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாகச் சாவகச்சேரி நகரப் பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்கு அறிவிக்கப்பட்டு அங்கு சென்ற பொதுச் சுகாதார பரிசோதகர் நாய்க்குட்டியால் கடியுண்ட 11 பேரையும் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு அனுப்பியுள்ளார். மேலும் அந்தப் பகுதியில் உள்ள நாய்கள் மற்றும் குடியிருப்பாளர்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பு ஊசி மருந்து ஏற்றுவதற்கான ஏற்பாடுகளையும் மேற்கொண்டு வருகிறார்.

இது தொடர்பாக சாவகச்சேரி கால்நடை மருத்துவர் அலுவலகத்துக்கு அறிவிக்கப்பட்டு அங்கு விரைந்த கால்நடை மருத்துவர் நாய்க்குட்டியைப் பரிசோதித்து விட்டு, விசர்நாயினால் அல்லது கீரியினால் கடியுண்டிருக்கலாமெனக் கூறி, நாய்க்குட்டியின் தலையை வெட்டி கொழும்புக்குப் பரிசோதனைக்காக அனுப்பவதற்கு எடுத்துச் சென்றுள்ளார்.

நேற்று முன்தினம் இந்த நாய்க்குட்டி அயலில் உள்ள குடியிருப்புகளுக்குச் சென்றுள்ளதால் அனைத்துக் குடியிருப்புகளில் உள்ளவர்களையும் பரிசோதித்து தடுப்பூசி மருந்து ஏற்றவுள்ளதாகப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்தார்.

(த-ஜ-9)

# ஆடைத் தொழிற்சாலை ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்

கிளிநொச்சி, ஜன.23

கிளிநொச்சியில் உள்ள ஆடைத் தொழிற்சாலை ஒன்றின் 500க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள், குறித்த நிறுவனத்தின் நிர்வாகத்துக்கு எதிராக நேற்று வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

கிளிநொச்சி அறிவியல் நகரில் அமைந்துள்ள குறித்த தொழிற்சாலையின் மனிதவளப் பிரிவில் கடமையாற்றும் அதிகாரி ஒருவர் நிர்வாகத்தால் இடமாற்றம் செய்யப்பட்டதை அடுத்து, அவரை மீண்டும் குறித்த நிறுவனத்தின் பணியில் இணைக்க வேண்டும் என்று தெரிவித்தே தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



நேற்றுக் காலை முதல் மாலை வரை தொழிலாளர்கள் குறித்த ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டனர்.

குறித்த பகுதியில் கடமையாற்றிய தமிழ் அதிகாரி ஒருவர் தொழிலார்களின் சம்பளம் மற்றும் விடுமுறை தொடர்பாக அடிக்கடி உயர் அதிகாரிகளுடன் கதைத்து வருவதால், அதைப் பொறுத்து கொள்ள முடியாமலேயே குறித்த நிர்வாகம் அவரை இடமாற்றம் செய்துள்ளதாகக் கூறப்பட்டது.

இதை அறிந்த தொழிலாளர்கள் குறித்த அதிகாரிக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட சமயம், அது நிர்வாகத்தினரால் தடுக்கப்பட்டபோதுஅவர்கள்அதையும் தாண்டி வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டதுடன், இடமாற்றம் செய்யப்பட்ட அதிகாரி மீண்டும் வருகை தரும் வரை வீடு செல்லமாட்டோம் எனவும் தெரிவித்தனர்.

ஆர்ப்பாட்டம் தொடர்பாகத் தகவலைப் பெற்றுக்கொள்ளச் சென்ற ஊடகவியலாளர்கள் நிர்வாகத்தினரால் உள்ளே செல்ல அனுமதிக்கப்படவில்லை.

(த-21-ரி3)

## பெண் கிராம அலுவலரை கடத்தியவர்கள் மறியலில்

சாவகச்சேரி, ஜன.23

மீசாலை வடக்கைச் சேர்ந்த இளம் பெண் கிராம அலுவலர் கடமைக்குச் சென்ற வேளையில் அவரையும் அவரது சகோதரனையும் தாக்கிவிட்டு கிராம அலுவலரைக் கடத்திச் சென்ற சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட மூவரையும் எதிர்வரும் 27 ஆம் வரை விளக்க மறியலில் வைக்க உத்தரவிட்ட நீதிவான், அன்றைய தினம் அடையாள அணி வகுப்புநடத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

நேற்றுமுன்தினம் கடமைக்குச் சென்ற கிராம அலுவலரை வாகனத்தில் கடத்திச் சென்ற வேளை முல்லைத்தீவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இந்த மூவரும் நேற்றுமுன்தினம் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.

இந்த மூவரையும் கொடிகாமம் பொலிஸார் நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தினர். வழக்கை விசாரித்த நீதிவான், இவர்களை எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டு அன்றைய தினம் அடையாள அணிவகுப்பு நடத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு பொலிஸாருக்குப் பணித்தார்.

கிராம அலுவலரை மோட்டார் சைக்கிளில் எற்றிச் சென்ற சகோதரனையும் இவர்கள் தாக்கியுள்ளனர்.அவர்பற்கள்உடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

(த-9)

# வெள்ளி மாலை, ஞாயிறு காலை பிரத்தியேக வகுப்புக்களுக்குத் தடை

யாழ்ப்பாணம்,ஜன.23

வாரத்தில் வெள்ளிக்கிழமை மாலையிலும், ஞாயிறு காலை வேளைகளிலும் பிரத்தியேக வகுப்புக்கள் நிறுத்தப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட அரச அதிபர் தம்மிடம் தெரிவித்துள்ளதாக யாழ்.சின்மயா மின் ஜாக்கிரத சைதன்ய சுவாமிகள் அறிவித்துள்ளார்.

யாழ்.இந்து மாமன்றத்தில் கடந்த 16ஆம்திகதிசனிக்கிழமை சைவ நெறி பாடநூல் தவறுகளைத்திருத்துவது தொடர்பான கலந்துரையாடல் கலாநிதி ஆறு திருமுருகன் தலைமையில் நடைபெற்றிருந்தது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றும்போது:

யாழ்.மாவட்ட அறநெறிப் பாடசாலைகளை ஒழுங்காக செயற்பட வைப்பது தொடர்பிலும், மாணவர் வரவை அதிகரிப்பது தொடர்பிலும் அரச அதிபருக்கும் எமக்கும் இடையில் கடந்த வாரம் கலந்துரையாடல் இடம்பெற்றிருந்தது. இதன்போதே வெள்ளிக்கிழமை இந்துக்களின் புனித நாள். அன்று மாணவர்கள் ஆலயம் சென்று கூட்டு வழிபாடுகளில் ஈடுபட வேண்டும். சமயச் சொற்பொழிவுகளைக் கேட்க வேண்டும். சமய விழுமியங்களை வாழ்கையில் பின்பற்றி வழி காட்டவேண்டும்.

அவ்வாறே ஞாயிற்றுக்கிழமைகளில் காலைவேளை அறநெறிக்குச் சென்று சமய விழுமியங்களை மாணவர்கள் கற்றுக்கொள்ள வேண்டும். இதற்கு வசதியாக வெள்ளி மாலையும், ஞாயிறு காலையும் பிரத்தியேக வகுப்புக்களை நிறுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் அரச அதிபரிடம் கேட்டிருந்தோம்.

அதனை ஏற்றுக்கொண்ட அரச அதிபர் இனிவரும் காலங்களில் மேற்படி கோரிக்கைகள் நடைமுறைப்படுத்தப்படும் எனத் தெரிவித்திருந்ததாகக் கூறினார்.

(த-ஜ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைப் பிரதான பரீட்சை கால அட்டவணை அறிவிப்பு

கொழும்பு, ஜன.23

இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் இந்த ஆண்டில் நடத்தப்படும் பிரதான பரீட்சைகள் தொடர்பான கால அட்டவணை நேற்று வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, இந்த வருடத்துக்கான தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை ஓகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

ஜீ.சி.ஈ சாதாரண தரப் பரீட்சை எதிர்வரும் டிசம்பர் 6 ஆம் திகதி ஆரம்பமாகி டிசெம்பர் 17 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

மேலும் ஜீ.சி.ஈ உயர்தரப் பரீட்சை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 2 ஆம் திகதி ஆரம்பமாகும். இந்தப் பரீட்சை ஓகஸ்ட் 27 ஆம் திகதி வரை நடைபெறும்.

அத்துடன், ஜீ.சி.ஈ உயர்தரப் பரீட்சையுடன் தொடர்புள்ள செயற்பாட்டுப் பரீட்சைகள் ஒக்ரோபர் 17 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை நடைபெறும் என பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

(த-வ-5)

## பொதுக்கூட்டமும் மாணவர் கௌரவிப்பும்

மாவட்ட பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்க ஆண்டுப் பொதுக் கூட்டமும், மாணவர் கௌரவிப்பும், புதிய நிர்வாகத் தெரிவும் நாளை ஞயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத்தின் தலைவர் செ.ஜெயக்குமார் தலைமையில் நடை பெறும் இந்த நிகழ்வில், புலமைப்பரிசில் மற்றும் பல்கலைக் கழக அனுமதியைப் பெற்ற மாணவர்கள் கௌரவிக்கப் படவுள்ளனர்.

நிகழ்வில் விருந்தினர்களாக வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் பொ.ஐங்கரநேசன், வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார், யாழ். மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் சு.ஊேசு ஆகியோரும் கலந்து கொள்வர்.

(த-ஜ-ரி5)

லக்கின

இம்முறை தனயோகம் உங்களுடையதா?

| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
|---|---|---|
| 22.01.2016 | 1932 | சிவப்பு |

மேடம்

வெற்றி இலக்கங்கள்

15 24 43 54

ஞாயிற்றுக்கிழமை வெற்றிப்பொதி
ரூ 3,731,480/-

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
அல்லது துரித அழைப்பு 1919

2016 ஜனவரி 24ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஊதா நிற டிக்கட்டுக்களாகும்.
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

நியத்த ஜய

வெற்றி வாரம் : 430
திகதி : 2016.01.22
வர்ணம் : நீலம்

வெற்றி இலக்கங்கள்

20 26 43 45 D

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ஜக்பொட் பரிசுத்தொகை
ரூ. 21,166,220/-

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>NJ என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு 1919

2016.01.26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அடுத்த சீட்டிழுப்புக்கு செல்லுபடியாவது மஞ்சள் நிற டிக்கட்டுகளாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதத்திற்கு செல்லுபடியாகும்.

## கிளி/கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய வருடாந்த பங்குனி உத்தர பொங்கல் விழா ஆலோசனைக் கூட்ட அறிவித்தல்

23.03.2016 புதன்கிழமை நடைபெறவுள்ள பங்குனி உத்தர பொங்கல் சம்பந்தமான ஆலோசனைக் கூட்டம் 25.01.2016 திங்கட்கிழமை பி.ப 1.30 மணிக்கு ஆலய மதிய பூசையின் பின் கௌர பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் அவர்களினதும், மாவட்ட அரசாங்க அதிபர் மதிப்பிற்குரிய சுந்தரம் அருமை நாயகம் அவர்களினதும், இணைத் தலைமையில், ஆலய வளாகத்தில் நடைபெறவுள்ளது. இக் கூட்டத்துக்கு அனைத்து திணைக்களங்கள், நிறுவனங்களின் தலைவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். எனவே அனைத்து அங்கத்தவர்கள், அடியார்கள், தொண்டர்கள், நலன் விரும்பிகள் அனைவரும் கலந்து விழா சிறப்புற ஒத்துழைக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

**ஆலய பரிபாலன சபையினர்**
**நாகதம்பிரான் ஆலயம்,**
**புளியம்பொக்கணை.**

விற்பனைக்கு
தொடர்பு: 078 615 5929
நல்ல நிலையிலுள்ள.கொங்கிறீற் கல்லு அரியும் மெசின் விற்பனைக்கு உண்டு.

கடை வாடகைக்குண்டு
நல்லூர் கோயிலுக்கு அருகில் கடை வாடகைக்கு உண்டு. யப்பான் சிறிய சைக்கிள், குளிர்சாதனப் பெட்டியும் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு: 077 4347800

விற்பனைக்கு
தொடர்பு மயூரன் பாம் சென்ரர்
ஒரு வயது நிரம்பிய அல்சேசன் ஆண் நாயும், பொமேரியன் ஆண் பெண் நாயும், டாசோன் ஆண் பெண் நாயும், பொக்கற் பனியர் ஆண், பெண் குட்டிகள், வான்கோழி, கினிகோழி, வெள்ளாடியன், மணிதாரா, ஊர்த்தாரா விற்பனைக்கு.

விற்பனைக்கு
தொடர்புகளுக்கு: 0777 283705, 021 223 1733
வெதுப்பக உபகரணங்கள் டீசல் அவன், மா குழைக்கும் இயந்திரம், பாண் வெட்டும் கட்டர், நெஸ்கோப்பி மெசின், யூஸ் தயாரிக்கும் மெசின், ஹீட்டர், சோக்கேஸ், மேசைகள், கதிரைகள் என்பன விற்பனைக்குண்டு.

LAPTOP மலிவு விற்பனை
DELL LAPTOP
CORE 2 Duo
(2GB, 80GB, WIFI, SKYPE)
19,750/= மட்டுமே
(ONE YEAR WARRANTY)
ST.ANTONY'S
187, KKS ROAD,
JAFFNA TOWN.
021 222 4865
075 069 8608

சிங்களம் புதிய பிரிவுகள் மற்றும் ORAL வகுப்புக்கள்
சிங்களம் எழுத, பேச, வாசிக்க இலகுவான முறையில் கற்பிக்கப்படும்
ஆரம்பம் 24.01.2016 (ஞாயிறு)
15.02.2016 நடைபெறவுள்ள ORAL பயிற்சி வகுப்புக்கள்
23.01.2016 அன்று
மதியம் 12.00 – 1.00 மணி வரை நடைபெறும்.
ஸ்ரீமாஸ்ரர்
72, இராமநாதன் வீதி, (மிலேனியம் அருகில்) யாழ்ப்பாணம்.
41, நக்கா லேன், கண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
விபரங்களுக்கு – 0777 033 729




## நயினையில் தைப்பூஷ விழா

## ஸ்ரீ நாகபூஷணி அமுத சுரபியில் அடியார்களுக்கு சிறப்பு அன்னதானம்

நயினாதீவு அருள்மிகு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் நாளை (24.01.2016) ஞாயிற்றுக் கிழமை தைபூஷ விழா மிகவும் சிறப்பாக நடைபெற உள்ளது. விசேட அபிஷேகங்களை தொடர்ந்து அம்பாள் திருமஞ்சத்தில் வீதியுலா வந்து அன்பர்களுக்கு அருள் பாலிப்பாள். அன்றைய தினம் நயினாதீவுக்கு வரும் அனைத்து மெய்யடியார்கள் அனைவருக்கும் பிரதானசாலை வீதியாக அமைந்துள்ள நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுத சுரபி அன்னதான சபையில் சிறப்பு அன்னதான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது என்பதனை அம்பாள் மெய்யடியார்கள் அனைவருக்கும் மகிழ்வுடன் அறியத் தருகின்றோம்.

**அமுதசுரபி நிர்வாகம்**

(67944)(11.17.18)

## யாழ்ப்பாணம் மாநகரசபை

### உழவு இயந்திரங்கள் வாடகைக்கு அமர்த்தல் - 2016

யாழ் மாநகரசபை எல்லைக்குள் இருந்து பணிக்கப்படுகின்ற வட்டார ஆதனங்களிலிருந்து வெளியேற்றப்படும் வகைப்பிரிக்கப்பட்ட திண்மக் கழிவுகளினை கல்லுண்டாய் மற்றும் காக்கை தீவு வெளியிலுள்ள ஒதுக்கப்பட்ட இடங்களிற்கு எடுத்துச் செல்வதற்கு உழவு இயந்திரங்கள் வாடகைக்கு தேவைப்படுகின்றன. இச்சேவையினை வழங்கக் கூடிய வழங்குனர்கள் 27.01.2016 ஆம் திகதி புதன்கிழமை 12.00 மணிக்கு முன்னதாக கூறுவிலைப்படிவத்தினை மாநகர சபையின் கொள்வனவுப்பகுதியில் பெற்று 29.01.2016 ஆம் திகதிக்கு முன்னதாக கிடைக்கக் கூடியதாக "ஆணையாளர் மாநகரசபை யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

பொ. வாகீசன்
ஆணையாளர் – மாநகரசபை யாழ்ப்பாணம்.

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
A/L பரீட்சை பெறுபேறுகளின் பின்னர் உங்களின் எதிர் கால நலன் கருதி

Spoken English with Grammar 1 1/2 Months
(ஆங்கிலத்தில் பேசுவதற்கு 100% உத்தரவாதம்) (Quick Learning course)

Diploma in English 2 1/2 Months

- எமது கற்றை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
- O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
- Excellent Teacher's Panel & Individual Attention.

Batch1 : 24.01.2016
Batch2 : 26.01.2016
Batch3 : 30.01.2016
Batch4 : 01.02.2016

No.15, Sirambiyady Lane (Off Stanley Road) ,Jaffna.
(Above Sathosa SM)
Telephone 021 2224550
Hotline 0776583728, 0777722422, 0776555677

கிழமை நாட்கள் மற்றும் சனி, ஞாயிறு வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன.
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் தங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனைவளர்ப்போர் சங்கம்
# இலங்கை பனை அபிவிருத்திச் சபை

பனைப்பயிர்ச்செய்கையை ஊக்குவித்தல், பாதுகாத்தல் மற்றும் பனைவள பயன்பாட்டை மேம்படுத்தல் போன்ற நோக்குடன் இலங்கை பனை அபிவிருத்திச் சபையினால் ''பனைவளர்ப்போர் சங்கம்'' எனும் அமைப்பு அங்குரார்ப்பணம் செய்யப்படவிருக்கிறது.

இவ்வமைப்பானது இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 1975ஆம் ஆண்டு 24 ஆம் இல தெங்கு அபிவிருத்தி (திருத்தச்) சட்டத் தினால் திருத்தியமைக்கப்பட்ட வாறான 1971 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க தெங்கு அபிவிருத்தி திருத்தச் சட்டத்தின் 2(1) ஆம் பிரிவினால் அங்கீகரிக்கப்பட்ட கட்டளையின் இரண்டாம் அட்டவணையின் (1) சிறப்புத்தத்துவத்திற்கமைய பனை அபிவிருத்திச் சபையினால் பதிவு செய்யப்பட உள்ளது.

04 பரப்புக்கு (1/4 ஏக்கர்) மேல் அல்லது 10 பனைமரங்களுக்கு மேல் உள்ள பனங்காணியை உடையவர்கள்/ பனை செய்கையில் ஈடுபடுவர்கள் இவ்வமைப்பில் அங்கத்தவர்களாக இணைய முடியும்.

**அங்கத்துவம் பெறுவதால் கிடைக்கும் அனுகூலங்கள்:**

* பனந்தோட்டத்தில் இருந்து கிடைக்கும் மூலப்பொருள்களை சரியான முறையில் பயன்படுத்தி வருமானம் ஈட்டக்கூடிய வழிகள் தொடர்பான ஆலோசனைகள்/பயிற்சிகள்
* உற்பத்திகளுக்கான சந்தை வாய்ப்பினை ஏற்படுத்துதல்
* உற்பத்தியாளர்களை/ பயிர்செய்கையாளர்களை இனங்கண்டு கொள்ளல்
* பனந்தோட்ட உரிமையாளர்களின் பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடி சாத்தியமான தீர்வுகளை எட்டுதல்
* பாவனையின்றி இருக்கும் பனை வளத்தினை உற்பத்திதிறனுடைய தாக மாற்றுவதுடன் அதனுடனிணைந்து மக்களுக்கு தொழில்வாய்ப்பை ஏற்படுத்தல்.

இவ்வமைப்பில் இணைய விரும்புபவர்கள் பனை அபிவிருத்திச்சபையின் மாவட்ட அலுவலகங்களில் அல்லது தலைமையலுவலகத்தில் விநியோ கிக்கப் படும் அங்கத்தவர் விண்ணப்பப்படிவத்தினை ரூபா10/- செலுத்திப் பெற்று பூரணப்படுத்தி நேரிலோ/ தபாலிலோ **முகாமையாளர் (அபிவிருத்தி) பனை அபிவிருத்திச் சபை, கண்டி வீதி, யாழ்ப்பாணம்** எனும் முகவரிக்கு அனுப்பி வைத்து அங்கத்தவராக இணைந்து கொள்ளமுடியும். இது தொடர்பான மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ள பனை அபிவிருத்திச்சபை அபிவிருதிப் பிரிவுடன் தொடர்பு கொள்ளமுடியும் (தொடர்புகளுக்கு - 021 222 2034)

**தலைவர்,**
**பனை அபிவிருத்திச் சபை.**

(சி.28762) (13.18)

# சாவகச்சேரி கைத் தொழில் வணிகர் மன்றம்
# 37 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம்

**இடம்: சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி**
**காலம் : 07.02.2016 (ஞாயிற்றுக்கிழமை)**
**நேரம் : மு.ப.9.30**

எமது மன்றின் விடயமாக பிரேரணைகள் இருப்பின் 29.01.2016 ஆம் திகதிக்கு முன் எழுத்து மூலம் மன்றச் செயலாளர் அவர்களுக்கு அனுப்பிவைக்க்வும்

1. அமரர் ச.நமசிவாயம் புலமைப் பரிசு நிதியம்
2. அமரர் கு.தவராஜசிங்கம் விதவை நிதியம்
3. சன்றைஸ் ஊனமுற்றோர் நிதியம்
4. அமரர் ச.இரத்தினம் வறிய மாணவர் நிதியம்
5. பொ.தாமோதரம் வறிய மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கான நிதியம்
6. சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்ற மாணவர் நிதியம்
7. பேராசிரியர் வசந்தி அரசரத்தினம் கௌரவிப்பு விழா ஏற்பாட்டுக்குழு மாணவர் நிதியம்
8. அமரர் செ.சபாரத்தினம் மாணவர் நிதியம்
9. அமரர்களான சுப்பிரமணியம் - நேசரத்தினம் மாணவர் நிதியம்
10. முத்துமாரியம்மன் மாரி மைந்தன் திருப்பணியாளர் வைத்திலிங்கம் சிவராசா மாணவர் நிதியம்
11. ஓய்வுநிலை இலங்கை வங்கி முகாமையாளர் ச.சந்திரகுமார் மாணவர் நிதியம்
12. கலாநிதி முருகப்பா பஞ்சாபிகேசன் மாணவர் நிதியம்
13. அமரர் ச.சண்முகானந்தம் மாணவர் நிதியம்
14. கணபதிப்பிள்ளை முரளி மாணவர் நிதியம்
15. பொ.தாமோதரம் பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கான நிதியம்
16. சாவகச்சேரி Hunt Family மாணவர் நிதியம்
17. அமரர் ஆ.பரமநாதன் மாணவர் நிதியம்
18. சாவகச்சேரி குகன் ஸ்ருடியோ உரிமையாளர் அமரர் அ.சித்திரவடிவேலு மாணவர் நிதியம்
19. அமரர் செ.மகேஸ்வரன் மாணவர் நிதியம்
20. வைத்திய வள்ளல் டாக்டர் ச.அம்பிகைபாகன் மாணவர் நிதியம்
21. தெய்வேந்திரம் - கமலாம்பிகை மாணவர் நிதியம்
22. அமரர் க.பொன்னம்பலம் மாணவர் நிதியம்
23. அமரர் சி.சிதம்பரநாதக் குருக்கள் மாணவர் நிதியம்
24. குபேரகணபதி மருத்துவ நிதியம்

மாதாந்தம் எமது உறுப்பினர்களின் பங்களிப்புடன் வழங்கப்படும் மாணவர்களுக்கான கொடுப்பனவு போன்ற நிதியங்கள் வழங்கப்படவுள்ளன.

2016 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாக சபைக்கான தெரிவு நடைபெறவுள்ளது மேற்படி கூட்டத்திற்கு மன்ற உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது கலந்து சிறப்பிக்குமாறு அன்பாக கேட்டுக் கொள்கின்றோம்

**22.01.2016**

செயலாளர்
**சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்.**

(சி.28768) (13.18)

**காணி விற்பனைக்கு** — தொடர்பு: 077 614 6434

யாழ்ப்பாணம். கச்சேரிக்கு அண்மையாக கச்சேரி நல்லூர் வீதியில் 1 ¼ பரப்புக் காணி விற்பனைக்குண்டு

**விற்பனைக்கு / வாடகைக்கு — 071 847 4325**

*TVS Heavy Duty XL மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு.

*யாழ்.நாவலர் வீதியில் கடையும், வீடும் தனித்தனியாக வாடகைக்கு விடப்படும்.

(67923)(11.18)

**மணமகள் தேவை — 076 725 4605**

யாழ்.1986 இல் பிறந்த தனியார் துறையில் உயர் பதவி வகிக்கும் மணமகனுக்குப் பெற்றோர் உத்தியோகத்தில் உள்ள தகுந்த மணமகளை எதிர்பார்க்கின்றனர்.

**அறை வாடகைக்குண்டு** — தொடர்பு: 077 880 8411

நல்லூர் கோயிலுக்கு அண்மையில் படிக்கும்/ வேலைபார்க்கும் 2 பெண்பிள்ளைகளுக்கு சகல வசதிகளுடனும் அறை வாடகைக்குண்டு.

**தேவை** — தொடர்பு: 077 837 3732

01. பொடி அடித்த பட்டா வாகனம் ஒப்பந்த அடிப்படையில் தேவை.
02. விற்பனைப் பிரதிநிதி தேவை.

**வான், ரக்டர் விற்பனைக்கு உண்டு** — தொடர்பு: 021 791 5871

சுப்பறேசி புதிய வகை உடைய வானும், 240ரகரக்டர் மெசின் பெட்டியுடன், உடனடி விற்பனைக்கு உண்டு.
(கொடிகாமம்)

(60712) (14,15)

**வீடு வாடகைக்கு தேவை**

யாழ்.மாநகர சபையை அண்டிய பகுதியில் நான்கு பேர் கொண்ட அங்கத்தவர்களுக்கு வீடு வாடகைக்குத் தேவை. முற்பணம் இரண்டு லட்சம் மாதாந்த வாடகை ஆறாயிரம் ரூபாவுக்குள் கொடுக்கப்படும்.

**077 498 8982, 077 994 4224**

**மணமக்கள் தேவை**

* 83இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 9 பாவமுடைய சுவிஸ் பிரஜா உரிமை பெற்ற டாக்டர் மணமகனுக்கு டாக்டர் டென்டல் மணமகள் தேவை. உள்நாட்டில் அல்லது சுவிஸில் விரும்பத்தக்கது.

*87இல் பிறந்த 8இல் சூரியன் செவ்வாய் 46½ பாவமுடைய லண்டன் பிரஜா உரிமை பெற்ற டாக்டர் மணமகனுக்குப் பட்டதாரி மணமகள் தேவை.

*87இல் பிறந்த 8இல் செவ்வாய் 27½ பாவமுடைய ஆஸ்திரேலியா பிரஜா உரிமை பெற்ற கணக்காளர் மணமகளுக்குப் பட்டதாரி மணமகன் தேவை.

தொடர்பு:
**கமலக்கண்ணன் திருமணசேவை**
இல.62, இராமலிங்கம் வீதி,
பூங்கனிச்சோலையடி, முடமாவடி.
**077 607 0862**

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை

## 1) வாகனம் ஒன்றை அழைப்பின் பெயரில் (on-call basis) வழங்கக் கூடியவர்களிடமிருந்து கேள்விப் பத்திரம் கோரல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அறிவியல்நகர் கிளிநொச்சியில் உள்ள பொறியியல் மற்றும் விவசாய பீடத்தின் பாவனைக்காக வான் ஒன்றை அழைப்பின் பெயரில் வழங்கக்கூடிய வாகன உரிமையாளர்களிடமிருந்து கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

- வெற்றி பெறும் மனுதாரர் எரிபொருளுடன் வாகனத்தை வழங்கும்படி வேண்டப்படுவார்.
- தூரக் கணிப்பீடுகள் யாவும் அறிவியல்நகர், கிளிநொச்சியை மையமாக வைத்தே கணிப்பிடப்படும்.
- கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த வாகன உரிமையாளர்களது வாகனம் விரும்பத்தக்கது.

## 2) பொறியியல் பீடத்துக்கான வாகனம் ஒன்றை வாடகைக்கு வழங்கக் கூடியவர்களிடமிருந்து கேள்விப் பத்திரம் கோரல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அறிவியல்நகர் கிளிநொச்சியில் உள்ள பொறியியல் பீடத்தின் பாவனைக்காக மாதாந்த கொடுப்பனவு அடிப்படையில் வான் ஒன்றை வாடகைக்கு வழங்கக்கூடிய வாகன உரிமையாளர்களிடமிருந்து கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

வெற்றி பெறும் மனுதாரர் எரிபொருளுடன் வாகனத்தை வழங்கும்படி வேண்டப்படுவார்.

மேற்படி வாகனங்களது முதற்பதிவு 2016 ம் ஆண்டில் இருந்து 05 வருடங்களுக்கு மேற்படாமலும், வாகனத்தின் உற்பத்திக்காலம் 2016 ம் ஆண்டில் இருந்து 07 வருடங்களுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். வாகனம் பூரண காப்புறுதி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

வாகன விபரம்

| வாகன வகை | எரிபொருள் வகை | எண்ணிக்கை |
|---|---|---|
| பயணிகள் வான்(van) (14அல்லது15ஆசனங்கள்) அல்லது அதற்கு மேல் | டீசல்(dual AC) | 01 |

மேற்படி வாகனங்களது விண்ணப்பப்படிவங்கள் மற்றும் விலைமனு ஆவணங்களையும் மற்றும் மேலதிக விபரங்களையும் தனித்தனியாக பூர்த்தி செய்து 29.01.2016 மதியம் 12.00 மணிவரை சிரேஸ்ட உதவிப் பதிவாளர்/நிர்வாகக்கிளை அலுவலக நாட்களில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 500/= இனை பல்கலைக்கழகக் காசாளர் கருமபீடத்தில் அல்லது மக்கள் வங்கியின் கணக்கிலக்கம் 162100160000880 இற்கு செலுத்திப் பெற்ற பற்றுச்சீட்டை சமர்ப்பிப்பதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம். முறையாகப் பூர்த்தி செய்யப்பட்டு அரக்கிடப்பட்ட ஆவணங்கள் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பொறியியல் பீடத்திற்கு வாகனம் ஒன்றை வாடகைக்கு வழங்குவதற்கு "வாகனம் ஒன்றை பொறியியல் பீடத்திற்கு வாடகைக்கு வழங்குவதற்கான கேள்வி" என அடையாளமிட்டும், வாகனம் ஒன்றை அழைப்பின் பெயரில் வழங்குவதற்கு "வாகனம் ஒன்றை அழைப்பின் பெயரில் வழங்குவதற்கான கேள்வி" என அடையாளமிட்டும், 08.02.2016 பி.ப.2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபாலில் தலைவர், கேள்விச்சபை, த.பெ. எண் 57, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பப்படவோ அல்லது பதிவாளர் அலுவலகத்தில் உள்ள கேள்விப் பெட்டியினுள் இடப்படவோ வேண்டும்.

மேற்படி வாகனங்களது கேள்வி விண்ணப்பங்கள் 08.02.2016 அன்று பி.ப.2.30 மணிக்கு திறக்கப்படும். அத்தருணம் மனுதாரர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவர் ஆவணங்கள் திறக்கப்படும் இடமான சபா மண்டபத்திற்கு சமுகமளிக்கலாம். கேள்விச்சபையின் முடிவே இறுதியானது.

**தலைவர்,**
**கேள்விச்சபை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.**
**22.01.2016**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்று கூடல் நிகழ்வு

கொழும்புத்துறை, ஜன.23
தேசிய தேசோதய சபையின் ஒன்று கூடல் நிகழ்வு கண்டி வீதி அரியாலையிலுள்ள சர்வோதய நிறுவன தலைமைக்காரியாலயத்தில் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்டத் தலைவர் லயன் நா.தனேந்திரன் தலைமையில் இடம் பெறும் இவ் ஒன்று கூடலில் சர்வோதயத்தின் யாழ். மாவட்ட இணைப்பாளர் குகேந்திரா கலந்து கொள்வார். இதன்போது எதிர்காலத் திட்டங்கள் தொடர்பான விளக்கங்களும், ஆய்வுகளும் நடைபெறவுள்ளமையால், அங்கத்தவர்கள் நலன் விரும்பிகள் இதில் இணைந்து பயன் பெறுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

(த-ஜ-135)

## பதவி வெற்றிடம்

- ரொட்டி தயாரிப்பாளர் (கொத்து)
- சிற்றுண்டி தயாரிப்பாளர் (றோல்ஸ், சமுசா மற்றும் ஏனையவை)
- உணவு தயாரிப்பாளர் Rice & Curry, Fried Rice
- இந்தியன் உணவு வகைகள் தயாரிப்பாளர் தோசை வகைகள், இட்லி, வடை
- காசாளர்
- சமையல் உதவியாளர்
- உணவு தயாரிப்பாளர்

**தர்மினி ஹொட்டேல்**
1037, K.K.S. வீதி, யாழ்ப்பாணம். T.P: 077 9872 808, 0770 782375

# தைப்பூச திருநாள்

வலி.வடக்கு, ஜன.23
மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி ஆலய இலட்சார்ச்சனைப் பூர்த்தியுடன் தைப்பூசத் திருநாள் நாளை ஞாயிற்றுக் கிழமை நடைபெறவுள்ளது.
நாளைய தினம் மாலை 6.15 மணி முதல் சண்முகப் பெருமான் திருமஞ்சத்தேரில் வெளி வீதியுலா வருவார்.

(த-ஜ-86)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 19.01.2016 அன்று நடைபெற்ற 31 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவில்*
**நுண்கலைமாணிப்**
*பட்டத்தைப் (BFA) பெற்ற எமது செல்வப்புதல்வி*
**செல்வி மகேஸ்வரன் கிருபாஹரியை**
*பாராட்டி வாழ்த்துகின்றோம்.*

வாழ்த்துவோர்:
மாமன்மார், மாமிமார், சித்தி, சித்தப்பா, சகோதர, சகோதரிகள் மற்றும் உறவினர்கள்.
பிரதேசசெயலக முன்ஒழுங்கை கோப்பாய் வடக்கு, கோப்பாய்.

# நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்

**தைப்பூச விழா - 24.01.2016 ஞாயிற்றுக்கிழமை**





நயினாதீவு
ஸ்ரீ நாகபூஷணி அம்மன்
கோயில்

இவ்வருடமும் வழமைபோல்
## "தைப்பூச விழா"
மிகவும் சிறப்பாக
நடைபெறவுள்ளது

முற்பகல் 10.30 மணிக்கு - 108 சங்காபிஷேகம்
நண்பகல் 12.00 மணிக்கு - உச்சிக்காலப்பூசை
பி.ப. 12.30 மணிக்கு - விசேட வசந்தமண்டபபூசை
பி.ப. 1.30 மணிக்கு - அம்பாள் அழகிய திருமஞ்சத்தில் வீதியுலா வருதல்

**அன்றையதினம்**

- ★ விசேட மங்கல வாத்தியம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது
- ★ விசேட பேருந்துப் போக்குவரத்துச் சேவையும் விசேட படகுச்சேவையும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.
- ★ அடியார்களுக்கு அன்னதானம் வழங்குவதற்கு நயினாதீவு அமுதசுரபி அன்னதான சபையால் ஏற்ற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- ★ தம்பையா தாகசாந்தி நிலையத்தாரால் ஆலய வளாகத்துள் தாகசாந்தி சேவையும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

பால், இளநீர், ஏனைய அபிஷேகப் பொருள்கள் கொண்டுவரும் அடியார்கள் முற்பகல் 11.00 மணிக்கு முன்னர் கோயிலுக்கு வருகை தரல் வேண்டும்.

தைப்பூச நன்னாளில் கோயிலுக்கு வருகை தந்து நாகபூஷணி அம்பாளின் பேரருளைப் பெற்றேகுமாறு அடியார்களை அன்போடு அழைக்கின்றோம்.

**அறங்காவலர் சபையினர்,**
(c.28722)
(13.18) **நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்.**

# அருள் மிகு இணுவில் கந்தசுவாமி கோயில்
# தைப்பூசதின உலகப் பெருமஞ்சத்திருவிழா
# புதிய நுழைவாயில் கோபுர கும்பாபிஷேகம்
# சிறப்புப் பொங்கல்
# 24.01.2016



- காலை 5.30 மணிக்கு பூஜை
- காலை 7.00 மணிக்கு 1008 சங்குகளாலும் 1008 பால் குடப் பவனியில் வரும் பால் குடஅபிஷேகமும் இடம்பெறும்.
- காலை 7.30- 8.30 மணிவரையுள்ள சுப முகூர்த்த வேளையில் இணுவில் சந்தியில் புதிதாக அமைக்கப் பெற்ற நுழைவாயில் கோபுர கும்பாபிஷேகம் இடம்பெறும்.
- முற்பகல் 10.00 மணிக்கு மாபெரும் 1008 பானைப் பொங்கல் நிகழ்வு ஆரம்பமாகி மாலை 4மணிக்கு நிறைவு செய்தல்வேண்டும். மதியம் விசேட பூஜை, பஜனை இடம் பெறும்.
- நண்பகல் 12 மணிக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்வு நடைபெறும்.
- தொலைவில் இருந்து வந்து பொங்கல் செய்ய விரும்புபவர்களின் வசதிகருதி பொங்கலுக்குரிய அனைத்துப்பொருள்களையும் ஆலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
- இரவு 7.00 மணிக்கு உலகப் பெருமஞ்சத்தில் முருகப்பெருமான் வீதிவலம் வரும் அருட்காட்சி இடம்பெறும்.

ஓம் TV யில் நேரடி ஒளிபரப்பு இடம்பெறும்.

**இலங்கையில் புகழ்பூத்த பல பாடகர்கள் சங்கமிக்கும் மாபெரும் இன்னிசை கானங்கள் இடம்பெறும்**

ஆலய தர்மகர்த்தா சபை

**விளம்பர அனுசரணையாளர்கள்**

**குமரன் கட்டடப் பொருள்கள்**
விற்பனையாளர்கள் கல், மணல், சீமெந்து, கம்பி, பெயின்ற் வகைகளை பெற்றிட
கந்தசுவாமி கோயிலடி, இணுவில்.
தொ.பே. 077 400 2263, 077 175 4667

**லது டிஜிற்றல் வீடியோ & போட்டோ**
LATHU DIGITAL VIDEO & PHOTO
கே.கே.எஸ்.வீதி, இணுவில்.
K.K.S.ROAD, INUVIL
Professional Video Filming & Video Coverage, Digital Photo Graphing, DVD Conversion, Diary Album Making.
E.Mail:lathushan@gmail.com,Web:www.lathudigital.com

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



மலர்வு 08.12.1957

உதிர்வு 25.12.2015

### அமரர் சுந்தரலிங்கம் வற்சலாதேவி

(திதி : 24.01.2016)

கடந்த 25.12.2015 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி அமரர் சுந்தரலிங்கம் வற்சலாதேவி அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (24.01.2016) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5.30 மணியளவில் தெணியம்மன் அந்தியேட்டி மடத்தில் நடைபெறும். அந்நிகழ்விலும் தொடர்ந்து நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடை பெறும் சபிண்டீகரண நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரையும் அழைக்கின்றோம்.

நிரந்தரமுகவரி:
சுப்பர் மடம், பருத்தித்துறை.
தொலைபேசி :
077 048 0516, 077 886 0462

தகவல் : குடும்பத்தினர்.
தற்காலிக முகவரி:
அல்வோல்லைவீதி,
புலோலி மத்தி, பருத்தித்துறை.


## பொதுக்கூட்டமும் வைத்திய சேவையும்

யாழ்ப்பாணம்,ஜன.23

கோப்பாய் வடக்கு முதியோர் சங்கத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டமும், இலவச ஆயுள்வேத வைத்திய சேவைகளும் இன்று சனிக்கிழமை காலை 8 மணிக்கு சங்க மண்டபத்தில் நடைபெறும் என சங்கச் செயலாளர் ந.கனகலிங்கம் தெரிவித்துள்ளார். (த-ஜ)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர் செல்வி
சின்னத்துரை
திலகவதி

மலர்வு 16.08.1954

உதிர்வு 25.12.2015

கடந்த 25.12.2015 வெள்ளிக்கிழமை இறைபத மடைந்த எமது பாசமிகு சகோதரி திலகவதி யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த போது சகல வழிகளிலும் சேவையாற்றி உதவிய அனைத்து வைத்தியர்கள் ஆண், பெண், தாதியர்கள், சிற்றூழியர்கள் அனைவருக்கும்,மரணச் செய்தி கேட்டு நேரில் வந்தும், தொலைபேசி மூலமும், துண்டுப்பிரசுரம் வெளியிட்டும், சரீர உதவிகள், பிற உதவிகள் புரிந்த அனைத்துள்ளங்களுக்கும், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது இதயம் கனிந்த நன்றியை மீண்டுமொருமுறை தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை(24.01.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை அனைவரும் தயவு கூர்ந்து தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளும் வண்ணம் அன்பாக வேண்டுகின்றோம்

A-9 வீதி, விஸ்ணுமகால்,
வண்ணாங்கேணி, பளை.

(67897)(1.18)

குடும்பத்தினர்.


## மெய்வன்மை போட்டிகள்

கரணவாய்,ஜன.23

உடுப்பிட்டி அ.மி.கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது. கல்லூரி அதிபர் சு.கிருஸ்ணகுமார் தலைமையில் இடம் பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கொழும்பு போதனா வைத்தியசாலை விபத்துக்கள் சேவைப் பிரிவு மருத்துவ அதிகாரி வைத்தியர் அ.துஸ்யந்தன் கலந்து கொள்வார். (த-ஜ-108)


## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 25.12.2015
வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்த எங்கள் குடும்ப விளக்கு

அமரர் திருமதி
சபாபதிப்பிள்ளை
பாக்கியம்

தோற்றம் 07.07.1937

மறைவு 25.12.2015

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் .இன்று (23.01.2016) சனிக்கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (24.01.2016) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின்ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சஜூம் யூனிற். (29)
வாரிக்குட்டியூர். வவுனியா.

திரு திருமதி
இராஜேந்திரன் குடும்பம்.

077 331 4107, 077 974 4295


## கழிவு ஒயில் பாதிப்புக் குறித்து கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜன. 23

சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பின் ஏற்பாட்டில் சுன்னாகம் கழிவு ஒயில் கலப்பால் பாதிப்படைந்த தண்ணீரைக் குடிக்க முடியுமா என்பது தொடர்பான கருத்தரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சுன்னாகம் தெற்கு சனசமூக நிலையத்தின், முத்தமிழ் மன்ற மண்டபத்தில் நடைபெறவுள்ளது. சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பின் இணைச் செயலாளர் ச.தனுஜனின் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கருத்தரங்கின் பிரதான கருத்துரைகளை வைத்தியகலாநிதி முரளி வல்லிபுரநாதன், பொறியியலாளர் ம. சூரியசேகரம், சட்டத்தரணி சோ. தேவராஜா ஆகியோர் ஆற்றவுள்ளனர். குறிப்புரைகளை இ.திருநாவுக்கரசு, திருமதி ச.சிவாஜினி, ப. சசி குமார், சி.கா.செந்திவேல் ஆகியோர் ஆற்றவுள்ளனர். (த-ஜ-ரி5)


## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலியும் 25 ஆவது பிறந்தநாளும்



அமரர் தங்கராசா
சுரேந்தினி

அன்னை மடியில்
16.05.1991

ஆண்டவன் அடியில்
19.01.2012

அன்னை மடிதவழ்ந்த
அன்பு மகளே!
உன்னை அள்ளியணைத்த நாள்
கண்முன்னே விரிகிறது!
கனவுகளைப் பொய்யாக்கி
நினைவுகளை நிழலாக்கி
ஆண்டுகள் ஐந்தை
கண்ணீரில் கரைத்தவளே!
என்றும் உன் நினைவில்
தவிக்கிறது உள்ளம்!

ஆத்மசாந்திக்காய்
இறைவனைப் பிரார்த்திப்போம்
நிதம் நிதம்!

தங்கராசா குடும்பத்தினர்.
சுதன், தச்சுத் தொழிலகம்,
விக்னேஸ்வரா வீதி
சங்கானை.
தொ.பே. 077 659 4625



## எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 25.05.1937

மறைவு 22.01.2008

அமரர்
### சின்னையா குணரட்ணம்
(லக்கி கிறீம் ஹவுஸ் உரிமையாளர்)

ஆறாது எம் துயரம்....
ஆண்டுகள் எட்டு சென்றாலும்,
மாறாது எம் மனதில்
மதிப்பான உமது உருவம்
நீறாகிப் போனதென்று
நினைக்க மனம் இல்லையய்யா
யாம் நினைத்திருப்போம் எந்நாளும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

செல்வசந்நிதி வாசா,
சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேப்பமரக் குற்றிகளை கடத்தியவர் கைதானார்

யாழ்ப்பாணம்,ஜன.23
கல்வியங்காடுப் பகுதியில் இருந்து உரும்பிராய்க்கு, சிறியரக மோட்டார் வாகனத்தில்



வேப்ப மரக் குற்றிகளைக் கடத்திய ஒருவரை நேற்று கைது செய்துள்ளதாகக் கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

இராசவீதி, கோண்டாவில் பகுதியில் இரவு வீதி ரோந்துக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் குறித்த சிறிய வாகனத்தை மறித்துச் சோதனையிட்டனர். இதன்போது அனுமதிப்பத்திரம் இன்றி வேப்பமரக்குற்றி களைக் கடத்தி வந்தமை தெரியவந்துள்ளது.

வாகனத்தையும் சான்றுப் பொருளையும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துள்ள பொலிஸார், சந்தேக நபரை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். (த-ஐ-107)

# யாழ்ப்பாண ஆசிரியர்களினால் மடு வலயம் கல்வியில் உயர்வு

## அமைச்சர் ரிசாத் பதியுதீன் தெரிவிப்பு

மன்னார்,ஜன.23
யாழ்ப்பாணத்து ஆசிரியர்கள் வருகைதந்துகற்பித்ததாலேயே மன்னார்மடுவலயம்கல்வியில் வளர்ச்சி அடைந்தது. அது போன்று ஏனைய பகுதிகளுக்கும் தரமான ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டும் என அமைச்சர் ரிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

கடந்த செவ்வாய்கிழமை மன்னார் மாவட்ட செயலகத்தில் இடம் பெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தின் இணைத் தலைவராகக் கலந்து கொண்டு கல்வி தொடர்பாகக் கருத்து வெளியி டும் போதே அவர் இவ்வாறு தெரி வித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்டத்தில் மீள் குடியேறிய பகுதிகளில் மாணவர்களுடைய கல்வி வளர்ச்சி மிகவும் மோசமாகக் காணப்படுகின்றது. காரணம் தகுதியான ஆசிரியர்கள் இல்லை என்பதே.

இவ்வாறான நிலையிலேயே மாணவர்களுடைய கல்வி வீழ்ச்சி கண்டுள்ளது. எனவே அப்படிப்பட்ட பிரதேசங்களில் கல்வியை வளர்ச்சி அடைய செய்வதற்குப் புதிதாக சிறந்த ஆசிரியர்களை உள்வாங்க வேண்டும்.

மன்னாரில் மடு வலயமும் இதே நிலையில்தான் இருந்தது. பின்னர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிறந்த ஆசிரியர்கள் வந்ததால் தான் மடு கல்வி வளர்ச்சி அடைந்தது. அதே போன்று ஏனைய பிரதேசங்களிலும் சிறந்த ஆசிரியர்களை நியமிக்கவேண்டும். அந்தப் பகுதி ஆசிரியர்கள் என்று இல்லாமல் கணிதம், விஞ்ஞானம் போன்ற பாடங்களுக்கு விசேட ஆசிரியர்களை நியமிக்கவேண்டும்- என்றார். (த-ஐ-21)

# விவசாயத் திணைக்களத்தால் அபிவிருத்தி முன்னெடுப்பு

வரணி,ஜன.23
யாழ்.மாவட்டத்தில் விவசாயத் திணைக்களம் 3 ஆண்டுகளுக்கான அபிவிருத்தித் திட்டங்களை நடை முறைப்படுத்தவுள்ளது.

இதன் பிரகாரம் 2016 ஆம் ஆண்டுக்கு உரிய திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டிய நடவடிக்கையில் திணைக்களம் ஈடுபட்டுள்ளது.

ஜனாதிபதியின் வழிகாட்டலின் கீழ் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. குறித்த திட்டமானது பயிர்ச்செய்கைத் திட்டங்களுக்காகப் பயன்படுத்தி அதி கூடிய விளைச்சலைப்பெறுவதன் மூலம் உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடை வதாகும்.

இந்தத் திட்டங்கள் யாழ்.மாவட்டத்தின் சகல பிரதேச செயலர் பிரிவுகளிலும் உள்வாங்கப்பட்டு, பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு உரிய ஊக்குவிப்புக்கள் காலகட்டத்தில் வழங்கப்படவுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

நெற்செய்கையில் உற்பத்தித் திறனை அதிகரித்தல், விதை நெல் உற்பத்தியை மேம் படுத்தல், சோளச் செய்கையை ஊக்குவித்தல், இஞ்சி, மஞ்சள், முருங்கைச் செய்கையை ஊக்குவித்தல், உளுந்து, பயறு, எள்ளுச்செய்கையை ஊக்குவித்தல் மற்றும் விவசாயக் கிணறுகளைப் புனரமைத்தல், உள்ளிட்ட 30 வகையான திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. (த-ஐ-122)



கச்சாய் அ.த.க.பாடசாலையின் பொங்கல் விழாவும் சரஸ்வதி சிலை திறப்பு விழாவும் அண்மையில் இடம்பெற்றது. பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் கலந்து கொண்டுசரஸ்வதி சிலையை நாடா வெட்டித் திறந்து வைத்தார். (த-ஐ-9)

# விபத்துக்களில் 8 பேர் காயம்

தென்மராட்சிப் பிரதேசத்தில் கடந்த இரு தினங்களில் இடம் பெற்ற வீதி விபத்துக்களில் மூன்று பெண்கள் உட்பட எட்டுப் பேர் காயமடைந்துள்ளனர். காயமடைந்த அனைவரும் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் பிற்பகலில் மட்டுவிலைச் சேர்ந்தவர் கொடிகாமம் சென்ற வேளையில் கனகன்புளியடி மீசாலை வீதியில் மோட்டார் சைக்கிளுடன் வீழ்ந்த நிலையில் காணப்பட்டு பொதுமக்களால் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். மீசாலை ஏ-9 வீதியில் சைக்கிளில் சென்ற ஓய்வு நிலை கூட்டுறவுச் சங்கக் கிளை முகாமையாளர் வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் தூக்கி வீசப்பட்டு இருவரும் காயமடைந் தனர்.

எழுதுமட்டுவாழ் ஆசைப் பிள்ளை ஏற்றப் பகுதியில் முன்னால் சென்ற மோட்டார் சைக்கிள் திரும்புவதற்கான சமிக்ஞை செய்யாமல் ஏ- 9 வீதியிலிருந்து உள் வீதிக்கு திரும்பிய போது பின்தொடர்ந்து சென்ற மற்றொரு மோட்டார் சைக்கிள் மோதியதில் 6 வயது சிறுமி உட்பட மூன்று பெண்களும் காயமடைந்தனர். (த-ஐ-9)

# திறந்த பல்கலை செயற்பாடு இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், ஜன. 23
இலங்கைத் திறந்த பல்கலைக் கழகத்தின் பணிகள் தவிர்க்க முடியாத காரணத்தால் இன்று சனிக்கிழமை தொடக்கம் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக யாழ்.பிராந்திய உதவிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழகத்தின் யாழ். பிராந்திய நிலையம், கிளிநொச்சி கற்கை நிலையம், முல்லைத்தீவு கற்கை நிலையத்தின் சகல பரீட்சைகள், நாள் பாடசாலைகள் மற்றும் இதர கல்வி சார் நடவடிக்கைகள் அனைத்தும் தவிர்க்க முடியாத காரணத்தால் இடைநிறுத்தப்பட்டுள்ளன. புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த-4)

# வடக்கு மாகாண முழுநிலா நிகழ்வு

வவுனியா,ஜன.23
வடக்கு கல்வித் திணைக்களம் நடத்தும் வடமாகாண முழுநிலா நிகழ்வு வவுனியா றம்பைக் குளம் மகளிர் மகா வித்தியாலயத்தில் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாணகல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், சிறப்பு விருந்தினராக வடமாகாணகல்விஅமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரன் ஆகியோரும் கலந்து கொள்வர். (த-ஐ-422)

# வழக்குகளில் சட்டத்தரணிகள் முன்னிலையாவது அவசியம்

யாழ்ப்பாணம், ஜன. 23
குற்றம் புரிபவர்கள் குற் றத்தை ஏற்றுக்கொள்ள மட்டுமல்ல எந்தவொரு குற்ற வியல் வழக்குகளிலும் சந் தேகநபர் ஒருவர் சட்டத்தரணி இன்றி நீதிமன்றில் தோன்றச் சட்டம் உரிமை வழங்கியுள்ளது. ஆனால் நீதிமன்ற வழக்குகளில் சம்பந்தப்பட்ட பொதுமக்கள் தங்களது உரிமையை எவ்வாறு பயன்படுத்துகிறார்கள் என்பதே முக்கியமான விடயமென்பதால் வழக்குகளில் சட்டத்தரணிகள் முன்னிலையாவது அவசியம்.

இவ்வாறு சட்டத்தரணிகள் சார்பாகத் தரப்பட்டுள்ள விளக்க அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மல்லாகம் நீதிமன்றில் வழக்குகளுக்கு வருவோர் சட்டத்தரணிகளுடன் முன்னிலையாகவேண்டும் என்று கூறப்பட்ட விடயம் உதயனில் செய்தியாகியிருந்தது. அதில், உதாரணமாக வரி அனுமதிப் பத்திரம் இன்றிப்பயணம்செய்யும்போது வழக்குப் பதிவு செய்யப்பட்டால் சட்டத்தரணிகள் இன்றி நீதிமன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டு அபராதப் பணத்தைச் செலுத்திவிட்டுச் செல்லலாம் என்ற சாராம்சமாகச் செய்தி வெளி யாகியிருந்தது.

அந்தச் செய்தி தொடர்பில் சட்டத்தரணிகளால் தரப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

குற்றவியல் வழக்குகளைப் பொறுத்தவரையில் தண்டனைச் சட்டக்கோவையிலோ அல்லது வேறு விசேட சட்டங்களிலோ அவற்றில் உள்ளடக்கப்பட்டுள்ள குற்றங்களுக்குக் குறிப்பிட்ட ஒரு தண்டனையை மட்டும் அச்சட்டங்கள் வரையறுத்திருக்கவில்லை. பொதுவாக நீதிபதிகளின் தற்துணிவின் அடிப்படையில் தண்டனைத் தீர்ப்பு வழங்கக்கூடியவாறே தண்டனைகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

சமூக ஆர்வலர்கள் கூறுவது போல் சந்தேக நபர் ஒருவர் மன்றில் சட்டத்தரணி இல்லாமல் தோன்றி குற்றவாளி என வாதுரைத்துவிட்டு அமைதியாக இருக்கும் சந்தர்ப்பத்தில் வழக்குத்தொடுநர் தரப்பில் சொல்லப்படும் கருத் துக்களை மாத்திரம் வைத்து தண்டனைத் தீர்ப்பை வழங்கவேண்டிய தேவை நீதிபதிகளுக்கு ஏற்படுகின்றது.

சில சந்தர்ப்பங்களில் குற்றவாளி என வாதுரைத்துவிட்டு அமைதியாக இருக்கும் சந்தேகநபர்களுக்கு வழக்குத் தொடுநர்தரப்பில்சொல்லப்பட்ட கருத்துக்களை மட்டும் கேட்டு சட்டத்தில் வரையறுக்கப்பட்ட ஆகக்கூடிய தண்டனையை வழங்க வேண்டிய நிலைக்கு நீதிபதிகள் உள்ளாக்கப்படுகின்றனர். இது சாதாரண மக்களுக்கு ஒரு பாதகமான நிலையையே ஏற்படுத்துகின்றது.

ஒருவர் கைது செய்யப்பட்டால் எந்தத் தவணையில் அவருக்கு எதிரான குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படும் என்பதை உறுதியாகக் கூற முடியாது. சந்தேகநபர் ஒருவர் சட்டத்தரணி இல்லாமல் வழக்கொன்றில் தோன்றும் சந்தர்ப்பத்தில் அவருக்கு எதிரான குற்றப் பத்திரிகை வழக்குத்தொடுநர் தரப்பினால் தாக்கல் செய்யப்படும் போது சந்தேகநபரானவர், அதில் குறிப்பிடப்பட்ட சட்ட பிரிவுகளையும் அதன் பாரதூரங்களையும் விளங்கிக் கொள்ள முடியாத நிலையில் காணப் படலாம்.

பாவனையாளர் அதிகாரசபையினால் தொடரப்படும் வழக்குகள், இலங்கை மின்சார சபையினால் தொடரப்படும் வழக்குகளிலும் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தொடர்பில் ஏதாவதொரு விண்ணப்பம் செய்யப்படவேண்டும். அவர்கள் கடுமையான தண்டப் பணத்துக்கு உள்ளாகக் கூடாது என்ற நோக்கிலேயே சில நீதிபதிகள் சட்டத்தரணிகளுடன் தோன்றுவதை அவசியப்படுத்துகின்றனர்.

குற்றச்சாட்டுக்கு உள்ளாக்கப்படும் நபர்கள் நியாயமான காரணம் இல்லாமல் தண்டிக்கப்படக்கூடாது, பாதகமான விளைவுகளை எதிர்கொள்ளக்கூடாது என்பதற்காகவே நீதிபதிகள் சட்டத்தரணிகளுடன் தோன்றுவதை அவசியப்படுத்துகின்றார்கள். அதை சந்தேக நபர்கள் மறுக்குமிடத்து சந்தேக நபர்கள் சட்டத்தரணிகள் இல்லாமலேயே வழக்கு நடத்த அனுமதிக்கப்படுகின்றார்கள். ஆனால் அவ்வாறான சந்தர்ப்பத்தில் பாதிக்கப்படுவது சாதாரண பொதுமக்களே என்பதை சமூக ஆர்வலர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 98 வீதமானவர்களுக்கு மன்னாரில் மின்சாரம்

## 27 ஆயிரத்து 638 குடும்பங்களுக்கு கடந்த வருடத்தில் மின்னிணைப்பு

மன்னார்,ஜன.23

மன்னார் மாவட்டத்தில் 27 ஆயிரத்து 638 குடும்பங்களுக்கு கடந்த வருடம் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளதாகவும், இது, 98 வீதமான மக்கள் குறித்த மின் சாரத்தைப் பெற்றுக்கொண்டுள் ளமையைக் காட்டுவதாகவும் மின்ன சார சபையினர் தெரிவித்துள்ளனர்.

போரின் பின்னர் கடந்த 2009 ஆம் ஆண்டு மன்னார் மாவட்டத்தில் 37 வீதமாகக் காணப்பட்ட மின்சாரம் பெற்றுக் கொண்ட குடும்பங்களின் தொகை, கடந்த ஆறு வருடங்களின் பின்னர் 2015ஆம் ஆண்டு 98 வீதமாகக் காணப்படுகின்றது.

இதற்கமைவாக மன்னார் மாவட் டத்தில்2015ஆம்ஆண்டு27ஆயிரத்து 638 குடும்பங்கள் மின்சாரத்தைப் பெற்றுகொண்ட குடும்பங்களாகக் காணப்படுகின்றன. இது மின்வழங்க லின் 98 வீதமாகும் என மின்சார சபை யினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருந்தபோதும் மன்னர் மாவட் டத்தில் பல பகுதிகளுக்கு இன்னும் மின்சாரம் வழங்கப்பட்டவில்லை எனவும், அந்தப் பகுதிகளுக்கும் விரைவில் மின் விநியோகத்தை மேற்கொள்ளுமாறும் மாவட்ட இணைத் தலைவர்களால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (கு-ஜ-21)



## போரினால் பாதிப்புற்றோருக்கு வவுனியாவில் நடமாடும் சேவை

வவுனியா, ஜன 23

போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நட்டஈடுகளை வழங்கும் நோக்குடனான நடமாடும் சேவை ஒன்று நேற்று முன் தினம் புனர் வாழ்வு அதிகார சபையால் வவுனியா மாவட்ட செய லகத்தில் நடத்தப்பட்டது.

போரில்உயிரிழப்புக்களை எதிர்நோக்கிய குடும்பங் கள், அவயவங்களை இழந் தோர், வீடுகள், சொத் தழிவு, வழிபாட்டுத் தலங் களின் அழிவு என்பவற் றுக்கான நட்டஈடுகள் பெறுவதற்குப் பாதிக்கப் பட்ட மக்கள் ஏற்கனவே குறித்த அமைச்சிடம் விண் ணப்பித்த நிலையில் அவர்களுடையஆவணங் களைத் திரட்டும் முகமா கவே குறித்த நடமாடும் சேவை நடைபெற்றுள் ளது.

இந்தநடமாடும்சேவையில் நேற்று முன்தினம் 500 பேர் வரையிலானோர் கலந்துகொண்டு அழி வடைந்ததற்குரிய தங்களு டைய ஆவணங்களை உரிய அதிகாரிகளிடம் கையளித்துள்ளனர்.

இவ்வாறு போரினால் பாதிக் கப்பட்டுஆவணங்களைக் கையளித்தமக்களுக்கான நட்டஈடுகள் எதிர்வரும் ஏப்ரல் மாதத்துக்கு முன் னர் வழங்கப்படவுள்ள தாகப்புனர்வாழ்வு அமைச் சினால்தெரிவிக்கப்பட்டுள் ளது. (கு-21)



## 1000 பேருக்கு கண்சிகிச்சை

யாழ்ப்பாணம், ஜன.23

லங்கா ஒ.ஐ.சி. நிறுவனத்தின் அனுசரணையில் நாடளுமன்ற உறுப்பினர் கே.காதர் மஸ்தானின் ஏற்பாட்டில்இலவசகண்சிகிச்சையும், மூக்குக் கண்ணாடி வழங்கும் நிகழ்வும் நேற்றுக் காலை மன்னார் வீதி வவுனியா குருமன்காடு எஸ்.கே.கே அரிசி ஆலையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் ஆயிரம் பேருக்கு இலவச மூக்குக் கண்ணாடிகளும், கண்சிகிச்சையும் வழங்கப்பட்டன.

ஹேல்ப் ஏஜ் ஸ்ரீலங்கா நடமாடும் சேவை கண்வைத்தியப் பிரிவினர் வருகை தந்து கண்பரிசோதனை களை மேற்கொண்டனர்.

வவுனியாவில் ஒரே நாளில் அதி களவான மக்களுக்கு இலவச கண்சிகிச்சையும் இலவச மூக்குக் கண்ணாடியும் வழங்கிய சந்தர்ப்பம் இதுவே முதல் தடவை என்பது குறிப் பிடத்தக்கது. (கு-ஜ-402)

## பச்சிலைப்பள்ளியில் நடமாடும் சேவை

பளை,ஜன.23

ஓபர் அனுசரனையில் பதிவாளர் நாயகம் திணைக்களமும், பச்சி லைப் பள்ளி பிரதேச செயலகமும் இணைந்து நடத்தும் நடமாடும் சேவை எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதலாம் திகதி இடம்பெற உள்ள தாகவும், பிரதேச செயலகத்துக் குட்பட்ட பொது மக்கள் கலந்து கொண்டு பயன் பெறுமாறும் பச் சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார்.

குறித்த நடமாடும் சேவை பச் சிலைப்பள்ளி பிரதேச செயலகத் தின் மாநாட்டு மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. தொலைந்த பிறப்பு, இறப்பு, விவாக சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்வதோடு இதுவரை பதியப்படாத பிறப்பு, இறப்பு, மற்றும் விவாகபதிவுகளையும்மேற்கொள்ள லாம் எனவும், அன்றையதினம் நடைபெறும் நடமாடும் சேவையில் தேசிய அடையாள அட்டை மற்றும் முதியோர் அடையாள அட்டை பெற்றுக்கொள்வது தொடர்பான நடவடிக்கைகளும் இடம்பெற உள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (கு-ஜ-21)

## மன்னார் மாவட்ட அபிவிருத்திக்கு நெல்சிப் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு

மாங்குளம்,ஜன.23

மன்னார் மாவட்ட நானாட் டான் பிரதேச சபைக்குட் பட்ட பிரதேசத்தில் வடக்கு மாகாண சபையால் நெல் சிப் திட்டத்தின் கீழ் 70 லட் சத்து 40ஆயிரம்ரூபாசெல வில் மூன்று புனர மைப்பு வேலைகள் அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படவுள் என. அச்சங்குளம்வீதிதாரிட்டுப் புனரமைப்பதற்காக 30 லட்சத்து 25 ஆயிரம் ரூபா வும், வங்காள க்கிராமத்து வடி கால் அமைப்பு, புனர மைப்பு செய்வதற்காக 20 லட்சத்து 90 ஆயிரம் ரூபா வும், முருங்கன் கிராமத்தி லுள்ள விளையாட்டு மைதானம் புனரமைப்ப தற்காக 10 லட்சத்து 25 ஆயிரம் ரூபாவும் ஒதுக் கீடு செய்யப்பட்டுள்ளது. (கு-ஜ-422)

## பாலம் அமைக்க மக்கள் கோரிக்கை

வவுனியா,ஜன.23

வவுனியா பூந்தோட்டம் பகுதியில் உள்ள குளக்கட்டை அண்மித்த பகுதியில் உள்ள வீதியில் பால மொன்றை அமைக்குமாறு பொது மக்கள் வேண்டுகோள் விடுத் துள்ளனர்

வவுனியாக் குளத்தின் ஒருபகுதி பூந் தோட்ட வீதியை அண்மித்துக்காணப் படுகிறது. இந்த வீதியை மகாரம் பைக்குளம், காத்தார்சின்னக்குளம், பூந்தோட்டம், அண்ணாநகர், மதி னாநகர், ஸ்ரீராமபுரம், கருப்பனிச் சங்குளம் ஆகிய பிரதேசங்களின் மக்கள் அன்றாடம் பயன்படுத்தி வருகின்றனர்.

மழைகாலத்தில் வவுனியாக்குளத்து நீர் நிரம்பி பாதையை மேவிப்பாய் வதால்பாதையூடாகமக்கள்பயணிக்க முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது.

இதேவேளை, இந்த வீதி பள்ளமாக வுள்ளது. இது குறித்து அரச அதிகாரி களிடம் வருடா வருடம் மழை வரு கின்றபோதுபாலமொன்றைஅமைக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்தனர். எனினும் நட வடிக்கை கள் எதுவும் மேற்கொள்ளப் படாத நிலையில்மீளவும்மக்கள்கோரிக்கை விடுத்துள்ளனர். (கு-ஜ-402)

# பண்டிவெட்டியில் கல் அகழ்வு பெரும் குழிகளால் பேராபத்து

முல்லைத்தீவு,ஜன.23

துணுக்காய்பிரதேசசெயலாளர் பிரிவில் உள்ள பண்டிவெட்டிப் பகுதியில்சட்டத்துக்குமுரணான வகையில் இடம்பெற்ற கல் அகழ்வால் காணப்படும் பெரிய அழிவை ஏற்படுத்தும் குழிகளை மூடுவதற்கு இந்த இடங்களில் கல் தோண்ட அனுமதித்த நிறுவனங்கள் உடன் நடவடிக்கை மேற் கொள்ளவேண்டும் என பிரதேச மக்கள் கோரிக்கை விடுத் துள்ளனர்.

துணுக்காய் பகுதியில் உள்ள பண்டிவெட்டிப் பகுதியில் சட் டத்துக்கு முரனான வகையில் சுமார் 50 அடி, 60 அடி ஆழத்துக்குக் குடைந்து கல் அகழ்வுகளை மேற்கொண் டோர், குறித்த அனுமதியைப் பெற்ற சமயம் அரச நிறுவனங் களுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்கள் எவற்றையும் சட்டப்படி நிறைவேற்றாது தமது வருமானத்தை ஈட்டிச் சென் றுள்ளனர்.

குறிப்பாக அனுமதிக்கப்பட்ட 30 அடியை விட அதிகமாக தோண் டியதன் காரணத்தால் காணப் படும் பெரிய அழிவை ஏற் படுத்தும் குழிகளை மூடுவதற்கு இந்த இடங்களில் கல் தோண்ட அனுமதித்த நிறுவனங்களான புவிச் சரிதவியல் திணைக் களமோ , அல்லது கனியவள அமைச்சோ அன்றி சுற்றுச் சூழல்அதிகார சபையினரோ எந்த விதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை.

இவ்வாறு நடவடிக்கை எடுக்கும் அதிகாரமும் குறித்த நிறுவனங் களுக்கு மட்டுமே உள்ள தாகவும் சுட்டிக்காட்டப்பட் டுள்ளது.

இதேவேளை, குறித்த பகுதியில் கல் தோண்டப்பட்ட இடம் பெரிய நீர்த் தேக்கம் போல் காணப்படு கின்றது. இதனால் வரும் கோடை காலத்தில் நீர் நிலைகளை நாடும் கால்நடைகள் அழிவைச் சந்திக்க நேரிடும் எனவும் அச் சம் வெளியிடப்படுகின்றது.

தோன்டுவதற்கான அனுமதி யைக் குடாநாட்டைச் சேர்ந்த அரசியல்வாதி எனத் தன்னை தானே கூறும் ஒருவரே பெற்றி ருந்ததுடன்பெரும்பான்மை இனத் தவர் ஒருவர் குறித்த தொழிலை யும் மேற் கொண்டிருந்தார்.

இவ்வாறு சட்டவிரோதமான முறை யில் சூழலுக்கு [illegible] ஏற்படுத் தும் வகையில் தொழில் இடம் பெற்ற சமயம் வடக்கு மாகாண முதலமைச்சரின் கவனத்துக் கும் இது விடயம் கொண்டு செல்லப்பட்டது. இதன் பிரகாரம் முதலமைச்சர் நேரில் வருகை தந்து பார்வை யிட்டபோதும் ஆக்கபூர்வமான நடவடிக்கை கள் எவையும் மேற் கொள்ளப் படவில்லை.

எனவே குறித்த குழியானது காணப்படும் பிரதேசத்தை அண்டிய பகுதிகள் கால்நடை கள் அதிகம் நடமாட்டம் கொண்ட ஒரு பிரதேசம் என்பதோடு குடி யிருப்புகளுக்கும் அண்மித்த பகுதி என்பதால் இந்தக் குழி களினால் பெரிய அசம்பாவிதம் ஏதும் நிகழ முன்பு, அதிகாரிகள் உடன் நடவடிக்கை மேற் கொள்ள வேண்டும் எனவும் கோரியுள்ளனர். (கு-ஜ-101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழிவுப்பொருள்கள் கொட்டுவோர் மீது சட்ட நடவடிக்கை

## சுற்றுச்சூழல் பாதுகாப்புப் பொலிஸார் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன. 23
யாழ்.நகரிலுள்ள வர்த்தக நிலையங்களுக்கு முன்பாகப் பொலித்தீன் மற்றும் கழிவுப் பொருள்களைக் கொட்டுவோர் மீது உரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

சுற்றுச்சூழல் பாதுகாப்புப் பிரிவுப் பொலிஸார் கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு நகரில் கழிவுகள் கொட்டப்படுவதை கண்காணித்துத் தடுக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன்போது கழிவுப் பொலித்தீன்களை வர்த்தக நிலையத்துக்கு முன்பாகக் கொட்டிய வர்த்தகர் ஒருவர் கையும் மெய்யுமாகப் பொலிஸாரிடம் சிக்கினார். இவருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கையைப் பொலிஸார் மேற்கொள்ளவுள்ளனர்.

> யாழ். மாநகராட்சி மன்றத்தின் ஏற்பாட்டில் நகரைக் கழிவுப் பொருள்கள் இன்றிச் சுத்த மாக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

யாழ். மாநகராட்சி மன்றத்தின் ஏற்பாட்டில் நகரைக் கழிவுப் பொருள்கள் இன்றிச் சுத்தமாக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. தேவையற்ற விதத்தில் கழிவுப்பொருள்களைக் கொட்ட வேண்டாம் எனவும், இதற்கென ஒதுக்கப்படும் இடங்களில் அவற்றை சேகரிக்குமாறும் மாநகராட்சி மன்றம் தெரிவித்துள்ளது.

தினமும் நகரில் உள்ள உணவகங்கள் மற்றும் வர்த்தக நிலையங்களில் சேகரிக்கப்படும் சாப்பாட்டுக் கழிவுகள் மற்றும் இதர கழிவுப் பொருள்களை அகற்றுவதற்கு மேலதிகமான இரண்டுவாகனங்கள் சேவைக்கு விடப்பட்டுள்ளன. (த-ஐ-17)

## சிமெந்து வழங்கும் பயனாளிகள் எண்ணிக்கை மூன்று மடங்கானது

யாழ்ப்பாணம்,ஜன.23
தேசிய வீடமைப்பு அதிகார சபை இந்த வருடம் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்ட மக்களின் நலன் கருதிச் சிமெந்து பைக்கற் வழங்கும் பயனாளிகளின் எண்ணிக்கையை மூன்று மடங்காக அதிகரித்துள்ளது.

குடாநாட்டில் நிதியின்மை காரணமாக, சிமெந்து பூசாமல் அரை குறையில் இருக்கும் வீடுகளை அழகுபடுத்தும் வகையில் கடந்த வருடம் ஒரு பயனாளிக்கு 10 பைக்கற் சிமெந்து வீதம் 100 பயனாளிகளுக்கு 10 ஆயிரம் பைக்கற்றுக்களை வழங்கியது.

இந்த நிலையில் இந்த வருடம் குடாநாட்டில் மூவாயிரம் பயனாளிகளுக்கு இவை வழங்கப் படவுள்ளன.

இதற்கான சகல ஒழுங்குகளையும் மேற்கொண்டுள்ள யாழ்.மாவட்ட தேசிய வீடமைப்பு அதிகார சபை தகுதியான பயனாளிகளிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

தேசிய வீடமைப்பு அதிகார சபை, கடந்தவருடம்பொருளாதாரநெருக்கடி காரணமாகச் சிமெந்து பூசாமல் அரைகுறையுடன் இருந்த வீடுகளைப் பூரணப்படுத்தும் வகையில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு பத்துப் பைக்கெற் வீதம் மாவட்டம் தோறும் ஆயிரம் பயனாளிகளுக்குப் பத்தாயிரம் சிமெந்துப் பைக்கற்றுக்களை வழங்கியிருந்தது.

இந்த நிலையில் இந்த வருடம் சிமெந்து வழங்குவதற்கான பயனாளிகளின்எண்ணிக்கையை மூன்று மடங்காக அதிகரிக்க முன்வந்துள்ளதேசியவீடமைப்பு அதிகார சபை , மாவட்டங்கள் தோறும் 3 ஆயிரம் பயனாளிகளுக்கு 30 ஆயிரம் சிமெந்துப் பைக்கற்றுக்களை வழங்குவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

இதன் அடிப்படையில் குடாநாட்டில்தெரிவுசெய்யப்படவுள்ள மூவாயிரம் பயனாளிகளுக்கு முப்பதாயிரம் சிமெந்துப் பைக்கற்றுக்கள் இலவசமாக வழங்கப் படவுள்ளன. (த-ஐ-115)

## தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலய வாசலுக்கு ராஜ கோபுரம்

வலி வடக்கு,ஜன.23
வரலாற்றுப் புகழ் மிக்க தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலய வாசலுக்கான ராஜகோபுரம் அமைக்கும் பணி தைப்பூசத் திருநாளான நாளை ஞாயிற்றுக் கிழமை காலை அத்திபாரம் இடப்படும் பணிகளுடன் ஆரம்பமாகவுள்ளது.

ஆலயத் தலைவர் செஞ்சொற் செல்வர். கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமையில் இடம்பெறும் இந்தப்பணியானது பல லட்சம் ரூபா செலவில் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (த-ஐ-86)

## டெங்கு பரவும் சூழல்:இருவர் மீது வழக்கு

யாழ்ப்பாணம், ஜன.23
டெங்கு பரவும் சூழ்நிலையில் சுற்றுப்புறங்களை வைத்திருந்த குருநகர், பாசையூர் மற்றும் சுண்டுக்குழிப் பகுதிகளைச் சேர்ந்த நபர்களுக்கு எதிராக யாழ்ப்பாண பொலிஸாரினால் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

புல்பூண்டுகளுடன் சூழலைவைத்திருந்தமை, கழிவு நீர் வெளியேறாமல் காணப்பட்டமை, வெற்றுத் தகரப் பேணிகள், சிரட்டைகள் என்பனவற்றை வளவுகளில் வைத்திருந்தவர்களுக்கு எதிராகவே பொலிஸாரினால் யாழ். நீதிவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. அவர்களுக்கு நீதிமன்றினால் தலா ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டதுடன் சூழலைத் துப்புரவாக வைத்திருக்குமாறும் எச்சரிக்கப் பட்டது. (த-103)

## வாகன சாரதிக்கு அபராதம்

பாதசாரிகள் கடவையில் பொது மக்கள்நடந்துசென்றவேளையில் வாகனம் செலுத்தி, நடந்து சென்றோருக்கு ஆபத்தை ஏற்படுத்த முயன்ற வாகனச் சாரதிக்குச் சாவகச்சேரி நீதிமன்றில் எச்சரிக்கையுடன் அபராதம்விதிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு கடந்த புதன்கிழமை நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதிவான் சாரதி குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து, போக்குவரத்து விதிமுறைகளை அவசியம் சாரதிகள் அனுசரித்துசெயற்படவேண்டுமெனவும், விதிமுறைகளைமீறி வாகனங்களைச் செலுத்த முயன்றால் நீதிமன்றின் தண்டனையை எதிர் நோக்க வேண்டி நேரிடுமெனவும் எச்சரிக்கை செய்து 3ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார்.

இதேவேளை மதுபோதையில் வாகனம் செலுத்திய சாரதிக்கு 7 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்து சாரதிய அனுமதிப் பத்திரத்தை ஆறு மாதங்கள் நீதிமன்றில் தடுத்து வைக்குமாறும் உத்தரவிட்டார். (த-ஐ-9)

## டெங்கு நுளம்பு பரவக்கூடிய சூழல் 21 நாள்களில் 23 பேருக்கு அபராதம்

சாவகச்சேரி,ஜன.23
தென்மராட்சி பிரதேசத்தில் டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய ஏதுநிலையில் குடி யிருப்புகள் மற்றும் காணிகளை வைத்திருந்த 23 பேருக்குக் கடந்த 21 நாள்களில் சாவகச்சேரி நீதிமன்றில் தலா 3 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

ஜனவரி மாதத்தில் சுகாதாரப் பகு தியினரால் நடத்தப்பட்ட டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கையில் ஈடுபட்ட பொலிஸார் டெங்கு நுளம்பு உற்பத்தியாகக்கூடிய நிலையில் குடியிருப்புக்கள்மற்றும்காணிகளை வைத்திருந்தோர் மீது சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். இந்த வழக்குகளை விசாரித்த நீதிமன்றம் சம்பந்தப்பட்டவர்களுக்கு தலா 3 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதித்தது.

இதேவேளை, ஜனவரி மாதத்தில் கடந்த 18 ஆம் திகதி வரை தென்மராட்சி பிரதேசத்தில் 58 பேர் டெங்கினாலும், 43 பேர் உண்ணிக் காய்ச்சலினாலும் பீடிக்கப்பட்டுச் சாவகச்சேரி வைத்தியசாலை மற்றும் யாழ். போதனா வைத்தியசாலை ஆகியவற்றில் சிகிச்சை பெற்றுள்ளனரெனச் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு அறிவிக்கப்பட்டுள்ளதெனவும் வைத்தியசாலை புள்ளி விவரங்கள் மூலம் அறிய முடிகிறது. (த-ஐ-9)

## வயாவிளான் வைரவர் ஆலயத்தில் நாளை தைப்பூசச் சிறப்புப் பூசை

யாழ்ப்பாணம், ஜன.23
வலிகாமம் வடக்கில் விடுவிக்கப்படாத பகுதியில் உள்ள வயாவிளான் தெற்கு ஞான வைரவர் ஆலயத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை தைப்பூச சிறப்பு பூசையும் விசேட அன்னதானமும் நடைபெறும் என ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர்.

மீள்குடியேற்ற அமைச்சிடமும், பாதுகாப்பு அமைச்சிடமும் இதற்கான அனுமதியைப் பெற்றுள்ள ஆலய பரிபாலன சபையினர் இதில் கலந்து கொள்ள விரும்பும் மக்களை வயாவிளான் மத்திய கல்லூரியில் அன்றைய தினம் காலை 8 மணிக்கு ஒன்றுகூடுமாறு தெரிவித்துள்ளனர். (த-ஐ)

## சட்டவிரோத மின்சாரம் பெற்றவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், ஜன. 23
சட்டவிரோதமான முறையில் மின்சாரம் பெற்ற கே.கே. எஸ். வீதி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நபரொருவருக்கு யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றினால் 3 இலட்சத்து 77 ஆயிரம் ரூபாவை இலங்கை மின்சார சபைக்குச் செலுத்துமாறும் 10 ஆயிரம் ரூபாவை அபராதமாக செலுத்துமாறும் நேற்று முன் தினம் உத்தரவிடப்பட்டது.

குறித்த நபர் சட்டரீதியான முறையில் மின்சாரம்வழங்கப்பட்டிருந்த போது திருட்டுத்தனாக வயரைக் கொளுவி மின்சாரம் பெற்று வந்த போதே இலங்கை மின்சார சபையினரின் சோதனை நடவடிக்கையில் கைது செய்யப்பட்டார்.

தனக்கு எதிரான குற்றச்சாட்டை அவர் ஏற்றுக்கொண்டதையடுத்து நீதிமன்றினால் மேற்படி அபராதம் விதிக்கப்பட்டது. (த-103)

## முதலமைச்சரை அவமதிக்காதீர்; வரணி இளைஞர் உணவுத்தவிர்ப்பு

யாழ்ப்பாணம்,ஜன.23
வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனை அவமதிக்கும் செயலைக் கண்டித்து, தந்தை செல்வா சதுக்கத்தின் முன்பாக வரணி இளைஞர் ஒருவர் அடையாள உணவுத்தவிர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றார்.



வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனைச் சுதந்திரமாக செயற்பட விடுமாறு வலியுறுத்தியதுடன் 5 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து வரணி இளைஞர் ஒருவர் அடையாள உணவுத்தவிர்ப்புப்போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றார்.

வரணிப் பகுதியைச் சேர்ந்த நாகேந்திரன் துசாந், இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்ஸின் நடந்துநராகக் கடமையாற்றுகிறார். இவர் நேற்றுவெள்ளிக்கிழமை காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை இந்த அடையாள உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத் தார்.

இந்த அடையாள உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில், முதல்வர் மீது அவதூறு செய்யாதீர்கள், அரசியல் கைதிகளின் விடுதலைக் குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுங்கள், முதல்வரைச் சுதந்திரமாகச் செயற்பட விடுங்கள், சங்கிலியன் அரண்மணைக்கு சுற்றுமதில்கள் அமைத்து பேணுங்கள் என அவர் வலியுறுத்தியுள்ளார். (த-ஐ-106)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# போர்க்குற்ற விசாரணை இப்போது தேவையற்றது

## கவனம் செலுத்த வேறு விடயங்கள் உள்ளன என்கிறார் ஜனாதிபதி மைத்திரி

கொழும்பு, ஜன. 23
இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் குறித்து விசாரணை செய்வதற்கான விசேட நீதிமன்றங்களை அமைப்பது பற்றித் தற்போது ஆராயத் தேவையில்லை. தற்போது எங்களுக்கு வேறு விடயங்கள் உள்ளன. அவை குறித்து நாங்கள் கவனம் செலுத்துகின்றோம் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.



இந்தியாவின் புரொன்ட்லைன் சஞ்சிகைக்கு அளித்த பேட்டியில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.
விசேட நீதிமன்றங்கள் உங்கள் முன்னுரிமைக்குரியவையில்லையா என்ற கேள்விக்கு ஜனாதிபதி, நாங்கள் உடனடியாக செய்து முடிக்கவேண்டிய சில விடயங்கள் உள்ளன. அதன் பின்னரே நாங்கள் விசேட நீதிமன்றங்கள் குறித்து அது தேவையா என்பது பற்றி ஆராயலாம் எனக் குறிப்பிட்டுள்ளார்.
அவர் தனது செவ்வியில் கூறியதாவது:-
கேள்வி:-பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடனான உங்கள் உறவுகள் மிகவும் நெருக்கமானதாக மாறியுள்ளது? அவருடன் இணைந்து பணியாற்றுவது குறித்து என்ன நினைக்கிறீர்கள்?
பதில்-மிகவும் நெருக்கமானதாகக் காணப்படுகின்றது. நான் மிகவும் திருப்தியடைந்துள்ளேன்.
கேள்வி நீங்கள் பதவி கவிழ்க்கப்படலாம் என இன்னமும் கருதுகின்றீர்களா? கடந்த பல மாதங்களாக எதிர்ப்புரட்சி மற்றும் சதிகள் குறித்து குறிப்பிட்டு வந்துள்ளீர்கள்?
பதில்-சதித்திட்டம் என்ற பதத்தை நான் பயன்படுத்தமாட்டேன். சிலர் எனது அரசைப் பதவி கவிழ்க்கலாம் என எதிர்பார்த்தனர். வரவு-செலவுத் திட்டம், அதன் இரண்டாவது மூன்றாவது வாசிப்பின்போது நிறைவேற்றப்பட்ட விதம் எனது அரசின் பலத்தை வெளிப்படுத்துகின்றது. தற்போது அவர்கள் எனது அரசைப் பதவி கவிழ்க்கும் எண்ணத்தைக் கைவிட்டுள்ளனர்.
கேள்வி- புதிய அரசமைப்பை ஏற்றுக்கொள்வதற்கு எவ்வளவு காலம் எடுக்கலாம்?
பதில்-தற்போதைய அரசமைப்பில் மாற்றங்கள் தேவையா அல்லது புதிய அரசமைப்பு அவசியமா என ஒரு வருடம் முழுவதும் விவாதங்கள் இடம்பெறலாம். நாங்கள் அனைத்துத் தரப்பினரினதும் கருத்துக்களைக் கேட்கவேண்டும். ஓவ்வொரு கட்டத்திலும் மக்களின் ஆணையைப் பெறுவோம். இந்த நடைமுறை குறித்து அச்சப்படுவதற்கு எந்தத் தேவையும் இல்லை. வடக்கு-தெற்கிலுள்ள கடும் போக்காளர்களின் கருத்துகளுக்கு ஏற்ப நாங்கள் செயற்பட முடியாது.
கேள்வி-அதிகாரப்பகிர்வு குறித்த உங்கள் கருத்து என்ன? இலங்கையின் சிறுபான்மையினத்தவர்களுக்கு என்ன வகையான அரசமைப்பு பாதுகாப்பை வழங்க தீர்மானித்துள்ளீர்கள்?
பதில்-இலங்கையைப் பொறுத்தவரை நீண்ட கால அதிகாரப் பகிர்வு வரலாறுள்ளது. 1956 இல் பண்டாரநாயக்க ஆட்சிக்கு வந்தவுடன் அவர் செல்வாவுடன் அதிகாரப் பகிர்வு தொடர்பில் உடன்படிக்கையை மேற்கொண்டார். எனினும் அதனை நடைமுறைப்படுத்த அனுமதிக்கப்படவில்லை. 1965 இல் பிரதமர் டட்லி சேனநாயக்க, அதே போன்றதொரு உடன்படிக்கையில் செல்வாவுடன் கைச்சாத்திட்டார். எனினும் குறுகிய மனம் கொண்டவர்கள் இதனையும் அனுமதிக்கவில்லை. 1983 கறுப்பு ஜூலை மிகவும் துரதிஸ்டவசமானது. எதிர்மறையான ஒரு அனுபவம்.
இதன் பின்னர் காலஞ்சென்ற இந்தியப் பிரதமர் ஜே.ஆர்.ஜயவர்த்தனவுடன் 1987 இல் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டார். 13 திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. மாகாண சபைகள் தொடர்பிலான சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்தப் பிரச்சினைக்குத் தீர்வை காண்பதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளில் இந்திய-இலங்கை உடன்படிக்கை முக்கிய திருப்புமுனையாகும். இரு தரப்பிலும் உள்ள தீவிரவாத சக்திகள் கடந்த காலங்களின் கசப்பான அனுபவங்களை மறந்து விடக்கூடாது.
மனித குலத்தின் வரலாற்றைப் பார்த்தால், ஒருவர் தேசத்துக்கு நன்மை செய்ய முயலும்போது எதிர்ப்பு உருவாவதைக் காணலாம். ஆனால் மரண அச்சுறுத்தல்களால் மிரட்சியடையாமல் ஒருவர் முன்னோக்கி செல்ல வேண்டும்.
கேள்வி-13 ஆவது திருத்தத்தைத் தொடர்ந்தும் வைத்திருப்பீர்களா?
பதில்-தேசிய விவாதத்துக்கு பின்னரே இது குறித்து முடிவெடுக்கப்படும்.
கேள்வி:- நீங்கள் பல தடவைகள் பயணம் மேற்கொண்டுள்ள வடபகுதி குறித்த உங்கள் கருத்து என்ன?
பதில்-நான் உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களின் முகாம்களுக்கு செல்லும் வரை இறுதிப் போரில் இடம்பெயர்ந்தவர்கள் மாத்திரம் முகாமில் வாழ்கின்றனர் என்ற நினைப்பிலிருந்தேன். சிலர் கடந்த 25 வருடங்களாக முகாம்களில் இருப்பது எனக்கு ஆச்சரியத்தை அளித்துள்ளது. இந்த துயரமான நிலை குறித்து அறியாமலிருந்ததற்காக என் மீது நானே குற்றம் சுமத்துகின்றேன். கூடிய விரைவில் தங்கள் சொந்த இடங்களுக்குச் செல்வதே அவர்களது விருப்பம். அடுத்த ஆறு மாதங்களில் அவர்களது பிரச்சினைக்குத் தீர்வைக் காண்பேன் என அறிக்கை விட்டேன். அதில் உறுதியாகவுள்ளேன்.
கேள்வி சி.வி. விக்னேஸ்வரனை இணைத் தலைவராக கொண்ட தமிழ் மக்கள் பேரவையின் உருவாக்கம் குறித்த உங்கள் கருத்து என்ன?
பதில்-அது உள்விவகாரம். நான் தலையிடவிரும்பவில்லை,
கேள்வி- ஜெனீவா தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு அரசு காத்திரமான நடவடிக்கைகள் எதனையும் எடுக்கவில்லை என்பது குறித்த உங்கள் கருத்து என்ன?
பதில்- நான் நிபுணர்களின் கருத்துக்களைக் கேட்டறிந்துள்ளேன். இது தவிர அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களுடனும் ஆராய்ந்துள்ளேன். இந்த பிரச்சினைகளுக்குத் தீர்வை காண முயலும்போது நாங்கள் தற்போதைய அரசமைப்பில் இதற்கு என்ன இடமுள்ளது என்பது குறித்தும் பார்க்கின்றோம்,
இலங்கையில் போதியளவு நீதிபதிகள் உள்ளதாலும், இந்த விவகாரங்களைக் கையாள்வதற்கு ஏற்ற வலுவான சுதந்திரமான நீதித்துறை உள்ளதாலும் வெளிநாட்டு நீதிபதிகள் தேவையில்லை. வெளிநாட்டு நிபுணர்கள் தங்கள் கருத்துக்களை எங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம். ஆனால் பொறிமுறையை நாங்களே கையாள்வோம்.
கேள்வி- விசேட நீதிமன்றம் எப்போது அமைக்கப்படும்?
பதில்- அவ்வாறான விடயங்கள் குறித்து தற்போது ஆராயத் தேவையில்லை. தற்போது எங்களுக்கு வேறு விடயங்கள் உள்ளன. அது குறித்து நாங்கள் கவனம் செலுத்துகின்றோம்.
கேள்வி – விசேட நீதிமன்றங்கள் முன்னுரிமைக்குரியவையில்லையா?
பதில்- நாங்கள் உடனடியாகச் செய்துமுடிக்கவேண்டிய சில விடயங்கள் உள்ளன. அதன் பின்னரே நாங்கள் விசேட நீதிமன்றங்கள் குறித்து அது தேவையா என்பது பற்றி ஆராயலாம். (கு)

# 19 நாள்களில் 100 பேர் விபத்துக்களால் சாவு

கொழும்பு,ஜன.23
2016 ஆம் ஆண்டு ஆரம்பமாகி 19 தினங்களுக்குள் பாரதூரமான வாகன விபத்துக்களால் 100 பேர் சாவடைந்திருப்பதாகக் கொழும்பு மோட்டார் வாகன தலைமையகம் தெரிவித்துள்ளது.
இதற்கமைய, நாளொன்றில் இடம்பெறும் சாவுகளின் எண்ணிக்கை ஐந்துக்கும் மேற்படுகின்றது. கடந்த ஆண்டின் இந்தக் காலகட்டத்தில் சாவடைந்துள்ளோரின் எண்ணிக்கை 118 ஐக் கடந்திருந்ததாக மோட்டார் வாகன பொலிஸ் தலைமையகத்தின் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அமரசிறி சேனாரத்ன தெரிவித்துள்ளார்.
தினமும் அதிகரித்துச் செல்லும் உயிர்களைச் சாவெடுக்கும் வாகன விபத்துகளுக்கு முக்கியமான காரணமாயிருப்பது சாரதிகளின் கவனக் குறைவு மற்றும் பொறுமையற்றதன்மையெனவும் பொலிஸ்துறை சுட்டிக்காட்டுகிறது.
அதாவது தாகத்துக்கு, ஆறுதலுக்கு இடமளிக்காமை, பயணமொன்றை ஆரம்பிக்கும் போது போதியளவு காலநேரத்தை நிர்ணயித்துக் கொள்ளாமல் புறப்படுதல், அதனால் ஏற்படும் காலதாமதத்தை ஈடு செய்து கொள்வதற்காக அதிக வேகத்தில் வாகனத்தைச் செலுத்திச் செல்வது என்பனவும் விபத்துக்களுக்குக் காரணமாகும்.
சில பாரவூர்திகள் மற்றும் வான்களில் சமிக்ஞை ஒளிக்கருவிகள் செயற்படாதிருப்பதாகவும், பிரேக்குகள் விளக்குகளின் ஒளியும் கூட இல்லாது வாகனங்கள் செலுத்திச் செல்லப்படுவதும் தெரியவந்துள்ளது.
கனரக வாகனங்கள் தொடர்பாகத் தகுதிகளுக்கான சான்றிதழ்கள் வழங்கப்படுவதில் தற்போது நடைமுறையிலுள்ள முறைமை பற்றி விரிவாக ஆராய்ந்து பார்க்கப்படவேண்டியுள்ளதாக பொலிஸ்துறை அரசின் பொறுப்பு வாய்ந்த பிரிவுகளுக்கு தெரியப்படுத்தியிருப்பதாகவும் அந்த அதிகாரி மேலும் கூறினார். (த-ஜ-22)

# சம்பந்தனால் மாத்திரமே தீர்வு பெற்றுத்தர முடியும்

## யாழ்.பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் பத்மநாதன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 23
இலங்கைத் தமிழர்களின் அரசியல் வரலாற்றில் தந்தை செல்வாவுக்குப் பிறகு தற்போது உள்ளவர்களில் எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் ஒருவரால் மட்டுமே தமிழ் மக்களின் பிரச்சினைக்குக் குறைந்த பட்ச தீர்வையேனும் பெற்றுத்தர முடியும் என யாழ். பல்கலைக்கழகத்தின் வேந்தர் பேராசிரியர் பத்மநர்தன் தெரிவித்தார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது;-
தற்போது சம்பந்தன் ஒருவரே அனுபவம் மட்டுமன்றிச் சாணக்கியம் , சகிப்புத்தன்மை என்பவற்றுடனும் மதிநுட்பத்துடனும் செயற்படுகின்றார். எனவே அவரின் முயற்சியினால் ஓர் புதிய அரசியல் தீர்வு கிட்டும் என நம்புகின்றேன்.
யாழ். பல்கலைக்கழகத்தில் 31 ஆவது பட்டமளிப்பையும் நிறைவு செய்துள்ளோம். இருப்பினும் ஏனைய பல்கலைக்கழகங்களுடன் ஒப்பிடும்போது யாழ். பல்கலைக்கழகத்தில் வேந்தர் நடத்தவேண்டிய பட்டமளிப்பு விழாவைத் துணைவேந்தர் நடத்துகின்றார். அது மாத்திரமன்றிப் பட்டமளிப்பு நிகழ்வுகள் பல அமர்வுகளாக இடம்பெறுகின்றபோதும் ஒரு அமர்வில் கூட வேந்தர் உரையாற்ற அனுமதிப்பது கிடையாது. இது நீண்ட காலமாக இருக்கும் ஓர் குறையே.
இதற்கும் அப்பால் நாட்டின் ஏனைய பல்கலைக்கழகப் பட்டமளிப்பின்போது ஒரு சிறப்பு விருந்தினர் அழைக்கப்படுவார். அந்த நடைமுறை யாழ்ப்பாணத்திலும் பின்பற்றப்படவேண்டியதோடு எதிர்காலத்தில் வேந்தருக்கும் உரையாற்றும் சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டும்.
பட்டம் பெற்று வெளியேறும் மாணவர்களை நாட்டை விட்டு வெளியேற்றும் முயற்சியில் ஓர் முகவர் கூட்டம் இயங்குகின்றது. இந்தக் கூட்டத்தை வெளிநாடுகளில் வாழும் கும்பல்கள் கையாள்கின்றன.
அவ்வாறான வலைகளில் எமது மாணவர்கள் வீழ்ந்து விடாமல் எமது நாட்டில் மேலும் பல சாதனைகள் புரிந்து சேவையாற்ற முன்வர வேண்டும். ஏனெனில் தற்போது இவ்வாறானவர்களின் முயற்சியினால் மாதாந்தம் நூற்றுக்கணக்கான பட்டதாரிகள் எமது பிரதேசத்தில் இருந்து வெளியேறி வருகின்றனர். இந்த நிலை தொடருமானால் எமது சமூகத்தின் இருப்பு, நிலை பெறமாட்டாது- என்றார். (த-101)

# 6 ஆயிரம் ஆண்டுகள் பழைமை வாய்ந்த தானியங்கள் இலங்கையில் கண்டுபிடிப்பு

கொழும்பு,ஜன.23
6 ஆயிரம் ஆண்டுகளை விடப் பழைமை வாய்ந்த தானியங்கள் இலங்கையில் இருந்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டிருப்பதாக களனிப் பல்கலைக்கழகத்தின் தொல்லியல் ஆய்வுகள் பிரிவின் சிரேஷ்ட பேராசிரியர் ராஜ் சோமதேவ தெரிவித்துள்ளார்.
பலாங்கொடை இழுக்கும்புரப் பிரதேசத்தில் 2015 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்த அகழ்வுகளின்போது, இந்தத் தானியங்கள் கண்டெடுக்கப் பட்டதாகவும், இவற்றின் காலத்தை நிர்ணயிப்பதற்காக அமெரிக்காவின் நியாம் மாநிலத்தின் புளோரிடாவில் உள்ளபீட்டா சுன் னரிக்ஸ் கோப்ரேன் என்ற ஆய்வு கூடத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
இதற்கமைய இந்த தானியங்கள் ஆறாயிரம் வருடங்கள் பழைமை வாய்ந்தவை எனவும், இலங்கையில் வாழ்ந்துள்ள மனிதன், மரங்களின் இலைகள், காய்கள், பழங்கள் போன்றே தானியங்களையும் நெல் வகைகளையும் பயன்படுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (த-ஜ-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணில் - சொல்கெய்ம் டாவோஸில் திடீர் பேச்சு

– டாவோஸ் நகரிலிருந்து உதயன் பிரதிநிதி –

டாவோஸ், ஜன 23
உலகப் பொருளாதார மாநாட்டில் கலந்து கொள்வதற்காக சுவிஸ் நாட்டின் டாவோஸ் நகருக்கு வருகை தந்துள்ள இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நோர்வே நாட்டின் முன்னாள் அமைச்சரும் இலங்கை அரசு–விடுதலைப் புலிகள் பேச்சுக்களுக்குப் பிரதான அனு சரணையாளராக இருந்தவருமான எரிக் சொல்கெய்மைச் சந்தித்துப் பேச்சு நடத்தி னார்.

உலகின் முக்கிய தலைவர்கள் பலரும் பெரும் முதலாளிகளும் பல் தேசிய நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் அதிகாரிகளும் கலந்துகொள்ளும் பொருளாதார மாநாடு டாவோஸ் நகரில் நடந்து வருகிறது. இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் நிதி அமைச் சர் ரவி கருணாநாயக்க அடங்கிய உயர் மட்டக் குழுவினர் இதில் பங்கேற்றுள் ளனர்.

நிகழ்வின் ஒரு பகுதியாக, மாற்றத்துக்கு உட்பட்டு வரும் பிராந்தியம் தெற்காசியா என்ற தலைப்பில் குழுக் கலந்துரையாடல் இடம்பெற்றது. அசோசியேட் பிரஸ் செய்தி முகவர் நிலையத்தின் வர்த்தகப் பகுதிக் கான ஆசிரியர் லிஸா கிப்ஸ் நெறிப் படுத்தலில் நடந்த இந்தக் கலந் துரையாடலில் பங்கேற்பாளர்களில் ஒருவராக ரணில் கலந்துகொண்டார். அதன் பின்னர் தனி இடத்தில் எரிக் சொல்கெய்ம் உடனான சந்திப்பு இடம் பெற்றது.

பிரதமரின் டாவோஸ் நிகழ்ச்சி நிரலில் இந்தச் சந்திப்புக்கு நேரம் ஒதுக்கப் பட்டிருக்கவில்லை. எனினும் திடீரென ஒழுங்குபடுத்தப்பட்டு சந்திப்பு நடந்தது.

இருவரும் பேசிக்கொண்ட விடயங் கள் குறித்து உத்தியோகபூர்வ அறி விப்பு எதுவும் இதுவரை வெளியிடப்பட வில்லை.

எனினும் புதிய அரசமைப்பு ஒன்றை ஏற் படுத்துவதற்கான முயற்சி குறித்து ரணில் எடுத்துக் கூறினார் என்று அறிய வந்தது.

தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண் பது தொடர்பில் கூட்டமைப்பின் தலைவர்களுடன் நடத்தப்படும் கலந்துரையாடல்கள் குறித்தும் சொல்கெய்மிடம் எடுத்துக் கூறினார் ரணில்.

தன்னுடைய கடந்த கால அனுபவங் களின்படி, இலங்கைக்குத் தனது உதவி தேவைப்பட்டால் அதனை வழங்கு வதற்குத் தான் எப்போதும் தயாராக இருக்கிறேன் என்று சொல்கெய்ம் சந்திப்பில் உறுதியளித்தார்.

தமிழர்களுடனான அரசியல் கலந் துரையாடல்களுக்குச் சொல்கெய்மின் உதவி கோரப்பட்டதா என்பது குறித்து இரு தரப்பிலிருந்தும் தகவல் எதுவும் தரப்படவில்லை.

(உ)



> "தன்னுடைய கடந்த கால அனுபவங்களின்படி, இலங் கைக்குத் தனது உதவி தேவைப் பட்டால் அதனை வழங்குவதற் குத் தான் எப்போதும் தயாராக இருக்கிறேன் என்று சொல் கெய்ம் சந்திப்பில் உறுதி யளித்தார்."

## இலங்கைக்கான ஈரான் தூதுவர் அமைச்சர் ரிஷாத்துடன் சந்திப்பு

கொழும்பு, ஜன.23
இலங்கைக்கான ஈரானின் புதிய தூதுவராக பதவியேற்றுள்ள மொஹம் மட் ஷெயிரி மீரானி, கைத்தொழில், வர்த்தக அமைச்சர் ரிஷாத் பதியு தீனை அவரது அமைச்சில் கடந்த புதன் கிழமை சந்தித்துக் கலந்துரை யாடியுள்ளார்.

இந்தச் சந்திப்பில் இரண்டு நாடு களுக்குமிடையில் நல்ல புரிந் துணர்வும், திருப்தியான உறவும் இருப்பதைச் சுட்டிக் காட்டிய அமைச்சர் ரிஷாத், ஈரான் தொடர் பான சர்வதேச மட்டத்தில் உருவா கிய விவகாரங்களுக்கு இலங்கை என்றுமே ஈரானுக்கு ஆதரவாக இருப்ப தாகத் தெரிவித்தார்.

பொருளாதார சர்ச்சைகளுக்கு மத்தியிலும் இரண்டு நாடு களுக்குமிடையிலான வர்த்தக, பொருளாதார ரீதியிலான உறவுகள் நீடித்து வருகிறது.

எமது நாட்டின் மொத்த வர்த்தகப் புரள்வு 2014 ஆம் ஆண்டு 188 மில் லியன் அமெரிக்க டொலராக இருந்தது என்றும், 2015 செப்ரெம்பர் வரை அது 114 மில்லியன் அமெரிக்க டொலராக இருந் தது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

ஈரானுக்குத் தேயிலையை ஏற்றுமதி செய்வதுடன், தெங்கு, முந்திரி, நார்ப் பொருள்கள் ஆகியவற்றையும் இலங்கை ஏற்றுமதி செய்கிறது.



அத்துடன் ஈரானிலிருந்து பிரதான மாக மசகு எண்ணெய் [illegible] மின்சார மாற்றிகள் இறக்குமதி செய்யப் படுகின்றன. கடந்த சில வருடங்களாக மசகு எண்ணெய் இறக்குமதியில் பல் வேறு கஷ்டங்களை நாம் சந்தித்த போதும் தற்போது வர்த்தகப் பொரு ளாதாரத் துறையில் ஈரானும் இலங்கை யும் முன்னணியில் திகழ்கின்றது.

மேலும் இலங்கையில் உல்லாசப் பயணிகளைக் கவரக்கூடிய பல்வேறு [illegible] ஈரானிய உல்லா சப் பயணிகள் இங்கு வருகைதர வேண்டு மென அமைச்சர் ரிஷாத் இந்த சந்திப் பில் அழைப்பு விடுத்தார். (த-ஜ-56)

### ஐ.தே.கவின் மடியில் மைத்திரி கிடந்தால் தேர்தலில் சு.கவுக்குத் தோல்வி நிச்சயம்

**எதிர்வு கூறுகிறது பொது எதிரணி**

கொழும்பு, ஜன 23
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஐக்கிய தேசியக் கட்சியின் மடியில் தொடந்தும் கிடந்தால் எதிர் வரும் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நிச்சயம் தோல்வியடையும்.

இவ்வாறு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சனத் நிஷாந்த தெரிவித் தார்.

கொழும்பு, பொரளையில் அமைந்துள்ள என்.எம். பெரேரா கேந்திர நிலையத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற பொது எதிரணியின் ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் திலும் அமுனுகம கூறியதாவது,

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிரான பிரசாரத்தை உடன டியாக ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கவேண் டும்.

அத்துடன், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை இணைத்து தேர்தல் நடவடிக்கையை முன்னெடுக்காத பட்சத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பெரிய தோல்வியைச் சந்திப்பதை எவராலும் தடுக்கமுடியாது–என்றார். (த-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## நாட்டின் மேம்பாடு தறுக்கணிக்கும் போக்கிலா...?

ஐக்கிய இலங்கைக்குள், பகிரப்பட்ட இறையாண்மையின் அடிப்படையில், அதி உச்ச சமஷ்டி அடப்படையிலான தீர்வையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்பார்க்கிறது; விரும்புகிறது. இந்த ஆண்டின் இறுதிக்குள் தீர்வு எட்டப்பட்டாக வேண்டும் --

ஒற்றை ஆட்சிக் கோட்பாட்டை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரு போதும் ஏற்றுக் கொள்ளாது-- மேற்கண்டவாறு, வெட்டு ஒன்று துண்டு இரண்டாகக் கருத்து வெளியிட்டுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்றின் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன்.

அனைத்துலக நாடுகளின் கவனம், இப்போது முன்னரை விடவும் அதிக அளவில், இலங்கை நாட்டின் மீது திரும்பியுள்ளது. இந்தத் தருணத்தைப் பயன்படுத்தி, புரையோடிக் கிடக்கும் இன விவகாரத்துக்கு விரைந்து தீர்வு காணப்பட்டாக வேண்டும்.

வெறும் வாய்ப்பந்தல் போடும்- ஏய்க்காட்டிக் குதப்பி அடிக்கும் முந்திய போக்குகள் புதைக்கப்பட வேண்டும்.

புதிய அரசியல் யாப்பு ஒன்றின் மூலமே நிலையான தீர்வைக்காண இயலுமென்ற எடுகோள் இப்போது எழுந்து உயர்ந்து நிற்பதற்கு, தென்னிலங்கை அரசியல் தலைவர்களும் பௌத்தமதப் பீடாதிபதிகளும் காரணர்கள்.

அதனை ஒருவாய்க்காலாக்கி, தென்னிலங்கையின் அரசியல் தலைவர்கள், அதனைத் தமது உறுதிமொழிகளில் முதன்மைப்படுத்துவதும் இந்தச் சின்னஞ்சிறிய நாட்டின் சாபக் கேடு எனலாம்.

ஆனால், இலங்கையில் இன சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான ஒரு வழிமுறை சமஷ்டியே என்று அழுத்திக்கூறிய, விளக்கம் அளித்த தெற்கின் தலைவர்கள், அமைச்சர்கள் பின்னர் தகிடுதத்தப் பேர்வழிகளாக மாறினர் என்பது சரித்திரம்.

சுற்றிச் சுற்றி, சுப்பரின் கொல்லைக்குள் என்ற பேச்சு வழக்கு மொழி ஒன்று எமது பிரதேசங்களில் உண்டு. அது ஆட்சிக்கட்டிலில் ஏறும் தென்னிலங்கை அரசியற் தலைவர்களுக்கே மெத்தப் பொருத்தமாக அமைகிறது.

சமஷ்டி குறித்து தென்னிலங்கையில் பெரும் அச்சநிலை உண்டு; ஒற்றை ஆட்சி குறித்து வடக்கில் பெரும் பீதி. புதிய அரசமைப்பை அழகிய குழந்தையாகப் பிரசவிப்போம் என்ற வாய்ச்சவாடலும் இப்போது மேலெழுகிறது.

கூட்டிக்கழித்து, பெருக்கிப் பிரித்துப் பார்த்தால், இலங்கையின் (புதிய)அரசு இனப்பிரச்சினைக்குத் தீர்க்கமான தீர்வு ஒன்றைக் காண்பதற்கு இதுவே தகுந்த தருணம் என்று உலக நாடுகள் கருதுகின்றன - கருத்து வெளியிட்டும் வருகின்றன.

ஆனால், பேச்சுப் பல்லக்கு தம்பி கால் நடை என்ற வகைசார்ந்து, தழுவி நல்லாட்சி அரசு, ஒளித்து விளையாடும் சிறுவர்களைப் போன்று, கீச்சு மாச்சுத் தம்பளம், கீயா மாயா தம்பளம் விளையாடுவதிலேயே காலத்தைக் கழிக்கும் போக்கு மேலோங்கி வருகிறது.

இந்தப் போக்கு, நாட்டின் இனநல்லிணக்கம், அரசியல் சமூக, பொருளாதார, மேம்பாட்டை மேன் மேலும் தறுக்கணிக்கச் செய்யுமே அன்றி வேறில்லை!

# உச்சத்தில் தலிபான்களின் வெறியாட்டம்



எம்.ஐ.முபாறக்

உலகம் பூராகவும் இன்று வியாபித்திருக்கும் பயங்கரவாதம் காரணமாக இன்று பல நாடுகள் அழிந்து வருகின்றன. மத்திய கிழக்கு நாடுகளின் நிலைமை சொல்லவே தேவை இல்லை. அதிலும்,சிரியா மற்றும் ஈராக் போன்ற நாடுகள் அழிவின் உச்சத்தில் இருக்கின்றன. உலக நாடுகளின் அமைதியைச் சீர்குலைக்கும் மேற்கு நாடுகளின் திட்டமிட்ட அடிப்படையில் முன்னெடுக்கப்படும் இந்தப் பயங்கரவாதம் தினமும் ஆயிரக் கணக்கான உயிர்களைக் காவுகொள்கின்றது.

### நீண்ட காலமாகச் சிக்கித் தவிக்கும் நாடுகள்

அந்தப் பயங்கரவாதத்துக்குள் நீண்ட காலமாகச் சிக்கித் தவிக்கும் நாடுகளுள் பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளும் அடங்குகின்றன. தலிபான்கள் மற்றும் ஹக்காணி வலையமைப்பு போன்ற பல ஆயுதக் குழுக்கள் இந்த நாடுகளைச் சீரழித்து வருகின்றன.

அதிலும், தலிபான்களின் அட்டகாசம்தான் உச்சம். அமெரிக்காவை விரட்டுகின்றோம்; நேட்டோப் படைகளை விரட்டுகின்றோம் என்ற பெயரில் இவர்கள் அப்பாவிப் பொது மக்களைத் தான் கொலைசெய்து வருகின்றனர்.

90 முதல் ஆப்கானைக் கைப்பற்றி அந்த நாட்டை ஆட்சிசெய்து வந்த தலிபான்கள் 2001இல் அமெரிக்காவால் விரட்டியடிக்கப்பட்டனர்.

2001 செப்ரெம்பரில் நியூயோர்க் இரட்டைக் கோபுரம் தகர்க்கப்பட்டதைத் தொடர்ந்து பயங்கரவாதத்தை ஒழிக்கின்றோம் என்ற பெயரில் அமெரிக்கா தலிபான்களுக்கு எதிராகப் போர் தொடுத்து தலிபான்களின் ஆட்சியைக் கவிழ்த்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பறிபோன ஆட்சியைக் கைப்பற்றுவதற்கான போராட்டம்

பறிபோன ஆட்சியை மீண்டும் கைப்பற்றுவதற்காக 2001 முதல் தலிபான்கள் போராடி வருகின்றனர். அந்தப் போராட்டத்தின் விளைவால் அப்பாவிப் பொதுமக்கள்தான் அதிகம் கொல்லப்பட்டுள்ளனர்; கொல்லப்படுகின்றனர். அவர்களின் போராட்டத்தில் நியாயம் இருந்தாலும் போராட்ட முறை பயங்கரவாதமாகவே இருக்கின்றது.

> படையினரைப் பழிவாங்குவதற்காக அப்பாவிப் பொதுமக்களை – மாணவர்களைக் கொலை செய்வது எந்தவகையில் நியாயமாகும்? இது தெளிவான பயங்கரவாதம் என்பதில் சந்தேகமில்லை. தலிபான்களின் தாக்குதல்களில் இதுவரை அதிகம் உயிரிழந்தவர்கள் அப்பாவிப் பொதுமக்கள்தான்.

தலிபான்களை அடக்குவதற்காக 10 ஆயிரத்துக்கும் அதுகமான நேட்டோ படையினர் ஆப்கானில் களமிறங்கியுள்ளனர். ஆப்கான் படையினருடன் இணைந்து தலிபான்களுக்கு எதிராகச் சண்டையிடுகின்றனர். இருந்தும், அதில் எந்த முன்னேற்றமும் இல்லை. தலிபான்களின் ஆட்டம் தொடரவே செய்கின்றது. கடந்த வருடம் முக்கியத்துவம் வாய்ந்த குண்டுஸ் நகரையும் தலிபான்கள் கைப்பற்றினர்.

15 வருடங்களையும் தாண்டி இந்தப் போராட்டம் தொடர்வதால் அதற்கு அமைதிப் பேச்சு மூலம் முற்றுப்புள்ளி வைப்பதற்காக கடந்த வருடம் ஜூலை மாதம் தலிபான்களுக்கும் ஆப்கான் அரசுக்குமிடையில் அமைதிப் பேச்சு இடம்பெற்றது.

### சாவடைந்த முல்லா உமர்

தலிபான்களின் தலைவர் முல்லாஉமர் இரண்டுவருடங்களுக்கு முன்பே சாவடைந்துவிட்டார் என்ற செய்தி அப்போது தலிபான்களால் வெளியிடப்பட்டதால் தலிபான்களுக்கு இடையில் பிளவு ஏற்பட்டு பேச்சுவார்த்தை







இடையில் முறிந்தது. இருந்தும், அப்பேச்சை மீள ஆரம்பிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அமைதிப் பேச்சுக்கான முயற்சிகள் ஒரு புறம் சென்றுகொண்டிருக்க மறுபுறம் தலிபான்களின் பயங்கரவாதச் செயற்பாடுகள் தொடர்ந்தவண்ணமே உள்ளன.

இது இவ்வாறு இருக்க, பாகிஸ்தான் தலிபான்களின் பயங்கரவாதச் செயற்பாடுகளும் அதிகரித்துக்கொண்டே செல்கின்றன. அந்தவகையில், பாகிஸ்தானின் கைபர் பக்துங்வா மாகாணத்தில் அமைந்துள்ள பஷா கான் பல்கலைக்கழகத்தின் மீது கடந்த புதன்கிழமை நடத்தப்பட்ட தாக்குதல் முக்கியமானதாகும். இதில் விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்கள் என 20 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.

**தலிபான்களால் முரண்பட்ட தகவல்கள்**

இந்தத் தாக்குதல்கள் தொடர்பில் தலிபான்கள் முரண்பட்ட கருத்துக்களை வெளியிட்டுள்ளனர். பாகிஸ்தான் தலிபான்களின் ஊடகப்பேச்சாளர் முஹம்மது குரசாணி இத்தாக்குதலை மறுத்துள்ளதோடு அதற்குக் கண்டனத்தையும் தெரிவித்துள்ளார். தாக்குதல் நடத்தியவர்கள் கண்டுபிடிக்கப்பட்டு அவர்கள் நீதியின் முன் நிறுத்தப்படுவர் எனவும் தெரிவித்துள்ளார். ஆனால், அந்தத் தலிபான் அமைப்பின் மற்றுமொரு பிரிவான 'ஹக்கீமுல்லா மகூத் பிரிவின் தளபதி உமர் மன்சூர் இந்தத் தாக்குதலுக்கு உரிமை கோரியுள்ளார். தலிபான்கள் மீது படையினர் தொடர்ச்சியாக நடத்தி வரும் தாக்குதல்களுக்குப் பழிவாங்கும் விதமாகவே இந்தத் தாக்குதலை நடத்தியதாக அவர் தெரிவித்துள்ளார்.

2014 இல் பொவார் நகரில் இராணுவம் நடத்தும் பாடசாலை மீது தாக்குதல் நடத்தப்பட்டு 150 மாணவர்கள் கொல்லப் பட்டனர். அந்தத் தாக்குதலுக்குத் தலைமை தாங்கி இருந்தவர் இந்த உமர் மன்சூர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

படையினரைப் பழிவாங்குவதற்காக அப்பாவிப் பொதுமக்களை - மாணவர்களைக் கொலைசெய்வது எந்த வகையில் நியாயமாகும்? இது தெளிவான பயங்கரவாதம் என்பதில் சந்தேகமில்லை. தலிபான்களின் தாக்குதல்களில் இது வரை அதிகம் உயிரிழந்தவர்கள் அப்பாவிப் பொதுமக்கள்தான். ஜிஹாதியப் போராட்டத்தில் இவை எல்லாம் சரிதான் என்ற பிழையான நிலைப்பாட்டில் இவர்கள் இருக்கின்றனர்.

பொதுமக்கள் இவ்வாறு இலக்குவைக்கப்படுவது ஒருபுறமிருக்க கல்வி இலக்குவைக்கப்படுவதுதான் மிகவும் பாரதூரமான ஒன்றாகும். கல்வியைச் சீரழிக்கும் வகையில் தலிபான்கள் தொடர்ச்சியாகச் செயற்பட்டு வருவதை அவதானிக்கலாம்.

> தலிபான்களை அடக்குவதற்காக 10 ஆயிரத்துக்கும் அதிகமான நேட்டோ படையினர் ஆப்கானில் களமிறங்கியுள்ளனர். ஆப்கான் படையினருடன் இணைந்து தலிபான்களுக்கு எதிராகச் சண்டையிடுகின்றனர்.

**கல்விக்கு எதிரான தாக்குதல்கள்**

கல்விக்கு எதிராக அவர்கள் நடத்திய தாக்குதல்களுள் மிகவும் முக்கியமானது 2014 டிசம்பர் மாதம் பெசரவார் நகரில் அமைந்துள்ள இராணுவம் நடத்தும் பாடசாலை மீது நடத்தப்பட்ட தாக்குதலாகும். இதில் 150 மாணவர்கள் கொல்லப்பட்டனர்.

அதேபோல், பெண்களின் கல்விக்கு ஆதரவாகக் குரல் கொடுத்து வந்த மலாலா மீது நடத்தப்பட்ட தாக்குதல் உலகப் பிரபல்யம் வாய்ந்தது.

ஆப்கானில் பெண்கள் கல்வி கற்கும் வயதை ஆப்கான் தலிபான்கள் மட்டுப்படுத்துகின்றனர். இதை மீறிக் கல்வி கற்கச் சென்ற எத்தனையோ மாணவிகள் மீது அசிட் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. இதனால், பல இடங்களில் பெண்கள் ஒளிந்து ஒளிந்து கல்வி கற்கும் அவல நிலை இன்னும் உள்ளது. தலிபான்களின் இவ்வாறான தாக்குதல்கள் போக, தலிபான்களின் சிந்தனைகளை ஏற்ற சிலரும் இவ்வாறான தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். இவ்வாறு அப்பாவி மாணவர்கள் இலக்குவைக்கப்படுவதால் பாகிஸ்தான் மற்றும் ஆப்கான் நாடுகளின் கல்விதான் பாதிக்கப்படுகின்றது. இதைத் தலிபான்கள் உணர்ந்ததாகத் தெரியவில்லை. அரசைப் பழிவாங்கு வதற்காக எந்தவொரு பாவ காரியங் களையும் செய்யலாம் - எவரையும் கொலை செய்யலாம் என்ற நிலைப்பாட்டில்தான் இவர்கள் செயற்பட்டு வருகின்றனர்.

இந்த வருடம் ஆரம்பம் முதல் இப்போது வரை பாகிஸ்தானில் தலிபான்கள் நடத்திய 4 தாக்குதல்களில் 44 பேர் மரணித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# சங்கானை பட்டின அபிவிருத்திச் சபை கூறும் விளக்கம்

பொறுமைக்கும் எல்லையுண்டு என்ற தலைப்புடன் கூடிய செய்தியொன்று நேற்று முன்தினம் 21ஆம் திகதி உதயன் பத்திரிகையில் சங்கானையைச் சேர்ந்த நடேசு தயாளன் என்பவரின் பெயரில் வெளியாகியிருந்து. அதில் புதியமீன் சந்தையில் அதன் தொடர்பு இல்லாதவர்கள் மூவர் தமது பெயர்களைப் பெயர்ப்பலகையில் பொறித்துள்ளமை பட்டின அபிவிருத்தி சபையின் ஏனைய உறுப்பினர்களை பாதித்துள்ளது எனக் குறிப்பிட்டு செய்தி வெளியாகியுள்ளது.

மேலும், குறித்த செய்தி விடயமாக நடேசு தயாளன் என்பவர் யார்? சங்கானை பட்டின அபிவிருத்திச்சபை உறுப்பினர்கள் எவரும் அபிவிருத்திச் சபையின் கவனத்துக்கு இது வரை எடுத்துக் கூறியிராத கருத்தைக் கற்பனையாக உருவாக்கி பத்திரிகையில் வெளியிட்ட மேற்படி செய்தி தொடர்பாக சங்கானை பட்டின அபிவிருத்தி சபையால் பின்வரும் எதிர்மறு மொழியை நடேசு தயாளன் என்பவருக்கும், குறித்த செய்தியை வாசித்த வாசகர்களுக்கும் சமர்ப்பிக்கிறோம்.

சங்கானை பட்டின அபிவிருத்திசபை என்பது சங்கானைப் பட்டினத்தின் ஏழு வட்டாரங்களை உள்ளடக்கிய கிராமத்திலுள்ள புத்திஜீவிகள், நலன் விரும்பிகள், சமூக சேவை செய்பவர்கள் ஆகியோர் அடங்கிய மகாசபையாகும்.

குறித்த பட்டின அபிவிருத்திச் சபைக்கு கடந்த எட்டு வருடங்களாக சங்கானை பிரதேச செயலர் காரியாலயத்தின் நுழைவாசலுக்கு முன்பாக மீன் சந்தையொன்று இருப்பதை மாற்றி அமைக்கும்படி பிரதேச மக்களும், சங்கானை நிகரை வைரவப் பெருமான் ஆலய வழிபடுவோர்களும் இந்து ஆலய வழிபடுவோர்களும் மற்றும் பிரதேச செயலரும் எழுத்து மூலமாகவும், நேரடியாகவும் செய்து கொண்ட வேண்டுகோளை ஏற்று, குறித்த மீன் சந்தையை மாற்றி அமைக்க 2014ஆம் ஆண்டு நெல்சிப், புறநெகும் என்ற அரச நன்கொடைத்திட்டத்துக்கென 3.2 மில்லியன் ரூபா வலி. மேற்குப்பிரதேசசபைக்கு புதிய வேலைத்திட்டங்களை நிறைவேற்றக் கிடைத்தது. இந்த நிதியில் புதிய மீன் சந்தை அமைக்க வேண்டுமென சங்கானை பட்டின அபிவிருத்திச் சபையினர் வலி.மேற்கு பிரதேச சபையிடம் வேண்டிய போது வலி.மேற்குப்பிரதேச சபை குறித்த 3.2 மில்லியன் பணத்தைப் பயன்படுத்தி புதிய மீன்சந்தையொன்றை அமைக்க முன்வந்தபோதும், மீன் சந்தை அமைக்கக் காணியொன்றை நன்கொடையாக எவராவது வழங்கினால் அந்தக் காணியில் சந்தை அமைப்பதற்கு குறித்த பணத்தைப் பயன்படுத்தலாம் என நிபந்தனையொன்றை சங்கானை பட்டின அபிவிருத்திச் சபைக்கு முன்வைத்தது.

இந்த நிலையில் சங்கானை பட்டின அபிவிருத்திச் சபையினர் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பணத்தைச் சேகரித்து ஒரு ஆதனத்தைத் வாங்கி வலி.மேற்குப் பிரதேசசபைக்கு அன்பளிப்புச் செய்ய எண்ணி எட்டுலட்சம் ரூபாவைச் சேகரித்து சங்கானை வெல்வில் முருகமூர்த்தி ஆலய தர்மகர்த்தாக்களிடம் 5பரப்பு ஆதனத்தை ரூபா 8 லட்சத்துக்கும் மேலும் 2 பரப்பு ஆதனத்தை கு.முருகானந்தம் என்ற நலன் விரும்பியிடம் அன்பளிப்பாகப்பெற்றும் பிரதேச சபைக்கு, சங்கானைப்பட்டினத்தில் புதிய மீன் சந்தையொன்றை உருவாக்க ஆவன செய்துள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இந்த நிலையில் குறித்த ஆதனம் பிரதேச சபைக்கு புதிய மீன் சந்தை அமைக்க வழங்கப்பட்டாலும் குறித்த கட்டடம் அமைவதற்கு இடையூறாக வலி.மேற்குப் பிரதேசசபை உறுப்பினர் சிலரும் சில தனிப்பட்டவர்களும் இருந்துள்ளனர். இந்த நிலையில் குறித்த வேலைத்திட்டத்தை எந்தவகையிலும் நிறைவேற்ற வேண்டும் என்ற துணிவுடன் பிரதேச சபைத் தவிசாளரும் எம்முடன் ஒத்துழைத்த காரணத்தால் புதிய மீன் சந்தை அமைக்கும் முயற்சி அன்று அமைச்சராக இருந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பெரும்முயற்சியால் கைகூடியதுடன் டக்ளஸ் தேவானந்தாவே குறித்த கட்டடம் அமைய அடிக்கல்லும் நட்டு கட்டட வேலையை ஆரம்பித்து வைத்தார்.

இதன்பின்பு புதிய மீன் சந்தை திறப்பு விழா நிகழ்வின் போது நினைவு விளம்பரப் பலகையில் எமது சங்கானை பட்டின அபிவிருத்திச்சபையின் பதவி வழி முக்கிய உறுப்பினர்களும் குறித்த புதிய சந்தை அமைப்பதற்கு பொறுப்புக்கூறக்கூடிய உறுப்பினர்களுமான தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோரின் பெயர்களை நினைவு விளம்பரப் பலகையில் பொறிப்பதற்கு பிரதேச சபையின் அனுமதி பெறப்பட்டு பட்டின அபிவிருத்திச்சபையின் செலவிலே, பொறிக்கப்பட்டுள்ளதை நடேசு தயாளன் என்பவருக்கும்,வாசகர்களுக்கும் அறியத்தருவதுடன் குறித்த விடயமாக மீனவருடன் சேர்ந்து காய் நகர்த்துவதைத்

தவிர்த்து வருங்காலத்திலாவது நல்லதைச் சிந்திக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றோம்.

தலைவர், செயலாளர்,உறுப்பினர்கள்
சங்கானை பட்டின அபிவிருத்திசபை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.எஸ். அமைப்பால் ஆயுதங்கள் கொள்ளை

## மனித உரிமைகள் அமைப்புஅறிக்கை

தமஸ்கு, ஜன.23

ஐ.எஸ். அமைப்பு ஆயுத கொள்வனவில் ஈடுபடுவதில்லை. மாறாக ஈராக்கின் இராணுவ ஆயுதக் களஞ்சியங்களில் கொள்ளையடிக்கிறது என மனித உரிமைகள் அமைப்பின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் உலகின் மிக பயங்கரமான அமைப்பு ஐ.எஸ். என்றும், சிரியாவின் பல பகுதிகளை முற்றுகையிட்டுள்ளதோடு, போர்குற்றங்களில் ஈடுபடுவதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈராக்கின் இரண்டாவது பெரிய நகரமான மொசூல், ஈராக்கிய இராணுவத்தால் கைவிடப்பட்டதோடு, ஐ.எஸ். அமைப்புக்கு பலத்த அரணாக அந்த நகரம் அமைந்துள்ளது. சர்வதேச ரீதியில் உற்பத்தி செய்யப்பட்ட ஆயுதங்கள், அமெரிக்க தயாரிப்பிலான ஆயுதங்கள், இராணுவ வாகனங்கள் என்பன கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

மேலும், பிஸ்ரல்கள், சிறிய ஆயுதங்கள், இயந்திரத் துப்பாக்கிகள், பீரங்கி, மோட்டார் ஷெல்கள் மற்றும் டாங்கி எதிர்ப்பு ஆயுதங்கள் என்பவற்றுடன், 90 ஆம் ஆண்டுகளில் உற்பத்தி செய்யப்பட்டவையுடன், 70 ஆம் 80 ஆம் ஆண்டுகளில் ஈரான் – ஈராக் போரின்போது பயன்படுத்தப்பட்டவையும் ஐ.எஸ்ஸினால் கைப்பற்றப் பட்டுள்ளன.

குறைந்தது 34 நாடுகள் ஈராக்குக்கு ஆயுதம் வழங்கி வருகின்றன. அவற்றில் 28 நாடுகள் ஈரானுக்கும் வழங்கி வருகின்றன. மோசமான விதிமுறைகளாலும், திறனற்ற மேற்பார்வையின்மையாலும் ஈராக்கின் நிலைமை மந்தமடைந்துள்ளது.

ஐ.எஸ். அமைப்பிடம் சக்தி வாய்ந்த ஆயுதங்கள் கிடைக்கப்பெற்றதால் ஈராக் தசாப்த கால அழிவை எதிர்நோக்கியுள்ளது என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் அமெரிக்கக் கூட்டுப்படைகள் ஈராக்கில் விட்டுச் சென்ற ஆயுதக்கிடங்குகளில் எஞ்சி இருந்



> ஐ.எஸ். அமைப்பிடம் சக்தி வாய்ந்த ஆயு தங்கள் கிடைக் கப் பெற்றதால் ஈராக் தசாப்பத கால அழிவை எதிர் நோக் கியுள்ளது.

தவற்றை ஐ.எஸ். அமைப்பினர் பாவிப்பதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது எனவும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

2014 ஆம் ஆண்டு அமெரிக்கா ஈராக்குக்கு 500 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான ஆயுதங் களையும், வெடிபொருள் களையும் வழங்கியிருந்தது. ஆயுதக் கலாசாரத்தால் ஈராக்கும், அதைச் சூழவுள்ள பிரதேசங்களும் வாழ்வையும், வாழ்வாதாரங்களையும் இழந்ததுடன், மில்லியன் கணக்கான மக்கள் கடும் சேதங்களுக் குள்ளாகியுள்ளனர்.

ஈராக் மற்றும் சிரியாவின் பாதுகாப்பற்ற ஆயுத இடமாற்றங்களால் இந்தப் பெரும் விளைவு ஏற்பட்டுள்ளது என சர்வதேச மனித உரிமைகள் அமைப்பின் ஆயுதக்கட்டுப்பாடு, பாதுகாப்புத் தொடர்பான ஆய்வாளர் பற்றிக் வில்கென் தெரிவித்துள்ளார். (ஐ–ரி4)


© SWNS

## உலகில் மி…
## வெப்பமா…
## ஆண்டாக…
## 2015 இரு…

### விஞ்ஞானிகள்…

நியூயோர்க், ஜன.23
2015 ஆம் ஆண்டு…
அதிக வெப்பம் பதிவா…
விஞ்ஞானிகள் தெரி…
எல் நினோ பற்றி …
ஆய்வின் ஒரு பகு…
வெப்பநிலை பற்றிய …
ரிக்காவில் உள்ள …
ஒரு மாதத்துக்கு மு…
கினர். இந்த ஆய்வில்…
நிலையை கணக்கி…
பிறகு மிக அதிகம் வெ…
டாக 2015 ஆம் ஆண்…
விஞ்ஞானிகள் தெரி…
1997-1998 ஆம் ஆ…
நினோ காலநிலை…
வெப்பநிலை உயர்ந்…
அதன் பின்னர் 201…
தான் மிக உயர்ந்த அ…
நிலை பதிவாகியுள்ள…
நினோவின் தாக்கம் 20…
வரை தொடரும் எ…
டுள்ளது.
பூமியின் வெப்பநி…
உலகின் முக்கிய நக…
டன், நியூயோர்க், சிட்னி…
ஜெனிரோ, மும்பாய் …
குள் மூழ்கிவிடும் என…
எச்சரிக்கை விடுத்து…

## விஷ ஊசி மூலம் சாவுத் தண்டனை

நியூயோர்க், ஜன.23

அமெரிக்காவின் அலாபாமா மாநிலத்தில்மூன்றாண்டுகளுக்குப் பின்னர் பாலியல் வன்முறைக் குற்றவாளிக்கு சாவுத் தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

23 வயதான தனது நண்பியைக் கொடூரமான முறையில் பாலியல் வன்முறையை மேற்கொண்டு கொன்றதாக கடந்த 1992 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்ட கிறிஸ்டோபர் புரூக்ஸ் (44) என்பவருக்கு அலாபாமா மாநிலத் தில் உள்ள அட்மோர் சிறைச் சாலையில் தனியறையில் நேற்று முன்தினம் விஷ ஊசி ஏற்றப்பட்டுச் சாவுத் தண்டனை நிறைவேற்றப் பட்டதாகச் சிறை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

அலபாமா மாநிலத்தில் கடந்த 2013 ஆம் ஆண்டுக்கு பின்னர் சாவுத் தண்டனை நிறைவேற்றப் பட்டது இதுவே முதன்முறை என்பது குறிப்பிடத்தக்கது. அமெரிக்கா முழுவதும் கடந்த ஆண்டில் 28 குற்றவாளிகளுக்கும், இந்த ஆண்டின் முதல் 21 நாள்களுக்குள் மூன்று குற்றவாளிகளுக்கும் இதே முறையில் சாவுத் தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. (ஐ)

## அணு ஆயுத விவகாரச் சிக்கலில் சவூதி அரேபியா

இஸ்லாமாபாத்,ஜன.23

ஈரானை சமாளிப்பதற்காக பாகிஸ்தானிடமிருந்து சவூதி அரேபியா அணு ஆயுதங்களை விலைக்கு வாங்குவதாக வெளியான தகவலை சவூதி அரேபியா மறுத்துள்ளது.

நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்ய எத்தகைய நடவடிக்கையையும் எடுப்போம் எனவும் சவூதி அரேபியா சூசக மாகப் பதில் அளித்துள்ளது.

ஈரான், லிபியா மற்றும் வடகொரியா போன்ற நாடுகளுக்கு அணு ஆயுதத் தொழில்நுட்பத்தைக் கசிய விட்டதால் பாகிஸ்தான் மீது சர்வதேச சமூகத்தின் கவனம் முழுமையாக படர்ந்துள்ளது. இந்தச் சூழலில் சவூதி அரேபியாவுக்கு மறைமுகமாக அணு ஆயுதங்களை விற்க முயன்றால், அந்த நாட்டுக்கு கடும் சிக்கல் ஏற்படும் என அமெரிக்கா இந்த விவகாரத்தைக் கண்டித்தது குறிப்பிடத்தக்கது. (ஐ)





ஒரு நூற்றாண்டுக்கும் மேல் அழிந்த இனமாக பிரகடனப்படுத்தப்பட்ட மரத்தவளை இந்தியாவில் மீண்டும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சீனா, தாய்லாந்து ஆகிய பகுதிகளிலும் இந்த தவளை கண்டறியப்பட்டதாக நம்பப்படுகிறது. இந்தத் தவளையை ஆய்வு செய்ததில் புதிய இன வகை என இனம் காணப்பட்டுள்ளது. கோல்ப் பந்து அளவிலான இந்தத் தவளை, நிலத்திலிருந்து 6 மீற்றர் உயரத்தில் மரப்பொந்துகளில் வாழும். உயரமான வசிப்பிடத்தைக் கொண்டதால் பல விஞ்ஞானிகளின் கண்ணுக்குப் புலப்படாமல் இருந்திருக்கலாம் என பலரும் கருத்துத் தெரிவித்துள்ளனர். (ஐ–ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ஹொங்கொங் நகரில் 270 பேர் தாம் வளர்க்கும் செல்லப்பிராணிகளான நாய்களுடன் யோகாசனத்தில் ஈடுபட்டுள்ளனர். 30 நிமிடங்கள் இடம் பெற்ற இந்த யோகா பயிற்சி, மக்களின் பார்வைக்காக பொது இடத்தில் நடத்தப்பட்டது. டோகா எனப் பெயரிடப்பட்ட இந்த நிகழ்வு கின்னஸ் உலக சாதனைப்பதிவுக்காக நிகழ்த்தப்பட்டுள்ளது. (ஐ-ரி4)

## மிக
## மான
## ாக
## இருந்தது

*ிகள் தகவல்*

ன.23
ண்டு தான் உலகில்
பதிவான ஆண்டு என
தெரிவித்துள்ளனர்.
றி மேற்கொள்ளும்
பகுதியாக உலக
றிய ஆய்வை அமெ
ள்ள விஞ்ஞானிகள்
து முன்னர் தொடங்
வில் பூமியின் வெப்ப
னக்கிடத் தொடங்கிய
ம் வெப்பம் மிக்க ஆண்
ஆண்டு பதிவானதாக
தெரிவித்துள்ளனர்.
ம் ஆண்டுகளில் எல்
நிலையின் போது
யர்ந்து காணப்பட்டது.
2015 ஆம் ஆண்டு
த அளவிலான வெப்ப
புள்ளது. மேலும் எல்
கம் 2016 ஆம் ஆண்டு
ம் என்றும் கூறப்பட்

பநிலை உயர்ந்தால்
நகரங்களான லண்
சிட்னி, ஷங்காய், ரியோடி
பாய் ஆகியவை நீருக்
ம் என விஞ்ஞானிகள்
த்துள்ளனர். (ஐ)



# பத்தாயிரம் வருடங்கள் கடந்த மனித எலும்புக் கூடுகள் மீட்பு

நைரோபி, ஜன.23

வட கென்யாவில் தொல்பொருள் ஆய்வாளர்கள் 10 ஆயிரம் வருடங்களுக்கு முந்தைய மனிதர்களின் எலும்புக் கூடுகளை கண்டெடுத்துள்ளனர். இவர்கள் வேட்டையாடுபவர்களும், சேகரிப்பவர்களும் என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.



மேலும் அவர்கள் வன்முறைச் சம்பவம் மூலம், அதாவது அவர்களுக்கிடையே ஏற்பட்ட போரின் போது உயிரிழந்துள்ளனர். ருர்கனா ஏரி பகுதியில் குறித்த எலும்புக் கூடுகள் கண்டெடுக்கப்பட்டன. கண்டெடுக்கப்பட்ட 27 எலும்பு கூடுகளும் இறந்த பின்பு புதைக்கப்பட்டுள்ளன.


2012 ஆம் ஆண்டிலிருந்து ஆய்வாளர்கள் குறித்த பகுதியை ஆராய்ந்து வருகின்றனர். உண்மையில் என்ன நடந்தது என்பது பற்றி எமக்கு தெரியாது. ஆனால் பல மக்கள் ஒன்றாக இறந்திருப்பதால் ஏதோ ஒரு வகை மோதல் இடம் பெற்றுள்ளது என கேம்பிறிஜ் பல்கலைக்கழகப் பேராசிரியர் ரோபேட் போலே இது குறித்து தெரிவித்துள்ளார்.

எலும்புகள் கிடைக்கப்பெற்ற இடத்தில் கூரிய அம்பு, ஈட்டி, அரிய கருமையான எரிமலைக் கல், முனைப்பூண் பூட்டப்பட்ட தடிகள் என்பனவும் கண்டெடுக்கப்பட்டன. (ஐ-ரி4)

# ஈரானில் பொருளாதார தடையை விலக்குவதாக ஜப்பான் அறிவிப்பு

டோக்கியோ, ஜன.23

அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளைத் தொடர்ந்து ஈரான் மீது விதிக்கப்பட்டிருந்த பொருளாதாரத் தடையை விலக்கிக் கொண் டுள்ளதாக ஜப்பான் அறிவித்துள்ளது.



ஐக்கிய நாடுகள் சபையின் கட்டுப்பாட்டை மீறிய வகையில் அணு ஆயுதங்களை வைத்திருப்பதாக ஈரான் மீது குற்றம் சாட்டிய அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் ஐரோப்பிய நாடுகள் ஈரான் மீது பொருளாதார மற்றும் வர்த்தகத் தடையை விதித்தன. அந்தத் தடையை நீக்க வேண்டுமானால் சர்வதேச அணு ஆயுதத் தடை ஒப்பந்தத்தில் கண்டுள்ள நிபந்தனைகளை ஈரான் பின்பற்ற வேண்டும் என நிபந்தனை விதிக்கப்பட்டது.

தன்வசமுள்ள அணு ஆயுதங்களையும், அணு தயாரிப்புத் திட்டங்களையும் அழிக்க முதலில் மறுத்த ஈரான், பின்னர் சர்வதேச நெருக்கடிக்கு பணிந்தது. இதையடுத்து, அணு செறிவூட்டல் மற்றும் அணு ஆயுதத் தயாரிப்பை நிறுத்திக்கொள்வதாக ஈரான் அறிவித்தது.

இந்த நாடுகளைப் பின்பற்றி உலகின் பலநாடுகளும் ஈரான் மீதான பொருளாதாரத் தடையை விலக்கிக் கொண்டன. ஆனால், சுமார் ஒருவார காலமாக இந்த விவகாரத்தில் அமைதிகாத்து வந்த ஜப்பான் அரசு, ஈரான் மீதான பொருளாதாரத் தடையை விலக்கிக் கொள்வதாக நேற்று முன்தினம் அறிவித்துள்ளது.

செய்தியாளர்களைச் சந்தித்த ஜப்பான் அரசின் தலைமைச் செயலாளர் யோஷிஹிடா சுகா இதற்கான அறிவிப்பை முறைப்படி வெளியிட்டார். (ஐ)

# 2050 இல் கடலில் மீன்கள் இருக்காது

*உலக பொருளாதார பேரவை தகவல்*

தாவோஸ், ஜன.23



உலகம் முழுவதும் ஓர் ஆண்டுக்குக் குறைந்தது 8 மில்லியன் தொன்கள் அளவுக்கு பிளாஸ்ரிக் குப்பைகள் கடலில் கொட்டப்பட்டு வருகின்றன. இதற்கு உடனடியாகத் தீர்வு காணப்படாவிட்டால் 2030 ஆம் ஆண்டுக்குள் இரு மடங்காகும் நிலை ஏற்படவுள்ளது. இதுவே, 2050 ஆம் ஆண்டுக்குள் 4 மடங்காக அதிகரித்து விடும். இதன் எதிரொலியாக, கடலில் மீன்களை விட பிளாஸ்ரிக் குப்பைகளே அதிகம் இருக்கும் அபாயமான நிலை உருவாகும்.

தற்போது, கடலில் 150 மில்லியன் தொன்களுக்கும் அதிகமாக பிளாஸ்ரிக் குப்பைகள் உள்ளன. கடந்த 50 ஆண்டுகளில் பிளாஸ்ரிக் பயன்பாடு 20 மடங்காக அதிகரித்துள்ளது. அடுத்த 20 ஆண்டுகளில் இது மேலும் இரட்டிப்பாகும் அபாயமும் உள்ளது. பெரும்பாலான பிளாஸ்ரிக் பொருள்கள் ஒருமுறை மட்டுமே பயன்படுத்தக் கூடியனவாக இருக்கின்றன. இந்தத் தகவலை உலக பொருளாதார பேரவை அமைப்பு வெளியிட்டுள்ளது. (ஐ)

# ஆப்கானிஸ்தானில் தாக்குதல் பத்திரிகையாளர் 7 பேர் சாவு



காபூல், ஜன.23

ஆப்கானிஸ்தானில் அரசுக்கு எதிராக தலிபான் தீவிரவாதிகள் சண்டையிட்டு வருகின்றனர். சமாதானப் பேச்சு மூலம் இந்தச்சண்டையை முடிவுக்குக் கொண்டு வர அரசு தீவிரமாக செயற்பட்டு வருகிறது. சமாதானப் பேச்சில் உடன்பாடு இல்லாத தலிபான் தீவிரவாதிகள் அரசின் முயற்சியைச் சீர்குலைக்க தொடர் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். ஆப்கானிஸ்தானில் இந்த மாதத் தொடக்கத்தில் இருந்து ஏராளமான தற்கொலைப்படைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. இதில் ராணுவ வீரர்கள் மற்றும் அப்பாவி மக்கள் என பலர் கொன்று குவிக்கப்பட்டு உள்ளனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் தலைநகர் காபூலில் நாடளுமன்றம் அருகே 'டோலோ நியூஸ்' சனலில் பணியாற்றும் பத்திரிகையாளர்கள் மினி பஸ் ஒன்றில் சென்று கொண்டிருந்தனர்.

அப்போது வெடிகுண்டுகள் நிரப்பிய காரைச் செலுத்தி வந்த தீவிரவாதி, மினி பஸ் மீது காரை மோதி வெடிக்கச் செய்தார். அது பயங்கரச் சத்தத்துடன் வெடித்துச் சிதறியது. அந்த பஸ்சில் இருந்த பத்திரிகையாளர்கள் 7 பே[ர்] சம்பவ இடத்திலேயே பரிதாபமா[க] உயிரிழந்தனர். மேலும் இந்தக் குண்[டு] வெடிப்பின் போது அந்தப் பகுதியி[ல்] இருந்த பெண்கள், சிறுவர்கள் உட்ப[ட] 25 பேர் படுகாயம் அடைந்தனர்.

கடந்த ஆண்டு குண்டூஸ் நகரி[ல்] நடைபெற்ற சண்டையின் போ[து] தலிபான் தீவிரவாதிகள் அரங்கேற்றி[ய] சாவுத் தண்டனை, ஆள்கடத்தல் போன்றவை பற்றி டோலோ நியூ[ஸ்] சேனல் செய்திகள் வெளியிட்டது. அதற்கு தலிபான் தீவிரவாதிக[ள்] நேரடி மிரட்டல் விடுத்ததும் நினை[வு] கூரத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2016 உங்களுக்கு எப்படி?

## கன்னி

சூழ்நிலைக்குத் தக்கவாறு தங்களை மாற்றியமைத்துக்கொள்ளக்கூடிய நற்பண்புகளைக் கொண்ட கன்னி ராசி நேயர்களே! உங்கள் ராசியாதிபதி புதனுக்கு நட்பு கிரகமான சனி இந்த 2016-ஆம் ஆண்டில் முயற்சி ஸ்தானமான 3-ஆம் வீட்டில் சஞ்சாரம் செய்வது மிகவும் அற்புதமான அமைப்பாகும். இதனால் உங்களுக்கு முன்னேற்றங்கள் தேடிவரும். நீங்கள் நினைத்ததெல்லாம் நடக்கும். சுபகாரியங்கள் நடைபெற்று மகிழ்ச்சியளிக்கும். பணவரவுகள் தாராளமாக அமைவதால் குடும்பத் தேவைகளனைத்தும் பூர்த்தியாகும். பொன், பொருள் சேரும். வீடு, மனை, வண்டி வாகனங்கள் வாங்கக்கூடிய யோகம் அமையும். 08-01-2016 முதல் கேது பகவான் ருண ரோக ஸ்தானமான 6-ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் தொழில், உத்தியோகம் செய்பவர்களும் எதிர்பாராத உயர்வுகளையும், லாபங்களையும் பெற முடியும். மறைமுக எதிர்ப்புகள் மறையும். குரு, ஆண்டின் தொடக்கத்தில் 12-ஆம் வீட்டிலும் 02-08-2016 முதல் ஜென்ம ராசியிலும் சஞ்சாரம் செய்யவிருப்பதால் பணக் கொடுக்கல்- வாங்கல் போன்ற விடயங்களில் கவனமுடன் நடந்துகொள்வது நல்லது.

குடும்பத்தில் உள்ளவர்களையும், உற்றார்-உறவினர்களையும் அனுசரித்து நடந்துகொள்வதும் உடல் ஆரோக்கியத்தில் சற்றுக் கவனம் செலுத்துவதும் நல்லது. சில நேரங்களில் எல்லாம் இருந்தும் அனுபவிக்கமுடியாத நிலை ஏற்படும். தேவையற்ற பயணங்களால் அலைச்சல்கள் அதிகரிக்கும். சனி பலமாக சஞ்சாரம் செய்வதால் நீங்கள் நினைத்ததெல்லாம் நிறைவேறும்.

### உடல் ஆரோக்கியம்

உங்களது உடல் ஆரோக்கியம் அற்புதமாக இருக்கும். சிறுசிறு பாதிப்புகள் தோன்றினாலும் உடனே சரியாகிவிடும். உணவு விடயங்களில் கட்டுப்பாட்டுடன் இருப்பதும் நேரத்திற்கு உணவு உட்கொள்வதும் அஜீரணக் கோளாறுகள் உண்டாவதை தவிர்க்க உதவும். குடும்பத்தில் உள்ளவர்களால் சிறிது மருத்துவச் செலவுகள் ஏற்பட்டாலும் பெரிய கெடுதிகள் ஏற்படாது.

### குடும்பம், பொருளாதார நிலை

கணவன்- மனைவி உறவு சிறப்பாக இருக்கும். பண வரவுகள் சிறப்பாக அமைந்து கடன்கள் சற்றுக் குறையும். புத்திர வழியில் பூரிப்பு, மகிழ்ச்சி உண்டாகும். மங்கலகரமான சுபகாரியங்களும் கைகூடும். பொன், பொருள், ஆடை, ஆபரணம் சேரும். உறவினர்களால் மகிழ்ச்சி ஏற்படும்.

### உத்தியோகம்

இந்த ஆண்டு உங்களுக்கு ஏற்ற இறக்கமான பலன்களைத் தருவதாக இருக்கும். எதிர்பார்த்த பதவி உயர்வுகளும் ஊதிய உயர்வுகளும் கிடைக்கப்பெறும். சிலர் நினைத்த இடத்துக்கு மாற்றலாகி குடும்பத்தோடு சேருவார்கள். உயரதிகாரிகளின் ஆதரவுகள் சிறப்பாக அமையும்.

### தொழில், வியாபாரம்

தொழில், வியாபாரம் செய்பவர்களுக்கு நல்ல லாபமும் வெளியூர், வெளிநாட்டு தொடர்புடையவற்றால் அனுகூலமும் உண்டாகும். எடுக்கும் புதிய முயற்சிகள் அனைத்திலும் வெற்றிகளைப் பெறமுடியும். எதிர்பாராத பயணங்கள் உயர்வுகள் உண்டாகும். கூட்டாளிகளும் தொழிலாளர்களும் ஒற்றுமையுடன் செயற்படுவார்கள். பெரிய முதலீடுகளை ஈடுபடுத்திச் செய்யநினைக்கும் காரியங்களில் மிகவும் கவனத்துடன் நடந்துகொள்வது நல்லது.

### கொடுக்கல்- வாங்கல்

கமிஷன், ஏஜென்ஸி, ஒப்பந்தம் போன்ற துறைகளில் உள்ளவர்களுக்கு புதிய முயற்சிகளில் வெற்றியும் சிறப்பான லாபங்களும் உண்டாகும். கொடுக்கல்- வாங்கல் சரள நிலையில் இருக்கும். பெரிய முதலீடுகளை ஈடுபடுத்தும்போது கவனத்துடன் இருப்பது நல்லது.

### அரசியல்

உங்களின் பெயர், புகழ் யாவும் உயரக்கூடிய காலம் ஆகும். மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை காப்பாற்றிவிட முடியும் என்பதால் அவர்களின் அமோக ஆதரவினைப் பெறமுடியும். மேடைப் பேச்சுகளில் சற்றுக் கவனமுடன் பேசுவது நல்லது. சில நேரங்களில் கட்சிப் பணிக்காக நிறைய செலவுகள் செய்யவேண்டிய சூழ்நிலையும் அதனால் வீண் விரயங்களும் ஏற்படும்.

### கலைஞர்கள்

சிறப்பான வாய்ப்புகள் கிடைக்கப்பெற்று மனமகிழ்ச்சி ஏற்படும். பெரிய மனிதர்களின் ஆதரவும், பாராட்டுதல்களும் கிடைக்கப்பெறும். வெளியூர், வெளிநாடுகளுக்கும் படப்பிடிப்பு விடயமாக செல்லநேரிடும். பொருளாதார நிலை சிறப்பாக இருக்கும்.

### விவசாயிகள்

பயிர் விளைச்சல் சிறப்பாக அமைய, நிறைய உழைக்கவேண்டியிருந்தாலும் எதிர்பார்த்த அளவுக்கு லாபம் கிடைக்கும். முதலீட்டுக்கு பங்கம் ஏற்படாது. புதிய யுக்திகளைக் கையாண்டு உற்பத்தியைப் பெருக்கும் முயற்சியில் ஈடுபடுவீர்கள். உடல் நிலையில் சற்று கவனம் எடுக்கவும்.

(தொடரும்)

# நாளை தைப்பூசத்தன்று இணுவைக்கந்தனின் உலகப்பெருமஞ்ச பவனி



தைப்பூச திருநாளில்
ஊர்பேச உலாவரும்
என் இணுவைக்கந்தனே !

வீதியிலே நீ வந்தால்
வேதனைகள் தீருமையா
சேதி சொல்ல ஒன்றுமில்லை
பார்க்க மட்டும் வழி உண்டா – உனை
பார்க்க மட்டும் வழி உண்டா ?

பெருமஞ்ச பவனி காண
பெருந்திரள் கூட்டமொன்று
கடல் அலையாய் மோதுவது
உன்னருள் பெறத்தானே

உன்னழகை நாம்காண
உலாவரும் எம்மவரே
ஊரவர் குறைதீர்ப்பீரோ
உலகை ஆளும் பெருந்தகையே !

விடாத்துயர் கண்ட இனம்
விருப்புடன் இனிதே வாழ
கனிந்தருள வேண்டுமையா – கந்தனே
நீயருள [illegible] அப்பா.





இணுவை சபேசன்
(லண்டனில் இருந்து)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பரியோவான் கல்லூரியின் பொக்கிஷம் தலைமை ஆசிரியர் எஸ்.பி.ஜீவானந்தம்

## மாணவனாகிய நீதிபதி இளஞ்செழியனின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும், சமர்ப்பணமும்



பரியோவான் கல்லூரியின் பொக்கிஷம் தலைமை ஆசிரியர் எஸ்.பி. ஜீவானந்தம் அவர்கள். ஆசிரியர் திலகமாக அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்களுக்கு எடுத்துக் காட்டாக வாழ்ந்த ஓர் உதாரண புருஷர். நல்லொழுக்கமான மாணவர்களை உருவாக்கப் பாடுபட்ட ஓர் ஆசிரியப்பெருந்தகை.

ஒவ்வொரு மாணவனின் மீதும் தனிப்பட்ட கவனங்களைச் செலுத்தி அவனுள் ஒளிந்திருக்கும் திறமைகளை வெளிக்கொணர்ந்து மாணவர்களைச் சாதனையாளர்களாக உருவாக்கிய ஒரு பெருந்தகை.

மாணவர்கள் ஒழுக்கமில்லாத போதும் ஆசிரியர்கள் ஒழுக்க சீலர்களாக இருக்க வேண்டும்.

மாணவர்கள் கல்வியில் தேர்ச்சி அடையாத போது ஆசிரியர்கள் அவர்களின் வேதனைகளில் பங்குகொண்டு அவர்களைச் சாதனையாளர்களாக மாற்ற வேண்டும். மாணவர்கள் கல்வியில் முதலிடத்தை அடையும்போது அவர்களைச் சாதனையாளர்கள் ஆக்கிய ஆசிரியர்களுக்கு சமூகத்தில் மதிப்பளிக்கப்பட வேண்டும்.

கண்டிப்புள்ள ஆசிரியர்கள் நல்லொழுக்கமான மாணவனை உருவாக்குவார்கள். ஆசிரியர்கள் அன்புடனும், பண்புடனும் கலாசார விழுமியங்களுடனும் போதனைகளில் ஈடுபட வேண்டும்.

ஒவ்வொரு மாணவனின் இலட்சியக் கனவுகளை நிவர்த்தி செய்யும் சாதனையாளர்களாக ஆசிரியர்கள் உருவாக வேண்டும். சாதனைகள் படைப்பது பெருமையல்ல. சோதனைகள் எழுதி, வேதனைகள் பட்டு, சாதனைகள் படைக்கும் ஒவ்வொரு மாணவனின் வெற்றிக்குப் பின்னால் ஆசிரியர்கள் குழாம் இருக்கின்றது என்பது மறக்க முடியாத உண்மை. இத்தகைய அனைத்து உதாரணங்களுக்கும் உதாரண புருஷராக வாழ்ந்து காட்டியவர் அமரர் எஸ்.பி.ஜீவானந்தம் அவர்கள். ஒரு மாணவன் சாதனையாளனா? அல்லது கல்வியில் தோல்வி கண்ட வேதனையாளனா? என்பது முக்கியமல்ல. ஒழுக்கமான பழக்க வழக்கத்துடன் கல்வியைக் கற்றாலே அவன் சாதனையாளன். ஒழுக்கமற்ற கல்வி வேதனைக்குரியது. திறமை என்பது ஒழுக்கத்துடன் சம்பந்தப்பட்டது. ஒழுக்கமில்லாத திறமை, ஒழுக்கமில்லாத கல்வி, ஒழுக்கமில்லாத சாதனை சமூகத்துக்கு உதவாது. சோதனைகள் எழுதுகின்றோம்; வேதனைகள் அனுபவித்து சாதனைகள் படைக்கின்றோம், சாதனைகளின் முடிவில் அந்த மாணவனின் ஒழுக்கம் முக்கியமாகக் கவனத்தில் எடுக்கப்படுகின்றது. அவன் தான் நாளைய சமுதாயத்தின் தலைவன் ஆகின்றான். அத்தகைய ஒழுக்கமுள்ள மாணவர்களை இனங்கண்டு அவர்களைச் சாதனையாளர்களாக்கிய பெருமை எஸ்.பி.ஜீவானந்தம் அவர்களுக்கு உரியதாகும்.

> "சோதனைகள் எழுதுகின்றோம்; வேதனைகள் அனுபவித்து சாதனைகள் படைக்கின்றோம், சாதனைகளின் முடிவில் அந்த மாணவனின் ஒழுக்கம் முக்கியமாகக் கவனத்தில் எடுக்கப்படுகின்றது. அவன் தான் நாளைய சமுதாயத்தின் தலைவன் ஆகின்றான். அத்தகைய ஒழுக்கமுள்ள மாணவர்களை இனங்கண்டு அவர்களைச் சாதனையாளர்களாக்கிய பெருமை எஸ்.பி.ஜீவானந்தம் அவர்களுக்கு உரியதாகும்."

ஒரு மாணவனை ஆசிரியர் எஸ்.பி.ஜீவானந்தம் அவர்கள் எப்படிச் சிற்பமாகச் செதுக்கினார் என்பதை இந்தச் சிறுகுறிப்பு உண்மைக் கதையாக வெளிவருகின்றது.

அந்த மாணவன் 1974 இல் பரியோவான் கல்லூரியில் நுழைந்தான். பேச்சுப் போட்டியில் முதலிடத்தைப் பெற்றான். ஆசிரியர் ஜீவானந்தம் அவர்கள் அவனைத் தட்டிக்கொடுத்து நீ வைத்தியராகவோ, பொறியியலாளராகவோ வரத் தேவையில்லை, அப்புக்காத்தாக வாடா எனக் கூறினார். க.பொ.த. உயர்தரத்தில் சித்தியடைந்தபோது சட்டம் படிக்கச் சொன்னார். சட்டத்தரணியாக வந்தபோது பிரபல சட்டத்தரணி குமார் பொன்னம்பலத்திடம் அவனை அழைத்துச்சென்று, அவருடைய கனிஷ்ட சட்டத்தரணியாகச் சேர்த்துவிட்டார். காலம் கனிந்தது. அந்த மாணவனை நோக்கி நீதி ராசாவாக வா எனச் சொன்னார். சிறிது காலத்தின் பின்னர் நீ மேல் நீதிமன்ற நீதிபதியாக வா என்று சொன்னார். 2015, மாசி மாதம் நீ யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதியாக வா எனக் கூறினார். அந்த மாணவன் அவரிடம் சென்று ஆசி பெற்றான். நல்லொழுக்கமுள்ள மாணவர்களை உருவாக்கினேன். யாழ்ப்பாணத்தில் நல்லொழுக்கமுள்ள மாணவர் சமுதாயத்தை நீ வழி நடத்து.

மாணவர் சமுதாயத்திலிருந்து போதைவஸ்துக் குற்றங்களை இல்லாது ஒழி. மாணவர்கள் சாதனையாளர்களாக, நல்லொழுக்க சீலர்களாக உருவாகுவதற்கு உன் கையிலிருக்கும் சட்ட அதிகாரத்தைப் பாவி. இறுதியாக மாணவர்களைத் தண்டிக்கக்கூடாது, கண்டிப்புடன் நடத்து என்றார்.

அவருடைய இலட்சியக் கனவில் மிதந்த மாணவன் நீதிபதி இளஞ்செழியன் ஆகிய யான் என்பதைப் பெருமையுடன் கூறுவதில் மகிழ்ச்சியடைவதுடன், இன்று நடைபெறும் அமரர் எஸ்.பி.ஜீவானந்தம் அவர்களின் ஆத்மாசாந்திப் பூசையில் பிரார்த்தனையில் ஈடுபடும் அனைவருக்கும் பிரார்த்தித்து எனது இச்சிறு குறிப்பை அவருக்குச் சமர்ப்பணமாக முன்வைக்கின்றேன்.

---

## வல்லவன்

# வீதி விபத்துகளை குறைக்கும் வழிகள்



வீதி விபத்துகளில் சிக்கி உயிர் இழப்பவர்களையும், உறுப்புகளை இழப்பவர்களையும் கணக்கெடுத்துப் பார்த்தால், அவர்களுள் படித்தவர்களே அதிகம் பேர் என்பது தெரியவரும். பதினெட்டு வயது முதல் முப்பது வயதுக்கு உட்பட்டவர்களே மிகுதியாக வீதி விபத்துகளில் உயிரிழக்கிறார்கள் என்று ஒரு புள்ளி விவர அறிக்கை கூறுகிறது. இதற்கு முக்கிய காரணம் பாடசாலைப் பருவத்தில் வீதி விதிகளை முறையாகச் சொல்லித் தராததே ஆகும்.

முதல் வகுப்பிலிருந்தே ஒரு புதுவகை ஆத்திச்சூடியைச் சொல்லித்தர வேண்டும்.

- அதிவேகம் ஆபத்து
- ஆபத்தை உணர் ■ இயல்பாய் ஓட்டு
- ஈனம் குடித்து ஓட்டுதல்
- உரிமம் வேண்டும்
- ஊர்தியை நிறுத்தி செல்பேசு
- எப்பொழுதும் தலைக் கவசம் அணி
- ஏறாதே சரக்கூர்தியில்
- ஐயமற விதியறி ■ ஒப்பிலாதது உயிர்
- ஓம்புக ஊர்தியை ■ ஔடதம் பொறுமை

தொடக்கப் பள்ளி முதல் பல்கலைக்கழகம் ஈறாக பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாகவே வீதி விதிகள் பற்றிய பாடங்கள் அமைய வேண்டும்.

மனிதருக்கு இயற்கையாய் உள்ள ஐந்து உணர்வுகளோடு வீதி உணர்வு என்பது ஆறாவது உணர்வாக அமையும் வகையில் கிளிப்பிள்ளைக்குச் சொல்லிக் கொடுப்பதுபோல சொல்லித்தர வேண்டும். வீதி வெறிச்சோடிக் கிடந்தாலும் வீதிச் சந்திப்புகளில் ஒளிரும் சிவப்பு விளக்கை மதித்து நின்று செல்ல வேண்டும். வாகனத்தை நிறுத்திப் பேசினால், அது செல்போன். வாகனத்தை ஓட்டியபடி பேசினால் அது கொல்போன். மது அருந்தி ஓட்டுதல் மடத் தனம். இவற்றை எல்லாம் பதின் பருவத்தினர் மனத்தில் பதிவு செய்ய வேண்டும்.

இவ்வாறு செய்தால் வீதி விதிகளைப் பின்பற்றுதல் என்பது ஓர் அனிச்சைச் செயலாக மாறிவிடும். ஒரு தலைமுறை மக்கள் வீதி விதிகளைப் பின்பற்றி வாழ்ந்தால் அது கருப்பதிவாக மாறும். அடுத்தத் தலைமுறையினர் கல்லாமலேயே வீதி விதிகளைப் பின்பற்றுவர்.

அடுத்து, வீதி விதிகளை மீறுவோரை அரசு இரும்புக்கரம் கொண்டு அடக்க வேண்டும். ஆயிரக் கணக்கில் அபராதம் விதிக்க வேண்டும். மூன்று முறைகள் அபராதம் செலுத்திய ஒருவர் நான்காம் முறையாகத் தவறு செய்தால் ஓட்டுநர் உரிமத்தை நீக்கி விட வேண்டும். சுய கட்டுப்பாடும் சுய ஒழுங்கும் இல்லாதவர்களை இப்படித்தான் திருத்த வேண்டும்.

வீதி விபத்துகளுக்கான மற்றொரு முக்கிய காரணம் உண்டு. பழைய உதிரிப்பாகங்கள் அல்லது தரக் குறைவான உதிரிப் பாகங்கள் பயன்படுத்தப்படுவதால் ஓட்டு நரின் கட்டுப்பாட்டை இழந்து வாகனங்கள் விபத்துக்குள்ளாகின்றன.

நாடு முழுவதும் தரச் சான்று பெற்ற முதல் தர உதிரிப் பாகங்கள் மட்டுமே விற்பனை செய்யப்பட வேண்டும். பழைய உதிரிப்பாகங்கள் விற்பனைக்குத் தடைவிதிக்க வேண்டும்.

தலைக்கவசம் அணியாமலும் அல்லது முறையாக அணியாமலும் ஓட்டுவது, இருக்கைப் பட்டி போடாமல் ஓட்டுவது இவற்றால் தான் விபத்துக் காலங்களில் அதிகமான உயிரிழப்பு ஏற்படுகிறதாம். தலைக்கவசத்தையும் இருக்கைப் பட்டியையும் முறையாகப் பயன்படுத்தினால் மட்டுமே ஊர்தியை இயக்க முடியும் என்ற வகையில் ஊர்திகளை வடிவமைக்க வேண்டும்.

சாலைகள் குண்டும் குழியுமாகக் கிடப்பதும் விபத்துக்கான இன்னொரு காரணமாகும்.

எனவே முன்னுரிமை அடிப்படையில் அரசினர் வீதிப் பராமரிப்பை மேற்கொள்ள வேண்டும்.

கெரில்லாப் போர்முறை என்று ஒரு வகை உண்டு. மறைந்திருந்து தாக்குதலே இதன் சிறப்பம்சமாகும். இதே முறையில் வாகன விபத்துகள் ஏற்படுகின்றன.


வேலியே பயிரை மேய்ந்த கதையாக, பல சமயங்களில் வேகத் தடைகளே விபத்துகளுக்குக் காரணமாகின்றன. அவற்றின் உயரம், அகலம், எண்ணிக்கை முதலியவை கருத்தில் கொள்ளப்படுவதில்லை.

அதி தூரப்பயணம் அதிவேகப் பயணமாக மாறி விபத்துகள் ஏற்படுகின்றன. அத்தி பூத்தது போல சாலை ஒழுக்கம் தொடர்பான விளம்பரங்கள் இப்போது ஊடகங்களில் வருகின்றன. இவை பரவலாக்கப்பட வேண்டும். இவை பொதுமக்களிடையே பெரிய அளவில் விழிப்புணர்வை ஏற்படுத்தும்.

இவ்வாறு பல வழிகளிலும் சிந்தித்துச் செயல்பட்டால் வீதி விபத்துகளைக் குறைத்துக் கொள்ள முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்ணம் தீட்டலாம் வாங்க!



## வரலாற்றில் இன்றைய தினம்

393 – ரோமன் பேரரசர் தியோடோஸியஸ் தனது 7வயது மகன் ஹொனோரியை இணைப் பேரரசராகப் பிரகடனம் செய்தார்.
1849 – அமெரிக்காவின் முதற் பெண் மருத்துவரானார் திருமதி எலிசபெத் பிளக்வெல்.
1899 – பிலிப்பைன்ஸ் மக்கள் குடியரசின் முதலாவது ஜனாதிபதியாக எமிலியோ அகியூனால்டோ பதவிப் பிரமாணம்.
1943 – திரிப்போலிக்குள் பிரித்தானியாவின் 8ஆவது படைப்பிரிவு அணி வகுப்பு.
1961 – அரசியல்யாப்பு வெனிசுவெலாவில் பின்பற்றத் தொடங்கப்பட்டது.
1972 – இஸ்தான் புல்லில் உள்ள அனைத்து மக்களும்24 மணி நேர வீட்டுத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர்.
1973 – வியட்நாம் போர் முடிவுக்குக் கொண்டுவரப்படுவதற்கான உடன்பாடு எட்டப்பட்டதாக அமெரிக்க ஜனாதிபதி நிக்ஸன் அறிவிப்பு.
1973 – நைஜீரியா கனோவில் ஜோர்டான் விமானம் விபத்துக்குள்ளாகியதில் 176 முஸ்லிம் யாத்திரிகர்கள் சாவு.
1994 –ஜேர்மனியில் வெளிநாட்டு அகதிகள்மீது தீக்குண்டு வீச்சு.
1994 – குடாநாட்டில் இடம்பெயர்ந்தோர் தொகை 2லட்சத்து 25ஆயிரம். மாதம் 5கோடி செலவாம்.
1994 – வாழ்க்கைக்கு உதவுவதே உண்மையான கல்வி என யாழ். கனகரத்தினம் ம.ம.வி.விஞ்ஞான தினத்தில் அதிபர் அ.பஞ்ச லிங்கம் உரை.
1995 – தமிழர்களின் அபிலாஷைகளை நன்கு அறிந்தவன் நான் என ஆளுநர் பொன்சேகா, வடக்கு கிழக்கு மாகாண ஆளுநராகப் பதவி பொறுப்பேற்ற நிலையில் தெரிவிப்பு.
1995 – புதிய அரசியலமைப்பு நகல் திட்டத்தை அரசமைப்பு விவகார அமைச்சர் பீரிஸ் வெளியிட்டார்.
1995 – வடக்கு – கிழக்குப்பிரச்சினை தொடர்பாக அரசு தீர்வை முன் வைக்க வேண்டும் என வாசுதேவா கருத்து.
1995 – முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜோன் எப் கென்னடியின் தாயார் றோஸ் கென்னடி தனது 104 ஆவது வயதில் காலமானார்.
2004 – புலிகள் பொறுப்புணர்ச்சியுடன் செயற்படுகின்றனர் என ரூபவாகினிப் பேட்டியில் சந்திரிகா தெரிவிப்பு.
2004 – சமாதான வயலில் அறுவடை செய்யக் காத்திருந்த போது, அதனுள் எருமைகளை விரட்டிவிட்டுள்ளார் ஜனாதிபதியென நீதியமைச்சர் லொக்கு பண்டார சாடல்.
2007 – கொழும்பு கோட்டையில் ஊடகவியலாளர்கள் ஒன்று கூடி ஆர்ப்பாட்டம்.
2007 – கடந்த வருடம் 583பேர் குடாநாட்டில் காணாமற் போயினர். மனித உரிமை ஆணைக்குழுவில் பதிவு.
2008 –இடைக்காலத் தீர்வுத் திட்டம் ஜனாதிபதியிடம் கையளிப்பு.
2015 – சல்மான் பின் அப்துல் அஸிஸ் அல் சவுட் சவூதி அரேபியாவின் மன்னராக முடிசூடினார்.

## பொன்மொழிகள்

1. உண்மையை மறைப்பதும் பொய் சொல்வதற்கே ஒப்பாகும் – ரஷ்யா
2. வாழ்க்கை ஒரு போர்க்களம். நம்பிக்கைதான் ஆயுதம் மகாவீரர்
3. சிந்தனை சந்தேகத்தை வளர்க்கிறது. சந்தேகம் ஆராய்ச்சியை வளர்க்கிறது. ஆராய்ச்சி உண்மையை வளர்க்கிறது. உண்மை எல்லா மூட நம்பிக்கைகளையும் அழிக்கிறது – இங்கர்சால்
4. திறமைசாலிகளை நைல் நதியில் தள்ளினாலும் மீனைக் கவ்விக்கொண்டு கரைக்கு வந்துவிடுவார்கள் – அரேபியா
5. மனிதர்களிலேயே கேவலமானவர்கள் யார் தெரியுமா? பிற மனிதர்களைப் பற்றி நினைத்துப் பார்க்காமல் தனக்காக வாழும் மனிதர்கள்தான் – ஹெய்ன்
6. மனமே பதற்றமடையாதே! மெல்ல மெல்லத்தான் எல்லாம் நடக்கும். தோட்டக்காரன் நூறு குடம் தண்ணீர் ஊற்றினாலும் பருவம் வந்தால்தான் பழம் பழுக்கும் – கபீர்தாசர்
7. மனிதன் தன் பெரும்பாலான துன்பங்களைத் தன் பேச்சின் மூலமாகத்தான் தேடிக் கொள்கிறான் – அரேபியா
8. பலவீனர்கள் பிறரை மன்னிக்கமாட்டார்கள். மன்னிப்பது என்பது வலிமையுடையோரின் குணம் –மகாத்மா காந்தி
9. உங்களைவிட உயர்ந்தவர்களிடமும், உங்களுக்கு சமமானவர்களிடமும் நேர்மையாக நடந்து கொள்ளுங்கள். ஆனால், அதைவிட முக்கியம் உங்களை விடக்கீழான நிலையில் இருப்பவர்களிடம் காட்டும் நேர்மைதான் – சாக்ரடீஸ்

## பூனை

எங்கள் வீட்டுப்பூனைக்குட்டி!
வெள்ளை வெளேர் பூனைக்குட்டி!
மியாவ் மியாவ் என்று வரும்
மென்மையான பூனைக்குட்டி!

அன்பாய் அருகில் ஓடிவரும்!
அடியேன் காலைச் சுற்றிவரும்!
கையில் எடுத்துக் கொள்வேனே!
கனிவாய்த் தடவிக்கொடுப்பேனே!

எல்லா உயிரும் ஒன்றாகும்
என்பதை உணர்ந்தால் நலமாகும்
உயர்வும் தாழ்வும் நமக்கில்லை
கூடி வாழ்ந்தால் தாழ்வில்லை!



# திறமைசாலியும் பொய்யும்

மங்களபுரி அரசர் கவிஞர்களுக்கு மதிப்பளிப்பவர். எந்தக் கவிஞர் வந்தாலும்அவரது கவிநயத்தைக் கேட்டுப் பரிசுகளை அள்ளிக் கொடுப்பவர். அந்த அரசவைக்குத் தன் இரண்டு சீடர்களுடன் அந்தகக்கவி ஒருவன் வந்தான். அவன் எதையும் ஒரு முறை கேட்டாலே உடனே மனப்பாடம் செய்து விடுவான். அவனது முதல் சீடன் எதையும் இருமுறை கேட்டால் மனப்பாடம் செய்து விடுவான். அவனது இரண்டாவது சீடன் எதையும் மும்முறை கேட்டால் மனப்பாடம் செய்து விடுவான்.



அவையில் கவிஞர் ஒருவர் ஒரு கவிதையைப் பாடினார். அரசன் முதல் அவையினர் எல்லோரும் அந்தக் கவிதையைப் பாராட்டினார்கள். அப்போது அந்தகக் கவி எழுந்து மன்னரை நோக்கி 'அரசே! இந்தக் கவிதைநான் சமைத்தது. இதை எப்படியோ இவர் திருட்டுத் தனமாகக் கற்று இங்கு தன்னுடைய கவிதையாகக் காட்டிப் பரிசுபெற வந்திருக்கிறார். உங்களுக்கு நான் சொல்லுவதில் நம்பிக்கை இல்லையென்றால் முதலில் கவிதை முழுவதையும் நான் சொல்லுகிறேன். பிறகு எனது சீடர்களும் கவிதை முழுவதையும் சொல்லுவார்கள், என்றான். அரசர் கவிதையைக் கூறும்படி கூறினார். ஒருமுறைகேட்ட அந்தகக்கவி தவறில்லாமல் கவிதையைத் திரும்பக் கூறினான். இருமுறை கேட்ட முதல் சீடனும் தவறில்லாமல் கவிதையைக் கூறினான். மும்முறை கேட்ட இரண்டாவது சீடனும் முழுக் கவிதையையும் தவறின்றிக் கூறினான். விவரமறியாத அரசர் நடந்ததை உண்மையென நம்பி உண்மைக் கவிஞருக்குத் தண்டனையும் போலிக் கவிஞருக்குப் பரிசும் கொடுத்தார்.

தண்டனை பெற்ற கவிஞர் போலிக் கவிஞனை எப்படியும் அடையாளம் காட்டிப் பழிக்குப் பழி வாங்க வேண்டும் என முடிவு செய்தார்.
உண்மைக்கவிஞர் பல நாள் முயன்று மூவரின் ஞாபக சக்தியைப் பற்றி விவரமாகத் தெரிந்து கொண்டார்.
ஒருநாள் அரசவைக்கு வேறொரு புதுக்கவிதையுடன் வந்தார். கவிதையைப்படித்ததும்முன்புபோல அந்தகக்கவி, அதுவும் தனது கவிதைதான் என்றான். தனக்கும் தன் சீடர்களுக்கும் இந்தக் கவிதையைக் கூற முடியும் என்றான்.
உண்மைக் கவிஞன் மன்னரிடம் 'அரசே நீங்கள் கருணை மிகக்கொண்டு என் நிபந்தனையை ஏற்றுக்கொள்ள வேண்டும். அந்தகக் கவிக்கும் சீடர்களுக்கும் இந்தக் கவிதை தெரியுமென்றால், முதலில் சீடர்களே இந்தக் கவிதைகளைக் கூற வேண்டும்" என்று கேட்டார். அதன்படி அரசர் சீடர்களை நோக்கி கவிதையைக் கூறும்படி உத்தரவிட்டார். இரண்டு சீடர்களும் திருதிருவென விழித்தார்கள்.
உண்மைக் கவிஞர் அரசரிடம் சீடர்களின் ஞாபக சக்தி பற்றியும் அந்தகக் கவியின் திருட்டுத்தனம் பற்றியும் விவரமாகக் கூறினார்.
அரசர் அந்தகக் கவிக்கும் சீடர்களுக்கும் தண்டனை வழங் கினார். உண்மைக் கவிஞருக்குப் பரிசுகள் வழங்கினார்.
பொய்மை நீண்ட நாள்களுக்கு நீடிக்காது. உண்மை எப்போதும் வெல்லும் என்பது உண்மையாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருக்கள் செய்தால் குற்றமில்லையோ?

காணாமற்போனோர் விவகாரம் மீண்டும் தமிழ் அரசியலில் பேசுபொருளாகியுள்ளது. தமிழ் அரசியல் கைதிகள் விடயம் பேசுபொருளாக இருந்து அது மறைந்துள்ள நிலையில் காணாமற்போனோர் விவகாரம், பிரதமர் ரணிலின் யாழ்ப்பாணப் பயணத்துடன் அரங்குக்கு வந்துள்ளது.

தேசிய தைப்பொங்கல் விழாவில் உரையாற்றிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, காணாமற்போனவர்களில் பெரும்பாலானவர்கள் உயிரிழந்து போயுள்ளதாகவே கருதவேண்டியிருக்கின்றது என்று தெரிவித்திருந்தார். இந்தக் கருத்துக்கு வடக்கு - கிழக்கிலிருந்து பல தரப்புக்களாலும் எதிர்க் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற - மாகாணசபை உறுப்பினர்களுடனான கலந்துரையாடல் கிளிநொச்சியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றுக் கொண்டிருந்தபோது, சிறிய எண்ணிக்கையிலான காணாமற்போனோரின் உறவுகள் கவனவீர்ப்புப் பேரணி ஒன்றை முன்னெடுத்தனர். கூட்டம் இடம்பெறும் மண்டபத்துக்கு வந்து, கூட்டமைப்பின் தலைமை யுடன் பேச வேண்டும் என்று தெரிவித்தனர்.

இந்தப் பேரணிக்குத் தலைமை தாங்கியவர் ஊடகங்களுடன் பேசினார். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்த கருத்துக்கு கூட்டமைப்பு கண்டனம் தெரிவிக்கவில்லை, தமிழ் அரசியல் கைதிகள் புறக்கணிக்கச் சொன்ன தேசிய தைப்பொங்கல் விழா வில் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனா திராசா பங்கெடுத்துள்ளார். இவை தவறான நடவடிக்கைகள். இது தொடர்பில் கூட்டமைப்பின் தலைமையின் பதில் அறிவதற்காகவே வந்துள்ளதாகத் தெரிவித்தார்.

தேசிய தைப்பொங்கல் விழாவில் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை பங்கேற்கவில்லை. முதலமைச்சர்தானே பங்கேற்றார் என்று ஊடகவியலாளர்களினால் அந்த ஏற்பாட்டாளரிடம் மீளக் கேட்டபோது அவரிடம் பதில் ஏதும் இல்லை. அதேபோன்று, பிரதமரின் கருத்துக்குக் கண்டனம் தெரிவித்து கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் அறிக்கை வெளியிட்டுள்ளாரே ? பின்னர் எவ்வாறு கூட்டமைப்பு இதனைக் கண்டிக்கவில்லை எனக் கேட்பீர்கள் என்று மீளவும் அந்த ஏற்பாட்டாளரிடம் கேட்டபோது அதற்கும் பதிலில்லை.

இந்தப் போராட்டத்தை ஏற்பாடு செய்த ஏற்பாட்டாளரிடம் இருந்த இலக்கு என்ன என்பதை இதிலிருந்து தெளிவாக அறிந்து கொள்ள முடியும். காணாமற்போனோர் விவகாரத்தைத் தமக்குச் சாதக மாக்கி அரசியல் செய்ய எத்தனித்த ஒரு தரப்பின் ஏற்பாடுதான் இது என்பதை இலகுவில் புரிந்து கொள்ள முடியும்.

இங்குதான் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தேவையில்லாமல் சிக்கிக் கொண்டார். வடக்கு முதலமைச்சர், கிளிநொச்சியில் இடம்பெற்ற கூட்டத்துக்கு, கூட்டம் முடிவடைவதற்கு சில மணி நேரங்களுக்கு முன்னரே பங்கெடுத்தார். அத் துடன் கூட்டம் முடிவடைய முன்னரே வெளியேறினார். முதலமைச்சரின் வாகனம் வெளியில் வரும்போது, அங்கு நின்ற காணா மற்போனோரின் உறவுகள் அவரின் வாகனத்தைச் சுற்றி வளைத்தனர்.

வாகனத்திலிருந்து முதலமைச்சர் கீழிறங்கி தங்களுக்குப் பதில் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர். ஆனால் முதலமைச்சர் வாகனத்திலிருந்து இறங்கவில்லை. முதலமைச்சரின் பாதுகாப்புப் பிரிவினர் அந்த மக்களை அங்கிருந்து அகலுமாறு கேட்டுக் கொண்டனர். ஆனால் மக்கள் விடுவதாக இல்லை. இவ்வாறானதொரு நிலையில் முதலமைச்சர், கூட்ட மண்டபத்தின் மற்றைய வாசலினூடாகத் தனது வாகனத்தில் வேகமாகத் தப்பிச் சென்று விட்டார்.

மக்களிடம் முகம் கொடுத்துப் பேசாமல் முதல மைச்சர் இவ் வாறு தப்பித்துச் சென்றது அங் குள்ள காணாமற் போனோரின் உறவுகளை ஏமாற்றத்துக்கும் - அதிர்ச்சிக்கும் உள்ளாக்கியது. எங்களது வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட முதலமைச்சர் எங்களையே உதாசீனம் செய்கின்றாரா என்று அவர்கள் கோபத்தில் கொப்பளித்தனர்.




மக்கள் தங்கள் பிரச்சினையை முன்வைக்க வருகின்றபோது, அதனைச் செவிமடுத்துக் கேட்பதுதான் தலைமைக்கு அழகு. ஆனால், வாகனத்திலிருந்து கீழிறங்காமல் அந்த மக்களை அசட்டை செய்வது நல்லதல்ல.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், 2013 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15 ஆம் திகதி யாழ்.பொதுநூலகத்தில் நடைபெற்ற ஆர்பாட்டத்தின்போதும் இதனையே செய்திருந்தார். காணாமற்போனோரின் உறவுகளைக் கண்டும் காணா மல் பின்பக்க வாசல் ஊடாகத் தப்பித்து வெளியேறியிருந்தார். இதன்போது பலத்த கண்டனங்கள் பலதரப்புக்களால் தெரிவிக்கப்பட்டதுடன், ஊடகங்களும் அதனை வெளிப்படுத்தியிருந்தன. அதனால்தான் என்னவோ, நேற்று முன்தினம் போராட்டம் செய்த மக்களை அழைத்துக் கலந்துரையாடி அவர்களின் பிரச்சினையை இரா. சம்பந்தன் கேட்டறிந்து அவர்களை ஆசுவாசப்படுத்தியிருந்தார். ஆனால் முதலமைச்சர் தப்பியோடிய - சம்பந்தர் இழைத்த அதே தவறைச் செய்தமையை எவரும் கண்டிக்கவில்லை. இதுதான் குருக்கள் செய்தால் குற்றமில்லை என்பது சொல்வதுவோ ?




# பணம் வாழ்க்கைக்கு அவசியம்

யோ.அபிசன்

(நேற்றைய தொடர்ச்சி)

எதிலும் முயற்சி செய்யாது இருந்தால் தான் வாழ்வு வதங்கிவிடுமே தவிர தாழ்ந்த குடியில் பிறந்ததனால் மட்டும் கெட்டு வீணாகி விடாது. தாழ்ந்த குடியில் பிறந்த பலரும் உயர்ந்த மனிதர்களாக எண்ணி, உழைத்துப் பணக்காரர்களாக மாறியிருக்கிறார்கள்.

எல்லாவற்றுக்கும் விதிதான் காரணம் என்று வீணாக உரைத்துக் கொண்டிருப்பதால் பயனில்லை. நாம் தான் அவற்றுக்கெல்லாம் காரணம்–என்கிறார் தீரர் சத்திய மூர்த்தி. இனியொரு விதி செய்வோம்– என்கிறார் பாரதியார். எழுந்து நில்லுங்கள்! ஊக்கத்தைக் கைவிடாதீர்கள் உங்கள் சொந்த விதியைப் படைப்பவர்கள் நீங்களே! என்பதை ஒரு போதும் மற வாதீர்கள். உங்கள் எதிர்காலத்தை நீங்களே உருவாக்கிக் கொள்ளுங்கள்– என்று உணர்ச்சி ததும்ப உரைக்கிறார் விவேகானந்தர்.

இன்பங்களைச் சுவைக்கப் பிறந்திருக்கிறோம். ஆனால்நாள்களே ஓடிக் கொண்டிருக்கின்றன. எம்முடைய வாழ்வு சிற கடித்துக்கொண்டே இருக்கின்றது. மலர்ந்த மலருக்கும், பிறந்து விட்ட உயிருக்கும் இறப்பு நிச்சயம் என்பதை அறிந்து அதன்படி வாழ வேண்டும். உயிருடன் இருக்கும் போது எம்முடைய கௌரவத்துக்கு மதிப்புத் தருவது பணம். கௌரவமும், ஒழுக்கமும் பணத்தின் இரண்டு பக்கங்கள்! ஒழுக்கம் வலது கண்; கௌரவம் இடது கண்! ஒரு கண்ணை இழந்து விட்டால் முகமே பொலிவு இழந்து விடும்.

இறைவன் எமக்கு நல்ல காலத்தைத் தந்திருக்கிறான். இப்பொழுது நாம் தொட்டது எல்லாம் பொன்னாகும். விதி வந்து குறுக்கிட முடியாது. விதியின் பெயரைச் சொல்லி வீணாக இருந்து விடக் கூடாது.

வாழ்க்கையைக் கௌரவமாக நடத்த பணம் அவசியமாகிறது. பணமா மனிதனைச்சம்பாதிக்கிறது? மனிதனல்லவா பணத்தைச் சம்பாதிக்கிறான்– என்று கூறுகிறார் விவேகானந்தர். பணம் ஒரு அத்தியாவசியப் பொருள். அது மனித உழைப்புக்கும், வாழ்க்கைக்கும் உறுதுணையாக நிற்கிறது– என்கிறார் நேரு. பணத்தின் மேன்மையைப்பற்றி பல அறிஞர்களுடைய வார்த்தையைக் கவனித்து நடந்தால் விதிஎன்பதுஎன்னவென்றுதெரியாமல் செய்து விட முடியும். பணப்பை பெருகப் பெருக ஒருவருடைய கன்னமும் பெருத்து விடும். பணம் வந்ததும் அறிவற்றவன் கூட அறிவாளியாகிறான். அவனுடைய வாயிலிருந்து வருகின்ற வார்த்தைகள் கூட சட்டங்களாக மாறுகின்றன–என்கிறார் ஜான்ஸாட்.

யஹலன் கெல்லரின் குறிப்பிடத்தக்க செயல் என்னவென்றால்பணப்பை சிறிதாகச் சிறிதாக கன்னமும் வற்றிவிடும். அவர் தனக்கெனப் படைத்துக் கொண்ட வாழ்வை வளமுள்ளதாகவும், மன நிறைவு கொண்டதாகவும் ஏற்றுக் கொண்டு தான், தனக்கிருந்த குறைகளைக் கொடுமையான குறைபாடுகளாகக் கொள்ளவில்லை. எதையும் நிறைவாகக் கொண்டாரே தவிர விதியின் மேல் பழி போட்டு அழுது வடியவில்லை. இதே போல் நாமும் விதியை விரட்டி அடிப்போம்.

பதவி மனிதனுக்குப் பெருமை அளிப்பதில்லை, மனிதன் தான் பதவியின் பெருமையை உயர்த்துகிறான்– என்கிறார் ஆபிரகாம் லிங்கன் பதவியைப் பிடித்தவர்கள் எல்லாம் பண்புடையோர் என்று எண்ணி விட முடியாது. பதவியினால் பெருமை பெறுவதைவிட எம்மால் பதவி பெருமைபெறவேண்டும். வாழ்க்கையின் அடித்தளத்தில் அவதியுற்று எதிர்காலத்தைப் பற்றிச் சற்றும் நம்பிக்கை இல்லாத நிலையில் வாழ்ந்த சிலர் சிறு வயதிலிருந்து கடுமையாக உழைத்ததன் காரணமாகத்தான் பிரகாசமான எதிர்காலத்தைக் காணமுடிந்தது.

சின்னவயது உழைப்பு, எதிர்காலத்தில் அற்புதமான பல சாதனைகளைத் தோற்றுவிப்பதற்கு ஆதாரமாக இருக்கும். இரும்பு உருக்குத் தொழிலின் முன்னோடி எனக் கருதப்படும் ஹென்றி பெசிமர் என்பவர் தம்முடைய ஆராய்ச்சி தொடர்பாகப் பதினாறாவது வயது முதற்கொண்டே கடுமையான உழைப்பை மேற்கொண்டார். துணி நெசவு செய்யும் இயந்திரத்தைக் கண்டுபிடித்த சாமுவேல் ஸ்லேட்டர் என்ற அறிஞர் தமது பதின்மூன்றாம் வயதிலிருந்து கடுமையாக உழைத்ததன் மூலம் அந்த சாதனையை ஆற்ற முடிந்தது.

எந்த வேலை கிடைத்தாலும் அந்த வேலையை மகிழ்வுடன் ஏற்றுச் செயலாற்ற வேண்டும். இந்த வேலையை ஏற்றுக் கொண்டால் தன்னைச் சார்ந்தவர்கள் தூற்றுவார்கள் என்று எண்ணி அந்த வேலையைத் தள்ளிவிடக் கூடாது. முட்டுக்கட்டை போடுபவர் அனேகர் உண்டு.

> **“ மற்றவர்களின் கூற்றுக்களுக்கு எல்லாம் செவி கொடுத்தால் எதனையும் சிறப்புடன் செயலாற்ற முடியாது. மனிதனாய்ப் பிறந்த ஒவ்வொருவரும் வாழ்வின் முன்னேற்றத்துக்குப் படிக்கட்டாக அமையும் உயர்ந்த வேலையையும், கைநிறையப் பணத்தையும் பெற விரும்புவது இயற்கையே. ”**

மற்றவர்களின் கூற்றுக்களுக்கு எல்லாம் செவிகொடுத்தால்எதனையும்சிறப்புடன் செயலாற்ற முடியாது. மனிதனாய்ப் பிறந்த ஒவ்வொருவரும் வாழ்வின் முன்னேற்றத்துக்குப் படிக்கட்டாக அமையும் உயர்ந்த வேலையையும், கைநிறையப் பணத்தையும் பெற விரும்புவது இயற்கையே. எந்த வேலையாக இருந்தாலும் அதே வேலையில் இருந்து கொண்டு முயற்சியும், அறிவுத்திறனும் கொண்டு உழைத்தால் நிச்சயமாகப் பணத்தைச் சம்பாதிக்க முடியும்.

(தொடரும் ...)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பெண்கள் "துப்பட்டாவை" முதலில் முழுசா போட்டாங்க... அப்பறம் 2 ஆ மடிச்சு போட்டாங்க



பிறகு 4 ஆ மடிச்சு போட்டாங்க
இப்ப வீட்லயே போட்டுட்டாங்க

பேஸ் புக்கில் பிடித்தவை...

அடுத்தவர் கையில் சாப்பிடும் போது
தாயின் அருமை புரியும்
அயல்நாட்டில் அனாதையாக
நிற்கும் போது தாய் நாட்டின் அருமை புரியும்
சொல்ல வந்ததை புரியும் படி தெளிவாக சொல்ல
முடியாமல் தவிக்கையில் தாய்
மொழியின் அருமை புரியும்....

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** நண்பருக்கு ஆலோசனை வழங்குவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். ஆரோக்கியம் திருப்திகரமாகும். பெண்களுக்கு அதிர்ஷ்டகரமாக பொன் பொருள் சேரும்.

**இடபம்:** எதிர்கால நலனில் அக்கறை காட்டுவீர்கள். தொழில், வியாபாரத்தில் புதிய உத்தியால் வருமானம் காண்பீர்கள். சுப விடயத்தில் இருந்த தடை விலகும். குடும்பத்தினர் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**மிதுனம்:** நண்பரின் உதவி கிடைக்கும். தொழில், வியாபார வளர்ச்சிக்கு கடினமாக உழைப்பீர்கள். இலாபம் உயரும். உடல் நலனுக்காக மருத்துவ சிகிச்சை தேவைப்படும். மாணவர்கள் ஆர்வத்துடன் படிப்பர்.

**கடகம்:** எதிர்பார்ப்பு எளிதாக நிறைவேறும். குடும்பத்தினர் பாசம் கண்டு மனம் நெகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் திருப்தியளிக்கும். பிள்ளைகளின் செயற்பாடு பெருமை தரும்.

**சிங்கம்:** மனக் குழப்பம் விலகும். ஆன்மிக நாட்டம் உண்டாகும். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். நிலுவைப் பணம் கிடைக்கும். அரசு வகையில் ஆதாயம் கிடைக்கலாம்.

**கன்னி:** அடுத்தவர் நலனில் அக்கறை கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் குறுக்கிடும் தடைகளை சரி செய்வது நல்லது. வருமானம் திருப்தி அளிக்கும். இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவீர்கள்.

**துலாம்:** பிறரிடம் சொந்த விடயம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் அளவான பண வரவு கிடைக்கும். வாகனத்தில் மித வேகம் பின்பற்றவது நல்லது. மனைவியின் ஆலோசனையால் நிம்மதி காண்பீர்கள்.

**விருச்சிகம்:** குடும்பத்தினர் அன்பு பாராட்டுவர். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். கடனில் பெரும்பகுதி அடைபடும். அரசியல்வாதிகளின் எதிர்பார்ப்பு நிறைவேறும்.

**தனுசு:** மற்றவர் பேச்சு உங்கள் மனதைச் சங்கடப்படுத்தும். தொழில், வியாபார வளர்ச்சிக்கு கடின உழைப்பு தேவைப்படும். உறவினர் வருகையால், வீட்டுச் செலவு ஏற்படலாம். வாகன பயணத்தில் கவனம் தேவை.

**மகரம்:** எதிர்பார்ப்பு இனிதே நிறைவேறும். தொழில், வியாபார வளர்ச்சிக்காக பாடுபடுவீர்கள். இலாபம் படிப்படியாக அதிகரிக்கும். நண்பர்களுடன் இனிய பொழுதுபோக்கில் ஈடுபடுவீர்கள்.

**கும்பம்:** பணிகளில் சுறுசுறுப்புடன் ஈடுபடுவீர்கள். குடும்பத்தினரிடம் விவாதம் செய்வதைத் தவிர்க்கவும். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். மாணவர்கள் ஆர்வத்துடன் படிப்பில் ஈடுபடுவர்.

**மீனம்:** மக்கள் மத்தியில் செல்வாக்கு உயரும். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். திடீர் பிரயாணம் மேற்கொள்ள நேரிடும். சிலருக்கு கூடுதல் சொத்து சேர்க்கை கிடைக்கும்.

## காதல் என்றால் என்ன?

ஒரு ஞானியிடம், அவரது சீடன் ஒரு கேள்வியைக் கேட்டான். அதாவது "காதல் என்றால் என்ன? திருமணம் என்றால் என்ன? இரண்டுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?" என்ற கேள்வியை உதிர்த்தான். இதற்குப் பதில் அளித்த ஞானி, "நீ ரோஜாத் தோட்டத்துக்கு போ. அங்கு உனக்குப் பிடித்த உயரமான ரோஜாச் செடி ஒன்றை பிடுங்கி வா. ஆனால் ஒரு நிபந்தனை., எந்தக் காரணத்தைக் கொண்டும் நீ போன வழியில் திரும்பி வரக்கூடாது" என்றார்.

உடனே அந்தச்சீடன் அங்கிருந்து புறப்பட்டு ரோஜாத் தோட்டத்துக்குச் சென்றான். சிறிது நேரம் கழித்து வெறுங் கையுடன் வந்தான். ஞானி கேட்டார், "எங்கே உயரமான ரோஜா செடி?". அதற்கு சீடன், "குருவே, நான் தோட்டத்தில் கால் வைத்ததும் உயரமான ஒரு ரோஜா செடி என்னை கவர்ந்தது. ஆனால், அதை விட உயரமான ரோஜா செடி கிடைக்கும் என்று கருதி, தொடர்ந்து நடந்தேன். ஆனால் அதன் பின் அங்கிருந்தவை அனைத்தும் குட்டையான ரோஜாச் செடிகள் தான். போன வழியில் திரும்பி வரக்கூடாது என்று நீங்கள் நிபந்தனை கூறி இருப்பதால், முதலில் பார்த்த உயரமான ரோஜாச் செடியை பறித்துக்கொண்டு வர முடியாமல், வெறுங்கையுடன் வந்து விட்டேன்" என்றார்.

இதனைக் கேட்ட ஞானி, "அதோ அந்தச் சூரியகாந்தி தோட்டத்துக்குச் சென்று, ஒரு நல்ல, அழகான சூரிய காந்திச் செடியை பிடுங்கி வா., ஆனால் ஒரு நிபந்தனை., ஒரு செடியை பிடுங்கிய பின், வேறு ஒரு செடியை பிடுங்கக் கூடாது" என்றார். சிறிது நேரம் கழித்து, ஒரு சூரிய காந்தி செடியுடன், சீடன் வந்து சேர்ந்தான். அப்போது, ஞானி கேட்டார்,- "இதுதான், அந்த தோட்டத்திலேயே அழகான செடியா?" என்று. உடனே அந்தச் சீடன், "இதை விட அழகான செடிகள் எல்லாம் இருந்தன. ஆனால் இந்த முறை கோட்டை விட்டு விடக்கூடாது என்று கருதினேன். உங்கள் நிபந்தனைப் படி, ஒரு செடியை பிடுங்கிய பின், வேறொரு செடியை பிடுங்கக்கூடாது அல்லவா? எனவே, முதலில் அழகாக தோன்றிய ஒரு சூரிய காந்திச் செடியை பிடுங்கிக்கொண்டு, திரும்பிப் பார்க்காமல் ஓடி வந்து விட்டேன்" என்றான்.



அப்போது தான் ஞானி சொன்னார்: "இது தான் திருமணம். முதலில் நீ ரோஜாத் தோட்டத்துக்கு சென்று வெறுங்கையாக திரும்பினாயே,, அதுதான் காதல். இப்போது புரிகிறதா காதலுக்கும், திருமணத்துக்கும் உள்ள வித்தியாசம் ?

சீடன்: ஆம் புரிகிறது., புரிகிறது... என்று தலையாட்டினான்.

WhatsApp
படித்ததில் பிடித்தது

## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 9 | 8 | | | | 5 | | |
| 4 | | 7 | 6 | | | | | |
| | | | 9 | | 8 | | 1 | |
| | | | 3 | 8 | | | 5 | 1 |
| | | 1 | | 7 | | 2 | | |
| | 4 | | | 9 | 1 | | | |
| | 5 | | 8 | | | | | |
| | | 4 | | | 9 | 1 | 8 | 3 |
| | | 2 | | | | 6 | 9 | 5 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 3 | 8 | 4 | 2 | 5 | 1 | 7 | 9 |
| 5 | 1 | 2 | 7 | 9 | 3 | 8 | 6 | 4 |
| 7 | 9 | 4 | 6 | 1 | 8 | 2 | 3 | 5 |
| 1 | 7 | 5 | 9 | 6 | 4 | 3 | 2 | 8 |
| 4 | 6 | 3 | 1 | 8 | 2 | 9 | 5 | 7 |
| 8 | 2 | 9 | 5 | 3 | 7 | 4 | 1 | 6 |
| 2 | 4 | 6 | 3 | 7 | 9 | 5 | 8 | 1 |
| 9 | 8 | 7 | 2 | 5 | 1 | 6 | 4 | 3 |
| 3 | 5 | 1 | 8 | 4 | 6 | 7 | 9 | 2 |

சுடோக்குஒருஎண்விளையாட்டு.தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரை களையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும்.தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதா கும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றி கரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



## நயன்தாராவுக்கு கே.பி.விருது

சென்னையில் நடைபெற்று வந்த 13 ஆவது சர்வதேச திரைப்பட விழா நேற்றுடன் முடிவடைந்தது. இந்த விழாவில் நயன்தாராவுக்கு அமிதாப் பச்சன் இளைஞர் விருது மற்றும் கே.பி. விருது (கே.பாலச்சந்தர்) வழங்கப்பட்டது. நடிகர் அர்விந்த் சாமிக்கும் கே.பி.விருது வழங்கப்பட்டது. அத்துடன் சிறந்த படமாக "கிருமி", இரண்டாவது சிறந்த படமாக "ரேடியோ பெட்டி" ஆகிய படங்களுக்கும் விருதுகள் வழங்கப்பட்டன.

கண்மணி சனா

அன்பு யார் மீதும் காட்டலாம்
ஆனால் "கோபம்" உயிருக்கு
மேலான உரிமை
உள்ளவர்கள் மீது மட்டுமே
காட்ட முடியும்...

சௌமியா

உண்மையாய் இருந்தால்
சில நல்லவர்களை சம்
பாதிக்கலாம். பொய்யாய் இருந்
தால் பல கெட்டவர்களை சம்
பாதிக்கலாம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
1988.02.18

இறப்பு
2014.01.15

அமரர்

## சரவணபவன் கஜமாறன்

(முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர்
அச்சுவேலி-பொலிஸ் நிலையம்)

திதி: தைமாத பூரணை

உயிருக்கு உயிராகி எம் நினைவில்
வடுவாகிப் போன
எம் ஆருயிர் நண்பனே
ஆண்டு நூறுகள் வாழ்வாயென நாமிருக்க
பாதியில் எம்மை தனியாக தவிக்க விட்டு விட்டு
காலன் கவர்ந்தானோ உன்னை?
எத்தனை ஆண்டுகள் உருண்டோடினாலும்
கண்ணீருடன் காத்திருப்போம்
உன் நினைவுகளுடன் .....

மல்லாகம் நண்பர்கள்.

# இரண்டாம் ஆண்டு நினைவலை...

அமரர்

## சரவணபவன் கஜமாறன்

(முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர் - அச்சுவேலி
பொலிஸ் நிலையம்)

மண்ணில் 1988.02.18

விண்ணில் 2014.01.15

திதி - தைமாத பூரணை



எம் அன்புச் செல்வமே ...
இரு ஆண்டுகள் கடந்து சென்றாலும் நீ எங்களுடன்
வாழ்ந்த காலங்களை மீட்டுத் தந்து கொண்டிருக்கின்றன
உன் அன்பான பேச்சும் உன் குறும்புத்தனமான செயலும்
என்றும் உன் நினைவுகளைத் தந்து கொண்டிருக்கின்றன
காலத்தின் செயல்களால் கண் சிமிட்டும் நொடிக்குள் - நீ
எங்களை விட்டு சென்றுவிட்டாய் காலங்கள் கடந்து சென்றாலும்
கடைசிவரை உன் நினைவுகள் என்றும் எம் மனதில் தொடரும்
எத்தனை ஆண்டுகள் கடந்து சென்றாலும் எம் மனதைவிட்டு
நீங்காத எம் உயிர் செல்வமே !

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

என்றும் உன் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

நீலாவத்தை, வித்தகபுரம், தெல்லிப்பழை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேராசிரியர்

தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன்.

எதுவானாலும் எமது கட்சிக் கூட்டத்தில் பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டும் எனவும் சம்பந்தன் குறிப்பிட்டார்.

இதன்போது பதிலளித்த பேராசிரியர் சிற்றம்பலம், தான் தமிழரசுக் கட்சியின் சார்பில் தமிழ் மக்கள் பேரவைக் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை எனப் பதில் கூறினார்.

நேற்று இடம்பெற்ற தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தின்போதே இந்தச் சம்பவம் நடந்தது.

இதேவேளை, கடந்த பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் மக்கள் ஆணையைக் கேட்டுப் போட்டியிட்டிருந்தது. மிகப் பெரும்பான்மை வாக்குகளை கூட்டமைப்புக்கு மக்கள் வழங்கியிருந்தார்கள். இந்த நிலையில், புதிய அரசமைப்பு உட்பட அனைத்து விடயங்களிலும் மக்கள் ஆணைக்கேற்ப செயற்பட இலங் கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் கட்சியின் முன்னாள் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன், தமிழரசுக் கட்சியின் தலைவரும் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா ஆகியோரின் தலைமையில் வவுனியா 'வன்னி இன்' விருந்தினர் விடுதியில் நேற்றுக் காலையிலிருந்து மாலை வரை நடைபெற்றது. இதில் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுவில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்தின் நிறைவில் மேற் படி கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் குறித்து இலங்கைத் தமிழரசுக் கட்சி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகியவற்றின் பேச்சாளர் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தார்.

இதன்போது அவர் கூறியவை வருமாறு:-

இன்று (நேற்று) இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் குறிப்பிட்ட சில விடயங்கள் மட்டும் எங்களுடைய நிகழ்ச்சி நிரலிலே சேர்க்கப்பட்டு அவை தொடர்பாக ஆராயப்பட்டன. புதிய அரசமைப்பு ஒன்று உருவாக்குவதற்கான பிரேரணை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்ற நிலை யிலே இந்த புதிய அரசமைப்பு உருவாக்குதல் சம்பந்தமாக எங் களுடைய கட்சியின் நிலைப்பாடு, அதிலே நாங்கள் முன்னெடுக்கின்ற செயற்பாடுகள் போன்ற பல விடயங்கள் பேசப்பட்டன.

கடந்த பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வீட்டு சின்னத்தில் மக்கள் ஆணையைக் கேட்டுப் போட்டியிட்டிருந்தது. மிகப் பெரும்பான்மை வாக்குகளை தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு மக்கள் வழங்கியிருக்கிறார்கள். தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு இந்த புதிய அரசமைப்புச் சட்டத்திலே கொண்டு வரப்படுகின்றபோது தமிழ் மக்களுடைய ஆணையை சுமந்து நிற்கின்ற கூட்டமைப்பு அந்தத் தேர்தல் அறிக்கையிலே நாங்கள் சொல்லியிருக்கின்ற அடிப்படையான விடயங்களை புதிய அரசமைப்புச் சட்டத்திற்குள்ளே கொண்டுவருவதற்கான எங்களுடைய முயற்சிகளிலே நாங்கள் தொடர்ந்து ஈடுபடுவோம் என்ற தீர்மானத்தை இந்தக் கூட்டத்தில் எடுத்திருக்கின்றோம். அத்தோடு எங்கள் மக் களுடைய உடனடிப் பிரச்சினைகள், அபிவிருத்தித் திட்டங்கள் போன்ற விடயங்களிலே எங்களு டைய பங்களிப்பு செலுத்தப்பட வேண்டும். இந்த வருடத்திலே முக்கிய விடயமாக அரசமைப்பு விடயம் இருந்தாலும் எங்களுடைய மக்களை அழுத்திக்கொண்டிருக்கின்ற பல விடயங்கள் சம்பந்தமாகவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக நாங்கள் இயங்குவோம் அதற்கான பரிகாரங்களையும் தேடுவோம் என்ற தீர்மானத்தையும் எடுத்திருக்கின்றோம். விசேடமாக எங்களுடைய மக்களுடைய காணிகள் பல இன்னமும் விடுவிக்கப்படாமல் இருக்கின்றன. ஆட்சி மாற்றத்திற்குப் பிறகு சில சில இடங்களிலே பிரதேசங்கள் விடுவிக்கப்பட்டாலும் முழுமையாக அந்த இடங்கள் விடுவிக்கப்படவில்லை. அதிலே இராணுவப் பிரசன்னம் இருப்பது மிகவும் முக்கிய பிரச்சினையாக இருந்து வருகின்றது. ஆகவே, தொடர்ச்சியாக அரசுடன் நாங்கள் பேசி வருகின்றோம். தொடர்ச்சியாக சிறு சிறு பகுதிகள் விடுவிக்கப்படுகின்ற முறைமை இருந்து வருகின்றது. அது துரிதப்படுத்தப்படவேண்டும். அனைத்துப் பிரதேசங்களும் விடுவிக்கப்படவேண்டும் என்ற எங்களுடைய நிலைப்பாட்டை தொடர்ந்தும் நாங்கள் அரசுக்கு அழுத்தமாகக் கூறிவருகின்றோம்.

அரசியல் கைதிகளுடைய விடுதலை குறித்து அரசால் வாக்குறுதிகள் கொடுக்கப்பட்டன. உங்களுக்குத் தெரியும். இந்த வாக்குறுதிகள் முழுதாக நிறைவேற்றப்படவில்லை. ஆகையினாலே சில நாட்களில் அரசுடன் நாங்கள் அது குறித்துப் பேச்சு நடத்தி வெகு விரைவிலே பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்ற விசேடமாக நீண்டகாலமாக சிறையிலே இருக்கின்ற எங்களுடைய இளைஞர்களுடைய விடுவிப்பு சம்பந்தமாகவும், காணமற்போனோரின் விடயம் சம்பந்தமாகவும் விசேடமாக நாங்கள் ஆராய்ந்திருக்கின்றோம். அது குறித்த ஒரு அலுவலகம் திறக்கப்படும். அது குறித்து உடனடியாக செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் என்று அரசு அறிவித்திருந்த போதிலும் இன்னமும் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. ஆகையாலே இது குறித்து பொறுப்புக்கூற வேண்டிய கடப்பாடு அரசுக்கே இருக்கின்றது. அதை வருகின்ற மாதம் நாடாளுமன்றத்திலே ஒரு ஒத்தி வைப்புப் பிரேரணையாக நாங்கள் முன்னெடுத்து அரசுடைய பதிலை கொண்டுவரவேண்டும் என்ற தீர்மானத்தையும் எடுத்திருக்கின்றோம்-என்றார். (த-சி)

## நவாலித்

வாறு கூறினார்.

அவருடனான நேர்காணல் வருமாறு:-

கேள்வி: 1995ஆம் ஆண்டு உங்களுடைய ஆட்சிக் காலத்தின் போது யாழ்.நவாலித் தேவாலயத்தின் மீது நடத்தப்பட்ட விமானத் தாக்குதலில் நூற்றுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டனர். கடந்த காலத்தில் இடம்பெற்ற இதுபோன்ற சம்பவங்களுக்கு எப்படியாகப் பொறுப்புக்கூறப் போகின்றீர்கள்?

பதில்: போரின்போது நவாலி மட்டுமன்றி மேலும் பல சம்பவங்கள் இடம்பெற்றன. போரின்போது நிறைய விடயங்கள் இடம்பெறுவதுண்டு. பதவியிலுள்ள அரசு அதற்கான பொறுப்புக்களை ஏற்கவேண்டும். இந்தச் சம்பவம் (நவாலி தேவாலயத்தின் மீதான விமானத் தாக்குதல்) தொடர்பாக அறியத்தந்த வேளையில் நான் பாதுகாப்பு கவுன்சில் கூட்டமொன்றில் பங்குபற்றிக்கொண்டிருந்தேன். உண்மையில் நான் இராணுவத்தரப்பினரையும் விமானப்படையினரையும் நோக்கி உரத்துக் கத்தினேன். இந்தத் தாக்குதல் ஒரு தவறு. சிறிய முகாம் போன்று விடுதலைப் புலிகள் ஒன்றுகூடுமிடத்தின் மீது குண்டுத்தாக்குதல் நடத்துவதாக அவர்கள் எண்ணியிருந்தனர். அதற்கருகில் அப்படியொன்று இருந்தது. ஆனால், அவர்கள் தமது இலக்கைத் தவறவிட்டு தேவாலயத்தின் மீது குண்டுத் தாக்குதலை நடத்தியிருந்தனர். அது எனக்கு நன்றாக நினைவில் உள்ளது. என்ன இடம்பெற்றிருந்தாலும் விமானப்படை, இராணுவம், அரசு அதற்கு பொறுப்புக் கூற வேண்டும்

கேள்வி: இந்த அரசுக்கு வாக்களித்தபோது தமிழ் மக்கள் பல எதிர்பார்ப்புக்களைக் கொண்டிருந்தனர். அவற்றில் குறிப்பாக தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் நிலை பற்றிய உண்மைகளை வெளிக்கொண்டுவருதல், காணிகளை விடுவித்தல் போன்றவை முக்கிய இடம்பிடித்திருந்தன. அரசானது அடையாளத்திற்காக சிலரை விடுவித்துள்ளது. சில தொகுதிக் காணிகளை விடுவித்துள்ளது. ஆனால், காணிகளில் பெரும்பாலானவை இன்னமும் விடுவிக்கப்படவில்லை. இது பற்றிய உங்கள் பதில் என்ன?

பதில்: இது விடயத்தில் கடந்த திங்களன்று (18.01.2016) இராணுவத்தினருடன் நான் தொடர்பு கொண்டு வினவியிருந்தேன். இராணுவத்தினர் வசம் யாழ். குடாநாட்டில் 11,700 ஏக்கர் காணித்துண்டுகள் இருந்தன. இதில் 7000 ஏக்கர்களை இது வரையில் அவர்கள் மீளவும் உரியவர்களிடம் திரும்பக் கையளித்துள்ளனர். ஜனாதிபதியால் அண்மையில் 700 ஏக்கர்கள் விடுவிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டமையே விடுவிக்கப்பட்ட கடைசித் தொகுதிக் காணிகளாகும். தற்போதைய நிலையில் இராணுவத்தினர் வசம் 4600 முதல் 4700 ஏக்கர் காணிகளே உள்ளன. இது பாதுகாப்புக் காரணங்களுக்கு அவசியமானதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதிலும் 700 ஏக்கர் வரையான காணிகளை விடுவிக்கமுடியும் எனத் தகவல் தரப்பட்டுள்ளது. அப்படிப் பார்க்கையில் 11,700 ஏக்கர்களில் இருந்து 4000 ஏக்கர்களாக இராணுவத்தினர் வசமுள்ள காணிகளின் பரப்பளவு குறைந்துள்ளது.

கேள்வி: கருணா, பிள்ளையான் போன்றவர்கள் வெளியில் இருக்கையில் இன்னமும் விடுவிக்கப்படாமலுள்ள அரசியல் கைதிகள் பற்றி?

பதில்: கருணா, பிள்ளையானை விடுவித்தது எமது தவறல்ல. மகிந்தவே அதனைச் செய்திருந்தார். குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படாமல் சிறையில் அடைத்துவைக்கப்பட்டிருந்தவர்களில் சிலர் ஏற்கனவே விடுவிக்கப்பட்டுள்ளனர். இன்னமும் சிலர் விடுவிக்கப்படவுள்ளனர். இதனைத் தவிர நூற்றுக்கும் குறைவான இன்னுமொரு தொகுதிக் கைதிகள் உள்ளனர். இவர்களுக்கு எதிராக பாரதூரமான குற்றச்சாட்டுக்கள் உள்ளன. சாட்சியங்களுடன் நிரூபிக்கப்படக்கூடியதாக இந்தக் குற்றச்சாட்டுக்கள் உள்ளன. அந்தக் கைதிகளை விடுவிக்க முடியும் என நான் நினைக்கவில்லை. எந்த வழக்குகளும் இல்லாமல் இருப்பவர்களை விடுவிக்க முடியும். போர்க்குற்றங்களுக்காக இராணுவத்தினர் தண்டிக்கப்படவேண்டும் எனத் தமிழ் மக்களான நீங்கள் கேட்கின்றீர்கள். அப்படியானால் பிரபாகரனின் படையினர் ஏன் போர்க்குற்றங்களுக்காகத் தண்டிக்கப்படக்கூடாது எனக் கேட்கின்றேன். மக்களைக் கொன்றமைக்காகவே அவர்கள் சிறைகளில் உள்ளனர். இராணுவத்தினரை மாத்திரம் ஏன் தண்டிக்கவேண்டும். ஏன் பிரபாகரனின் படையினர் தண்டிக்கப்படக் கூடாது. (த-சி)

## அதிகளவில் சீன

ரணில் அரசை பதவிக்குக் கொண்டு வருவதில் மேற்குலக நாடுகளும் இந்தியாவும் அதிக அக்கறை காட்டின என்கிற விமர்சனங்கள் இருந்து வருகையில் மத்திய வங்கி ஆளுநரின் இந்தக் கருத்து வந்துள்ளது.

தாம் பதவிக்கு வந்தால் சீனாவின் பெருந் திட்டங்கள் மீளாய்வுக்கு உட்படுத்தப்படும் என்று தெரிவித்திருந்த இந்த அரசு, பதவியேற்றதும் கொழும்புத் துறைமுக நகரத் திட்டம் உட்பட சில சீனத் திட்டங்களை இடைநிறுத்தி வைப்பதாக அறிவித்தது. ஆனால், துறைமுக நகரத் திட்டம் நிறுத் தப்படாது விதிமுறைகளுக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் அது தொடரப்படும் என்று டாவோஸில் இலங்கைப் பிரதமர் ரணில் விக் கிரமசிங்க ஏற்கனவே தெரிவித்திருந்தார்.

அவரது கருத்தை வழிமொழியும் விதத்தில் கருத்துத் தெரிவித்த மத்திய வங்கி ஆளுநர், சீன முதலீடுகளை வரவேற்பதில் தவறேதும் இல்லை என்றார்.

நாங்கள் பெருமளவு சீன முதலீடுகளைப் பெற்றுள்ளோம். அதில் ஏதும் தவறில்லை என்று அவர் கூறினார்.

அம்பாந்தோட்டையில் ஏற்கனவே துறைமுகத் திட்டத்தில் சீனா முதலிட்டுள்ள நிலையில் அங்கு சீன நிறுவனம் ஒன்று 4 சதுர கிலோ மீற்றர்கள் பரப்பளவில் தொழில் பேட்டை ஒன்றை ஆரம்பிக்க இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அது தொடர்பில் டாவோஸ் பயணத்தின்போது பேச்சுக்கள் நடத்தப்பட்டுள்ளன. அந்தத் தொழிற்பேட்டைக்கான தொழிற்சாலைகளை அந்த நிறுவனமே அழைத்து வரும் என்று மகேந்திரன் விளக்கம் அளித்தார்.

சீனாவின் முதலீடுகளைப் பெறுவதற்கு நாம் தொடர்ந்தும் தீவிரமாக முயன்று வருகின்றோம் என்றும் அவர் 'உதயன்' பத்திரிகையிடம் தெரிவித்தார்.

எங்களுக்கு ஏனைய நாடுகளின் ஈடுபாடும்கூட வேண்டும் தான். இந்திய நிறுவனங்கள் ஆர்வத்துடன் இருக்கின்றன. குறிப்பாக டாட்டா நிறுவனத்தினர் தகவல் தொழில்நுட்பத் துறையிலும் ஏற்கனவே அவர்கள் முதலிட்டுள்ள நட்சத்திர விடுதி வர்த்தகத்தை விரிவுபடுத்துவதிலும் ஆர்வமாக இருக்கிறார்கள். சீன நிறுவனங்கள் முழு அளவில் வருகின்றன. முன்னைய காலத்திலும் பார்க்க அதிகமாக. பெரிய திட்டங்களுடன் வருகின்றன என்றார் மத்திய வங்கி ஆளுநர் அர்ச்சுன மகேந்திரன். (உ)

## பாதுகாப்புச்

இராணுவத்தினர் வசமுள்ள காணிகளின் விடுவிப்புத் தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் கடந்த செவ்வாய்க் கிழமை ஜனாதிபதி செயலகத்தில் கலந்துரையாடல் இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலின்போது, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, வடக்கில் முப்படையினர் வசமுள்ள காணிகளின் விவரங்கள் மற்றும் மீள்குடியமர்வும் அதனுடன் தொடர்புடைய விவரங்கள் என்பவற்றைத் திரட்டி ஒரு மாத காலத்தினுள் சமர்ப்பிக்க வேண்டும் என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்குப் பணித்திருந்தார். இதனை நேரடியாகச் சென்று திரட்ட வேண்டும் என்றும் ஜனாதிபதி கட்டளை பிறப்பித்திருந்தார்.

இதற்கமைய பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தலைமையில் யாழ்.மாவட்டச் செயலகத்தில் எதிர்வரும் 27 ஆம் திகதி கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. இந்தக் கலந்துரையாடலில் முப்படையினர் மற்றும் மீள்குடியமர்வுடன் தொடர்புடைய சகல தரப்புக்களுக்கும் பாதுகாப்பு அமைச்சினால் அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது. இதன் போது சகல தரவுகளும் மீளாய்வு செய்யப்படவுள்ளது. இந்தக் கூட்டத்தில் இறுதி செய்யப்படும் தகவல்களின் அடிப்படையிலேயே, ஜனாதிபதி மட்டத்தில் மீள்குடியமர்வு தொடர்பான இறுதி முடிவு எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (த-5)

## எதிர்க்கட்சித்

ரணை ஆணைக்குழுவிற்கு வருகை தந்த போது, ஊடகவியலாளர்கள் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள கட்சியில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச இணைந்து கொள்வார். பொதுமக்கள் விரும்பினால் அரசியலுக்கு வருவதற்கு நான் தயாராக இருக்கின்றேன். நாட்டுக்குப் பலமான எதிர்க்கட்சி அவசியம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனை எதிர்க்கட்சித் தலைவராக ஏற்றுக் கொள்ள முடியாது. கட்சி பிளவுபடுதல் மற்றும் புதிதாகக் கட்சி ஒன்று ஆரம்பிக்கப்படுதல், புதிய சம்பிரதாயம் அல்ல - என்றார்.

இதேவேளை புதிய எதிர்க்கட்சி அரசியல் முன்னணி உருவாக்கப்படும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5)

## 3 வயதுச்

சிறுவனின் தாயார் அவனை அருகிலுள்ள வீட்டில் விட்டுச் செல்வது வழமை. நேற்றும் தாயார் தனது வேலைகளுக்காக வெளியே செல்லும்போது அயல் வீட்டில் சிறுவனை விட்டுச் சென்றுள்ளார். சிறுவன் அயல் வீட்டுப் பிள்ளைகளுடன் விளையாடிக் கொண்டிருந்த வேளை எதிர்பாராமல் கிணற்றில் தவறி விழுந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இது குறித்துப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள் ளனர். (த-ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பருத்தித்துறையில்

இதில் அல்வாய் வடக்கைச் சேர்ந்த கந்தசாமி செந்தில்குமரன் (வயது-36) என்பவரே காயமடைந்தவராவார்.

குறித்த பஸ் சாரதி நேற்றுத் தமது பணியை முடித்துக்கொண்டு சைக்கிளில் வீடு திரும்பிக் கொண்டிருந்த போது, வழிமறித்த மூவர் மண்வெட்டிப் பிடிகளால் கடுமையாகத் தாக்குதல் நடத்தினர் என விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை-கொக்கிளாய் இடையே இனி பஸ் ஓடுவியா? எனக் கேட்டே தாக்கியதாக குறித்த பஸ் சாரதி விசாரணை களில் தெரிவித்துள்ளார்.

தாக்குதல் நடத்தியவர்கள் கைபேசி, சங்கிலி என்பவற்றையும் பறித்துச் சென்றுள்ளனர். தாக்குதலுக்குள்ளாகி வீதியில் கிடந்தவரை வீதியால் சென்றவர்கள் வைத்தியசாலையில் சேர்த்தனர்.

ஏற்கனவே பஸ்கள் தாக்கப்பட்டுள்ள நிலையில் இந்தச் சம்பவம் இ.போ.ச ஊழியர்களிடையே அச்சத்தைஏற்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த சாரதி வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையில் பொலிஸார் விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர். (வ-109)

## இந்திய

தமிழக மீனவர்களைத் தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு நல்லிணக்க அடிப்படையில் விடுதலை செய்வதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருந்தார். இதனடிப்படையில் விடுதலை செய்யப்பட்ட மீனவர்களை, இலங்கைக் கடற்படையினர் நேற்றுமுன்தினம் இந்தியக் கரையோரப் பாதுகாப்புப் படையிடம் ஒப்படைத்தனர்.

அவர்கள்கரையைச்சென்றடைந்தவேளை அங்கு அவர்களுக்கு உற்சாக வரவேற்பளிக்கப்பட்டது. (த-ரி5)

## வடக்கு

வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொன்னுத்துரை ஐங்கர நேசன் உடனிருந்தார்.

இந்த சந்திப்பின் போது, கவிஞர் வைரமுத்து, வடக்கு மாகாணமுதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனுக்குப் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

அதனைத் தொடர்ந்து, முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் கவிஞர் வைரமுத்துவுக்குப்பொன்னாடை போர்த்திக் கௌரவித்ததுடன், பனை ஓலையினால் செய்யப் பட்ட மலர் மாலையை அணிவித் தார்.

பின்னர் கவிஞர் வைரமுத்து, தான் எழுதிய கவிதைத் தொகுப்பு நூல் ஒன்றை முதலமைச்சருக்கு வழங்கியதுடன், யாழ்.பொது நூலகத்துக்கும் ஒரு தொகுதி நூல்களை அன்பளிப்பாக வழங்கினார்.

இன்று சனிக்கிழமை முல்லைத்தீவில் நடைபெறவுள்ள பொங்கல் விழாவில் வைரமுத்து கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-106)

## 6 பிள்ளை

தந்தையாவார்.

கடந்த 19ஆம் திகதி காய்ச்சலுடன் கூடிய சளியினால் பீடிக்கப்பட்ட இவரை உறவினர்கள் மல்லாவிப் பிரதேச வைத்தியசாலை யில் சேர்த்திருந்தனர். பின்னர் அங்கிருந்து கிளிநொச்சி வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக மாற்றப்பட்டிருந்தார். பின்னர் காய்ச்சலின் தாக்கம் அதிகரிக்கவே அவர் 20 ஆம் திகதி யாழ் போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டார். எனினும் அவர் சிகிச்சை பயன் இன்றி உயிரிழந்துள்ளார். (த-107)

---

**யாழ் மாவட்ட பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் (வ -து)**

ஆண்டுப் பொதுக்கூட்டமும் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்களை கௌரவித்தலும் புதிய நிர்வாகத் தெரிவும்-2016

காலம்: 24.01.2016 ஞாயிற்றுக்கிழமை 09.00 மணி
இடம் :கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபம்
தலைமை: திரு. செ. ஜெயக்குமார் அவர்கள் (சங்கத் தலைவர்)

அனைத்து அங்கத்தவர்களையும் குறித்த நேரத்திற்கு சமுகம் தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

க.செல்வச்சந்திரன்
செயலாளர்

இருபாலை வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்

---

**தசாக கிருஹயக்கு அழைப்பு**



அன்புடையீர்.
நிகழும் மன்மத வருஷம் தைமாதம் முதலாம் நாள் (15.01.2016) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர் பிரம்மஸ்ரீ
மகாகணபதீஸ்வரக் குருக்கள்
பாஸ்கரக் குருக்கள்
(யாழ்.கடைத்தெரு வேம்படி பிள்ளையார் ஆலயக் குருக்கள்)

அவர்களின் ஆத்மசாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

தை - 10 ஆம் நாள் 24.01.2016 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தசாகம்
தை - 11 ஆம் நாள் 25.01.2016 திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடபதானம், மாசியம், ஏகோதிஸ்டம்
தை - 12 ஆம் நாள் 26.01.2016 செவ்வாய்க்கிழமை காலை9 மணிக்கு சபிண்டீகரணம்
தை - 13 ஆம் நாள் 27.01.2016 புதன்கிழமை கிருஹயக்கும் முற்பகல் 11 மணிக்கு சமாராதனை

மேற்படி கிரியைகளிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் புதன்கிழமை நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஆடியபாதம் வீதி, கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.


மனைவி.பிள்ளைகள்

---

## மரண அறிவித்தல்

### கனகசபை சண்முகவடிவேல் (மருமோன்)

அன்னை மடியில்
14 . 05 . 1949



ஆண்டவன் அடியில்
18 . 01 . 2016

கொடிகாமம் மடத்தடி ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி ஐயர் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் தற்போது இந்தியாவில் வாழ்ந்து வந்தவருமாகிய கனகசபை சண்முகவடிவேல் 18.01.2016 திங்கட்கிழமை இந்தியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை செல்லத்தங்கம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும் சறோஜாவின் அன்புக் கணவரும் சுகந்தினி(சுவிஸ்), சதீஸ்வரன்(ஜேர்மன்), சுதர்சினி(கனடா), கார்த்திகா (கனடா), துர்க்கா(சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிறிகாந்தன், மரிபெல், ரவிசங்கர், அனுசலிங்கம், றெஜினோல்ட் ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான குழந்தைவடிவேல், சோமசுந்தரம் மற்றும் சாரதாதேவி, விமலாதேவி, பாஸ்கரநாதன், பாக்கிய கௌரி, சிறீதரன், சிறீலதா ஆகியோரின் அன்புச் சகோதரனும் சுலோசனா, விக்கினேஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் கபீசன், காசினி, தாமியா, ராரகா, காரிகை, கரிணி, அக்சயா, அபிலன், கேசிகா, கீர்த்தனன், கவிநயன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (23.01.2016) சனிக்கிழமை மாலை 3.00 மணிக்கு அவரது பிறப்பிடமான கொடிகாமம் மடத்தடி ஒழுங்கையில் உள்ள அன்னாரது இல்லத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் நாளை (24.01.2016) ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மடத்தடி ஒழுங்கை,
கொடிகாமம்.

தகவல்:
சதீஸ்வரன்(மகன்)

தொலைபேசி :072 155 1534, 077 567 0435

---

sunway

மைக் யுனிபா எனர்ஜி சிஸ்டம் (தனி) நிறுவனத்துடன்
**கைகோருங்கள்**

Mike Unipar Energy Systems (Pvt) Ltd நிறுவனமானது மோட்டார் சைக்கிள் பற்றரிகள் மற்றும் யுபிஎஸ் பற்றரிகளை இறக்குமதி செய்து சன்வே எனும் பெயரில் விநியோகிக்கும் நிறுவனமாகும். இந் நிறுவனமானது சீனாவின் பிரசித்திபெற்ற நிறுவனத்தால் உற்பத்தி செய்யப்படும் மோட்டார் சைக்கிள் பற்றரிகள் மற்றும் யுபிஎஸ் பற்றரிகளை விநியோகிக்கும் ஏக முகவர் என்பதில் பெருமைகொள்கின்றோம்.

வடமாகாணத்திற்கான
**விநியோகத்தர்களை**
நாம் தற்போது எதிர்பார்கின்றோம்.

தேர்வு செய்யப்படும் விநியோகத்தர்கள் தேவையான மனித வலு, உட்கட்டமைப்பு வசதிகள், சேவைக்கான வாகன வசதிகளை கொண்டவராக இருத்தல் வேண்டும்.

**மேலதிக தகைமைகள் :**

- வங்கி உத்தரவாதம் வழங்கக்கூடியவராக இருத்தல்
- வியாபார நுணுக்கங்கள்
- சந்தைப்படுத்தலில் முன்னனுபவம் இருத்தல்

**விண்ணப்பிக்கும் முறை**

ஆர்வமுள்ளவர்கள் மின்னஞ்சல் மூலம் நம் அலுவலகத்திற்கு நிலையான விண்ணப்பப்படிவத்திற்காக விண்ணப்பிக்க முடியும்.

**Our E-mail : gm@mikeunipar.com**

அனைத்து விண்ணப்பப்படிவங்களையும் கீழுள்ள முகவரிக்கு 03-02-2016 ம் திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.

Head of Operation
MIKE UNIPAR ENERGY SYSTEMS (PVT) LTD
65/11, orchid Place, off Swarnadisi Place,
Koswatta, Nawala.
T/P : 077-7587013 (Tissa) 071-6348555 (Aruna)
(During office hours )

---

**வீட்டுக்கிருத்திய அழைப்பு**



கடந்த (24.12.2015) வியாழக்கிழமை இறைபதம் அடைந்த
அமரர்
**சிறீரஞ்சன் யதுர்சன்**
அவர்களின் வீட்டுக்கிரியைகள் 23.01.2016(சனிக்கிழமை) முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் பங்கேற்று தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.
இக்கிராமை, கந்தரோடை.

---

**முதலாம் ஆண்டு நினைவலைகள்**

தோற்றம்
15 . 07 . 1932



மறைவு
03 . 02 . 2015

அமரர் **கதிரவேலு கனகசபை**
(ஓய்வு பெற்ற கணக்காளர்– வாழைச்சேனை கடதாசி கூட்டுத்தாபனம், மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை)

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருவாய் எமக்கு வழிகாட்டியாய்
உற்றார், உறவினர், நண்பர்களுக்கு
இனியவனாய் வாழ்ந்து எம்மை
விட்டுப் பிரிந்து ஆண்டு ஒன்று மறைந்ததையா
எம் உள்ளங்களில் என்றும் நிலைத்திருக்கின்றீர்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நீங்கா உங்கள்நினைவில்
குடும்பத்தினர்.

சுழிபுரம் கிழக்கு,
சுழிபுரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைத்திரியின் கருத்து கவலை அளிக்கிறது

*என்கிறது சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டம்*

கொழும்பு, ஜன.23
இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜெனிவாவில் இலங்கை வழங்கிய உறுதிமொழிக்கு மாறாக செயற்படுவது குறித்து கரிசனை கொண்டிருப்பதாக சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டம் குற்றம் சுமத்தியுள்ளது.

பி.பி.சிக்கு செவ்வி ஒன்றை வழங்கியுள்ள ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேன, இலங்கையின் பொறுப்புக்கூறல் விடயத்தில் சர்வதேச தலையீட்டை தாம் ஒருபோதும் அனுமதிக்கப்போவதில்லை என்று தெரிவித்திருந்தார்.

இந்தக்கருத்து தொடர்பில் தமது நிலைப்பாட்டை வெளியிட்டுள்ள, சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்ட நிறைவேற்று பணிப்பாளர் ஜஸ்மின் சூகா,

இலங்கையின் வரலாற்றில் உள்ளக விசாரணைகள் தோல்வி கண்டுள்ளன. எனவே ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளர் இந்த விடயத்தில் தலையிடவேண்டும். அதன் ஊடாகவே நீதியை நிலைநாட்ட முடியும்.

இலங்கையின் ஜனாதிபதி மைத்திரிபாலவின் கருத்து எமக்கு அதிர்ச்சி அளித்துள்ளது.

இலங்கைப் படையினர் கடத்தல்களில் ஈடுபடுவதாக வெளியான குற்றச்சாட்டை ஜனாதிபதி மைத்திரிபால நிராகரித்துள்ளார். எனினும் 2015ஆம் ஆண்டில் மாத்திரம் 15 ஆட்கடத்தல் சம்பவங்களுடன், ஏழு சித்திரவதை சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன - என்றார். (வ)

## எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில்
12 . 06 . 1974



ஆண்டவன் அடியில்
22 . 01 . 2008

**செல்வராசா துளசிதாசன்**
( Tulasi Cable T.V. உரிமையாளர்)
திதி: தைமாத பூரணை 23.01.2016

சின்னதொரு புன் சிரிப்பு
அமைதியான பேச்சு
எளிமையின் வடிவு எல்லாம்
உன்னிடத்தில் கண்டோம். அண்ணா
அன்புடனே அரவணைக்கும் அம்மாவும்
ஆசையுடன் வரவேற்கும் அப்பாவும்
பாசமுடன் பேசிச் சிரிக்கும் சகோதரர்களும்
உருகியழ வைத்து விட்டு ஓடி விட்டாய்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கரணவாய் கிழக்கு,
கரவெட்டி.
077 314 4991

குடும்பத்தினர்.

## திருமதி யோகம்மா இராசகோபால்



சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், நாச்சிமார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோகம்மா இராசகோபால் நேற்று (22.01.2016) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரை இராசகோபால் பத்தர் அவர்களின் அன்பு மனைவியும் யோகேஸ்வரன் (புவிதா நகைப் பூங்கா, ஸ்ரீலங்கா இன்சுரன்ஸ் ஏஜென்ட்), யோகானந்த், தயாபரன், காலஞ்சென்ற சந்திரன், புஸ்பலதா ஆகியோரின் அன்புத் தாயாரும் புஸ்பமலர், பவானி, வசந்தா, தெய்வேந்திரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் புவிதா - பிரதீபன், நவதீசன் (U.K), பவனீதன், நிதர்சன், காஞ்ஜனன், ஜெனித்தா - சிவராமகிருஸ்ணன், ஜிதுஜா, கேசுகி, நதீபா, சஜீகா ஆகியோரின் அன்புப்பேர்த்தியாரும் நிக்ஷனா, அட்சயா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.01.2016) ஞாயிற்றுக் கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.8, ஆறுமுகம் ஒழுங்கை,
5ஆம் கட்டை, கல்வியங்காடு.
T.P: 077 9554 682
தகவல்:
குடும்பத்தினர்.

## கவிதை நூல் வெளியீட்டு விழா

பண்டத்தரிப்பு, ஜன.23
சாந்தையூர் வீ.வினிஸ் அவர் களின் "நிகழ்காலக் கண்ணீர்" எனும் தலைப்பிலான கவிதை நூல் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணிக்கு பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தமிழ் எப்.எம். அறிவிப்பாளர் ரீ.எஸ்.முகுந்தன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்து சிறப்பிப்பார். (கு)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்பள்ளிக்கட்டட திறப்பு விழா இன்று


சுவிஸ் அபிவிருத்திக்கும் ஒத்துழைப்புக்குமான நிறுவனத்தினரால் நிர்மாணிக்கப்பட்ட எழுதுமட்டுவாழ் கரம்பகம் விநாயகர் முன்பள்ளிக் கட்டடம் இன்று காலை 8.30 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

முன்பள்ளி முகாமைத்துவக் குழுத்தலைவர் சி.அழகரத்தினம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ச.கிருஷ்ணகுமார் கலந்து கொண்டு கட்டடத்தைத் திறந்து வைக்கவுள்ளார்.

நிகழ்வுக்கு சிறப்பு விருந்தினர்களாக சுவிஸ் அபிவிருத்திக்கும் ஒத்துழைப்புக்குமான நிறுவன நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் மார்ட்டீன் ஸ்ருடர் , வீடமைப்புத் திட்ட முகாமையாளர் றடோ, திட்ட முகாமையாளர் திருமதி லேகா, தென்மராட்சி கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ச.அரியநாயகம் ஆகியோர் கலந்து கொள்வர். (ஐ-9)

## மரண அறிவித்தல்கள்

### கணபதிப்பிள்ளை ஜெயகுமரன்



இணுவிலைப் பிறப்பிடமாகவும் சுவிஸ், லண்டனை வதிவிட மாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை ஜெயகுமரன் 15.01.2016 லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை மற்றும் சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும், துரைராஜசிங்கம் (கனகலிங்கம்)- பத்மினி தம்பதியரின் அன்பு மருமகனும், மதிவதனியின் (சுமதி-லண்டன்) அன்புக் கணவரும்,காரனி, கயானா,கானுஜன், கர்சன் ஆகியோரின் அன்புத் தந்தையும், றஞ்சி (சுவிஸ்), சுகந்தி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், விவேகானந்தன் (சுவிஸ்), சிறீஸ்கந்தராசா (லண்டன்), மதிவதனன் (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும், சுகுணசீதாவின் (மீரா-சுவிஸ்) சகலனும், விரதன், விரவி, சரஸ்சவி, சரபன்,சாரகி, நேகா ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.01.2016) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
த.கனகலிங்கம்
(மாமா)

இணுவில் கிழக்கு,
வேம்போலை. (67927)(11,18)

தொடர்பு:- 077 636 0558, 021 205 4471



### திருமதி கிருஸ்ணமூர்த்தி பேரானந்தம்

அம்மன் கோவில் வீதி, தச்சன் தோப்பு வேலம்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கிருஸ்ணமூர்த்தி பேரானந்தம் நேற்று (22.01.2016) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் கந்தையா-அவூர்வம் தம்பதியரின் அன்பு மகளும், பொன்னையா-சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், கிருஸ்ணமூர்த்தியின் அன்பு மனைவியும் விகடபதியின் அன்புத் தாயும், நாகேஸ்வரனின் பாசமிகு மாமியும், காலஞ்சென்ற துரையப்பா மற்றும் சரஸ்வதி, சிவஞானம், சுந்தரலிங்கம், நல்லம்மா, முத்தம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை, நாகரத்தினம் முத்துக்குமாரு, புண்ணியமூர்த்தி, சிவகாமியம்மை மற்றும் பரமசாமியின் பாசமிகு மைத்துனியும், சங்கீதா, லக்ஷணன், கம்ஷிகா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.01.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிணமுங்கை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி ரொசலின் யூலியானா நேசமலர் பஞ்சதிருசிங்கம்



கோப்பாய் மத்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ரொசலின் யூலியானா நேசமலர் பஞ்சதிருசிங்கம் நேற்று (22.01.2016) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பஞ்சதிருசிங்கத்தின் (தேனீ) அன்பு மனைவியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (23.01.2016) சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று இராசவீதியில் உள்ள சென்மேரிஸ் (அங்கிலிக்கன்) சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:- நிர்வாகம்
பரி கன்னி மரியாள் ஆலயம்
(அங்கிலிக்கன் திருச்சபை)

கோப்பாய் மத்தி. (67931)(11,17,18)

### திருமதி இராசமணி தம்பிராசா

பிறப்பு 20 . 04 . 1940



இறப்பு 22 . 01 . 2016

கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் நல்லூர் முடமாவடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசமணி தம்பிராசா நேற்று (22.01.2016) வெள்ளிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையவி - ஆச்சிக்குட்டி தம்பதிகளின் மகளும் காலஞ்சென்றவர்களான இத்தினி - சீதேவி தம்பதிகளின் மருமகளும் தம்பிராசா (ரெய்லர்) அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான தம்பையா செல்லத்துரை, செல்லம்மா ஆகியோரின் அன்புச்சகோதரியும் காலஞ்சென்றவர்களான இரத்தின வடிவு, சண்முகவடிவு ஆகியோரின் மைத்துனியும் ரஞ்சினி, காலஞ்சென்ற சந்திரகாந்தன் மற்றும் சிறிகாந்தன்(சிறி CTB முன்னாள் சாரதி), வவி, ஆனந்தன்(சூரி), வசந்தினி, சுகந்தினி, ராஜ்கரன்(ராசா) ஆகியோரின் அன்புத்தாயாரும் காலஞ்சென்ற அருளப்பு, பாமா, ஜெயசிறி, மனோரஞ்சிதம், கீஷா, அமுதலிங்கம், தேவன், கார்த்திகா ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.01.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியை களுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

449/5, இராமலிங்கம் வீதி, முடமாவடி,
நல்லூர், யாழ்ப்பாணம். T.P: 077 2629 083

தகவல்:
குடும்பத்தினர்.

பிறப்பு: 17.11.1923 இறப்பு: 20.01.2016

### மணியர் இராசையா

(ஓய்வுபெற்ற விவசாய பண்ணை ஊழியர்)



அளவெட்டி தம்மளையைப் பிறப்பிடமாகவும், சிவிக் சென்ரர் வட்டக்கச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட மணியர் இராசையா கடந்த (20.01.2016) புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மணியர் - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், தங்கரத்தினத்தின் பாசமிகு கணவரும், ஐயாத்துரை , மனோன்மணி செல்லத்தம்பி, மனோகௌரி ஆகியோரின் சகோதரனும். பரஞ்சோதி (விவசாய பண்ணை ஊழியர், கனடா) செல்வராணி, புஸ்பராணி, காலஞ்சென்ற இராசகுமார் மற்றும் உதயகுமார் (பிரான்ஸ்), சிவராணி, துரைராணி ஆகியோரின் தகப்பனும், நகுலேஸ்வரி (சுதுமலை), பரமநாதன் (ஓய்வுபெற்ற மிருக வைத்தியசாலை ஊழியர்), தேவராஜா, சுபாசினி, கோபாலசிங்கம் (புளியம் பொக்கணை) நித்தியானந்தம் ஆகியோரின் மாமனும், திலகவதி, செல்வராசா, தங்கமலர், செல்வநாயகம் ஆகியோரின் மைத்துனரும், நிசாந்தன், துவாரகன், றுக்சன் (கனடா), வாசுகி- குகனேசன் (சுவீடன்), ஸ்ரீதரன் - சாந்தரூபி (சிறுப்பிட்டி), ஜெயாதேவி-விக்னராஜா (பிரதேச செயலக ஊழியர்-கிளிநொச்சி) காலஞ்சென்ற ஸ்ரீரூபன் மற்றும் பிரதீபா, லோவிதா, கிருஷாளினி, அபிஷ்னன் ஆகியோரின் பேரனும், ரூபசிங்கத்தின் பெரியப்பாவும் (கிராம சேவகர்-கிளிநொச்சி) பிரதீபன், பிரியந்தி, பிரபவா, பிரகாந்தன் (பொலிஸ் உத்தியோகத்தர் - பருத்தித்துறை) ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 24.01.2016 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11. மணிஅளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பன்னங்கண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

சிவிக் சென்ரர்,
வட்டக்கச்சி. 0771116061, 0786169907

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா தங்கராஜா

(ஓய்வுநிலை தபால் உத்தியோகத்தர்)



நுணாவில் மேற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கந்தையா தங்கராஜா நேற்று (22.01.2016) வெள்ளிக்கிழமை இறைபதமடைந்து விட்டார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

நுணாவில் மேற்கு, சாவகச்சேரி

### திருமதி பொன்னாச்சி கணபதிப்பிள்ளை



தாவளை இயற்றாலை வரணியைப் பிறப்பிடமாகவும் பழைய கமம் முரசு மோட்டையை வசிப்பிடமாகவும் நாவற்காடு வரணியைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னாச்சி கணபதிப்பிள்ளை 21.01.2016 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும் அன்னப்பிள்ளை, பரிபூரணம், காசிநாதன், வரத ராசன்(ஜேர்மனி) ஆகியோரின் அன்புத்தாயாரும் இராசையா, சின்னையா, குமுதவதி, குகனேஸ்வரி, பிறேமலதா (ஜேர்மனி) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.01.2016) ஞாயிற்றுக்கிழமை காலை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக குடமியன் இந்து மயானத்திற்கு காலை 8.00 மணியளவில் எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. காசிநாதன்
(மகன்)

நாவற்காடு,
வரணி.



### எரிக்டறன் வேதநாயகம்

கரம்பன் ஊர்காவற்றுறையை சேர்ந்தவரும் லண்டனில் வசித்தவருமான திருவாளர் எறிக்டறன் வேதநாயகம் 20.01.2016 புதன்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேதநாயகம்-செல்வம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான அல்பிறட்- மேபின் தம்பதியரின் அன்பு மருமகனும், மேசியின் அன்புக் கணவரும் டறியோ, டூத்திக்கா, டர்சிக்கா ஆகியோரின் பாசமிகு தந்தையும், வசீகரன் (USA), நிசான் (கனடா), றொசான் (கனடா), Dr. கிறிசான் (பதுளை அரசினர் வைத்தியசாலை) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், வசந்தி (லண்டன்), ராஜா, சாந்தி (நெதர்லாந்து) றஞ்சன் (லண்டன்) SR.ஞானதர்சினி (அதிபர்யா/பெனடிக்ற் வித்தியாலயம்) SR.அஞ்சலிக்கா (பிரதி அதிபர் ம.முருங்கன் ம.வி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் 26.01.2016 செவ்வாய்க்கிழமை லண்டன் பெக்ஸ்லியில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: MR.M.C. Raja Alfred
No.12, Kandy Rd, Jaffna.
மைத்துனர்.


Ph.No:00442083048338
திருமதி மேசி எறிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# COMPUTER CORNER

## 23.01.2016 இல் 4வது ஆண்டில்

காலடி எடுத்து வைப்பதை முன்னிட்டு
அதிரடி விலைச்சலுகை



**System 1**
intel core i34th G 3.2 GHz
Mother Board H81 M - C
2GB DDR111 RAM
500GB HDD
DVD Writer ASUS
Casing
Monitor 19"LED HP
Keyboard
Mouse
UPS Power 111
55,499/=

**System 2**
intel Duo core 4th G 3.2 GHz
Mother Board H81 M - C
2GB DDR111 RAM
500GB HDD
DVD Writer ASUS
Casing
Monitor 19"LED HP
Keyboard
Mouse
UPS Power 111
46,899/=

| | |
|---|---|
| 8GB Flash | 599/= |
| 16 GB Flash | 1099/= |
| 32 GB Flash | 2099/= |
| Kaspersky 1 U | 1449/= |
| Kaspersky 3U | 2899/= |
| webcam | 649/= |
| Card Reader | 49/= |
| Multi Card Reader | 99/= |
| Speaker | 349/= |
| Monitor 19" HP LED | 12299/= |
| Mouse | 119/= |
| Mouse pad | 49/= |
| 4 GB Memory card | 299/= |







**Laptop 1 HP**
intel core i3 5th G
4GB DDR111 RAM
1000GB HDD
DVD Writer Optical
15.6" LED Display
WLAN / BT
Windows 10 Original
63,999/=

**Laptop 2 HP**
intel core i3 4th G
4GB DDR111 RAM
500GB HDD
DVD Writer Optical
15.6" LED Display
WLAN / BT
59,999/=

**System 3**
intel Core 2 Duo
Mother Board
1GB DDR111 RAM
160GB HDD
DVD Writer
Casing
Monitor 17"LED HP
Keyboard
Mouse
17,499/=

எம்மிடம் கொள்வனவு செய்யப்படும்
கணினிகளுக்கான சேவைக்கட்டணங்கள்
யாவும் இலவசம்

உங்கள் இல்லங்களுக்கு
வந்து கணினி தீர்வை
வழங்க நாம்
தயாராக உள்ளோம்

**Computer Corner**
***K.K.S வீதி,***
***மல்லாகம் சந்தி***
***மல்லாகம்***

**T.P No :- 021 205 9044**
**Mobile :- 077 353 7126**

**Free ITEMS**
Speaker, Webcamera, Laptop Cooler, Head Phone,
Memory Card, Card Reader, Mouse, Mouse Pad, Laptop Bag
*நிபந்தனைகளுக்கு உட்பட்டது

கண்காணிப்பு CCTVகமறா
பொருத்தும் சேவைக்கும்
எம்மைத் தொடர்பு கொள்ளலாம்



உ

ஸ்ரீ கைலாச பிள்ளையார் துணை





# ஸ்ரீ கைலாச நாதர் கோயில்
# ஸ்ரீ கைலாச பிள்ளயையார் கோயில்
# மூன்றாம் கைலாசம்

கைலாச கோபுர கைங்கர்ய மங்களாரம்பம்

**ஸ்ரீ கைலாச நாதரின் அடியார்களே!**

ஸ்ரீ கைலாச நாதரின் ஆக்ஞைப்படி ஸ்ரீ கைலாச பிள்ளையார் இம் மூன்றாம் கைலாசத்தில் வீற்றிருந்து அருள் பாலிக்கும் ஸ்ரீ கைலை நாயகிக்கு கைலாசகோபுரம் அமைக்க கட்டளை இட்டுள்ளார்.

இதற்கமைய யாழ்ப்பாண இராஜதானியை நிறுவிய ஆரியச் சக்கரவர்த்திகளின் அரச கோயிலாகவும் கோபுரத் த்வார மாட வீதிகள் கொண்ட பெருங்கோயிலாகவும் யாழ்ப்பாண இராஜ தானியின் முதன்மைக் கோயிலாகவும் விளங்கியதென கைலாய மாலையில் போற்றப்பட்டுள்ள இக்கோயிலின் புராதனச் சிறப்பைப் பேணும் வகையில் மீண்டும் புதிய ராஜ கைலாச கோபுரங்கள் அமைக்கும் பெரும் திருப்பணிகள் கைலாச நாதரின் அனுக்ர ஹத்துடன் ஆரம்பிக்கப்படுகின்றன.

எனது முன்னோர்களால் கோயிலுக்காக எழுதப்பட்ட சாஸ்திர விதிக்கமைவாகவும் வடமேற்கு மூலையில் அமைந்திருக்கும் பஞ்சமுகப் பிள்ளையாரின் ஸ்தான விதிப்படியும் கோயிலின் கட்டட அமைவுகளுக்கான ஆகமப் பிரமாணங்களின் பிரகாரமும் கையிலை நாயகிக்கே இக் கோயிலில் முதற்கோபுரம் அமைக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ள காரணத்தினால் கையிலை நாயகிக்கு கைலாச கோபுரம் அமைப்பதற்கான மங்களாரம்பம் ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மன்மத வருஷம் புஷ்யமாசம் எனச் சிறப்புப் பெறும் தைத்திங்களின் மதிவளர் பக்ஷம் நிறைமதி நாளின் பூச நட்சத்திரம் நிறைந்திருக்கும் தைப்பூச நன்னாளாகிய ஞாயிற்றுக் கிழமை (24.01.2016) காலை 06.30 முதல் 07.30 வரை கோதுளிகா முகூர்த்தத்தில் பூமிபூஜை சங்குஸ்தாபனம் என்பன நடைபெற்று ஸ்ரீ கைலாச நாதரினதும் ஸ்ரீ கையிலை நாயகியினதும் ஸ்ரீ கைலாச பிள்ளையாரினதும் ப்ரத்யக்ஷ அனுக்கிரஹத்துடனும் ஸ்ரீ மணிக் குருக்களின் மானசீக ஆசீர்வாதத்துடனும் கைலாச கோபுரத்தைத் தாங்கி நிற்கவென பூஜிக்கப்பட்ட முதலாவது அத்திவாரக்கல்லின் ஸ்தாபனமும் மந்திரபூர்வமாக நடைபெறத் திருவருள் கைகூடி யுள்ளது.

"கைலாச கணபதிக்கோர் கோபுரம் காணீர்
கைலாச நாதருக்கோர் கோபுரம் காணீர்
கைலாச நாயகிக்கோர் கோபுரம் காணீர்
கைலாச கோபுர முன்றுள்ள திதுதானே"

"நற்றுணை யாவது நமசிவாயவே"

**கு.குருசாமி சர்மா**
ஸ்ரீகைலாச பிள்ளையார் கோயில்,
பரம்பரை நம்பிக்கை பொறுப்பாளரும், ஆதீனகர்த்தாவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜன. 23

*யங்ஸ்ரார் வி.கழகத் தொடர்*

வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் வவுனியா கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் அணிகளுக்கு இடையில் சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்காக நடத்தும் லீக் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஏ.பி.சி. அணியை எதிர்த்து அம்மன் அணி மோதவுள்ளது.

*ஜொலிஸ்ரார் வி.கழகத் தொடர்*

ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் ஜொலிஸ்ரார் கிண்ணத்துக்காக நடத்தும் இருபாலாருக்குமான கூடைப் பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் யாழ். இந்துக்கல்லூரியின் கூடைப்பந்தாட்ட திடலில் இடம் பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் பெண்களுக்கான ஆட்டத்தில் கே.கே.எஸ். அணியை எதிர்த்து யாழ். இந்து மகளிர் அணி மோதவுள்ளது. தொடர்ந்து மாலை 5.30 மணிக்கு இடம்பெறும் ஆண்களுக்கான ஆட்டத்தில் கே.கே.எஸ். அணியை எதிர்த்து யாழ்.பல்கலைக்கழக அணி மோதவுள்ளது.

*ஐக்கிய வி.கழகத் தொடர்*

நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் 65ஆவது ஆண்டுநிறைவை முன்னிட்டு நடத்தப்பட்டுவரும் கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் ஐக்கிய விளை யாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை இரவு 7மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் நீர்வேலி ஐக்கிய அணியை எதிர்த்து சிறுப்பிட்டி கலையொளி அணி மோதவுள்ளது. இரவு 8மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சக்காய் வொலிக்கிங்ஸ் அணியை எதிர்த்து நாயன்மார்கட்டு பாரதி அணி மோதவுள்ளது.

*இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனத் தொடர்*

இலங்கை கால்பந்தாட்டச் சமமேளனம் நடத்தும் 19 வயதுப்பிரிவு அணிகளுக்கு இடையிலான யூனியர் லீக் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டம் ஒன்று இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அளம்பில் இளந்தென்றல் விளையாட்டு மைதானத்தில் இடம் பெறவுள்ளது. இதில் கிளிநொச்சி லீக் அணியை எதிர்த்து முல்லைத்தீவு லீக் அணி மோதவுள்ளது.

*உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கத் தொடர்*

வடமாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கம் நடத்தும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் மூன்றாம் இடத்திற்கான ஆட்டத்தில் யங்கம்பன்ஸ் அணியை எதிர்த்து வதிரி டயமன்ஸ் அணி மோதவுள்ளது. (ம-23)

# ஆஸி.அணியுடனான தோல்வியை பொறுப்பேற்கிறார் டோனி



ஆஸ்திரேலியாவுக்கு எதிரானநான்காவது ஒருநாள் ஆட்டத்தில் இந்திய அணி அடைந்த தோல்விக்கு தானே பொறுப்பேற்றுக் கொள்வதாக இந்திய அணித் தலைவர் டோனி தெரிவித்துள்ளார்.

இந்தியா – ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான நான்காவது ஒரு நாள் ஆட்டம் கான் பெராவில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. முதல் மூன்று ஆட்டங்களிலும் தோல்வியடைந்து தொடரை இழந்த இந்திய அணி இந்த ஆட்டத்தில் வெற்றி பெறும் நிலையில் இருந்த போதிலும் துடுப்பாட்ட வீரர்களின் பொறுப்பற்ற ஆட்டத்தால் தோல்வியடைந்தது. குறிப்பாக, இக் கட்டான நிலை யில் இருந்த பொழுது, டோனி தேவையற்ற விதத்தில் அடித்தாட முற்பட்டு ஓட்டங்கள் எதனையும் பெறாமல் ஆட்டமிழந்தார். இதுவே தோல்விக்கு பிர தான காரணம் என்று குறிப்பிடப்பட்டது. இதை டோனியும் ஏற்றுக் கொண் டுள்ளார்.

தோல்வி தொடர்பாக டோனி தெரிவிக்கையில்; என்னுடைய இலக்குத் தான் திருப்பு முனையாகி விட்டது. அணியை இறுதி வரை நின்று வெற்றிக்கு இட்டுச்செல்வதுதான் எனது பணி. எனவே அந்தத் தருணத்தில் ஆட்டமிழந்தது திருப்புமுனை யானது. தோல்விக்கு நான் பொறுப்பேற்றுக் கொள்கிறேன். எனக்குப் பிறகு இறங் கியவர்களில் சிலர் சர்வதேச கிரிக்கெட் அனுபவம் இல்லாதவர்கள். ரகானே காயமடைந்ததும் தோல்விக்கு ஒரு முக்கிய காரணமாகிவிட்டது.- என்றார். (ம)

# வீதியோட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 23

நாவாந்துறை றோ.க. வித்தியாலயத்தின் இல்லங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகளின் ஓர் அங்கமான வீதியோட்டம் இன்று காலை 6 மணியளவில் நடைபெறவுள்ளது. அமரர் டிலக்சன் ஞாபகார்த்தமாக குறித்த வித்தியாலயத்தின் பழைய மாணவர்கள் சிலர் வீதி யோட்டத்துக்கான அனுசரணையை வழங்குகின்றனர். (ம)

# சென்.நீக்கிலஸ் அபாரம்

யாழ்ப்பாணம், ஜன. 23

ஊறெழு றோயல் விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட் டங்கள் உரும்பிராய் இந் துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம்வியாழக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் அணியை எதிர்த்து முல்லைத்தீவு உதயசூரியன் அணி மோதிக் கொண்டது. இதில் நாவாந் துறை சென். நீக்கிலஸ் அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

# இல்ல மெய்வன்மைப் போட்டி

கரணவாய், ஜன. 23

உடுப்பிட்டி அ.மி.கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று சனிக் கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன. கல்லூரி அதிபர் சு.கிருஷ்ணகுமார் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கொழும்பு போதானா வைத்தியசாலையின் விபத்துக்கள் சேவைப்பிரிவு மருத்துவ அதிகாரி மருத்துவர் அ.துஸ்யந்தன் கலந்து கொள்ளவுள்ளார். (ம-108)



சுன்னாகம், மயிலணி சைவமகாவித்தியாலய இல்லமெய்வன்மைப் போட்டிகள் பாடசாலை மைதானத்தில் குறித்த வித்தியாலயத்தின் அதிபர் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் கலந்துகொண்டார். (ம-86)

3 ஆம் ஆண்டு நினைவலைகள்





அன்னையின் மடியில்
05 • 09 • 1990
ஆண்டவன் பாதத்தில்
25 • 01 • 2013

அமரர் தனராஜா துளசிகா (துளசி)
(கலைப்பீட 2ஆம் வருட மாணவி, யாழ். பல்கலைக்கழகம்)

எங்கள் குடும்பக்கலங்கரை விளக்கமே
அன்பிற்கு அர்த்தம் நீதானம்மா
ஆழ்ந்து ஆழ்ந்து யோசித்தும்
நீங்கவில்லை இன்னும் உன் நினைவுகள்

உலகமே உன் பிரிவால் கண்ணீரில் மூழ்கியிருக்க
ஊர் முழுவதும் உன் பெருமை கூறியிருக்க
எங்களைத் தீரா துயரில் வீழ்த்தியது ஏனோ?
ஏங்குகிறோம் தினமும் உன் பிரிவாலே

ஆண்டுகள் மூன்று பறந்தோடினாலும்
ஆரம்பப்பள்ளியில் நீ கற்றது என் மனதில்
நிழலாய் தெரிகிறது நீண்ட உறக்கம் உனை
தழுவினாலும் உன் நினைவின் அலைகள்
மீண்டும் மீண்டும் தரைதட்டும்

வாடி நிற்கிறோம் உன் பிரிவாலே
கூடி நாம் மகிழ்ந்திடலாம் பிறப்பெடுத்து வாரீரோ?

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !

45/3 A, ஞானவைரவர் லேன்,
பலாலி வீதி,
கோண்டாவில்.

குடும்பத்தினர்
(தாய், தந்தை, சகோதரர்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

CHEMISTRY
2018 A/L
ENGLISH MEDIUM 3PM
TAMIL MEDIUM 4PM
STARTS ON 24.01.2016 (SUN)
83/19, ARASADY ROAD, JAFFNA.
N.KALA

புலமைப் பரிசில் வகுப்புக்கள்
தரம் 5 தரம் 4 தரம் 3
மாதிரிப் பரீட்சைகளும் விசேட வகுப்புக்களும் ஆரம்பம் நாளை 24.01.2016 தைபூசம் அன்று
ஆசிரியர்: மனோ.சுரேஸ்
புதிய நாவலர் கல்வி நிலையம்
T.P: 077 4598 440

A/L பொருளியல்
MCQ BOOK - 4
பணம் வங்கி விலை மட்டம்
ரூபா 110
மூன்றாம் பதிப்பு
புதிய வினாத்தாள் அமைப்பில் மேலதிக மீட்டல் வினாக்களுடன்
வங்கியாளர் பரீட்சைக்கும் உதவும்
முழுப்பாடத்திட்டமும் அடங்கிய 2015 A/L பரீட்சையில் 99 புள்ளிகள் பெறுவதற்கு வழிவகுத்த மற்றும் பொருளியல் நூல்கள்
ஆசிரியர் வே.கருணாகரன்
பூபாலசிங்கம் புத்தகசாலை
அன்னை புத்தகசாலை

## இல்ல மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம், ஜன. 23

யாழ்ப்பாணம் இராமநாதன் கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

கல்லூரியின் அதிபர் கே.கிருஷ்ணபிள்ளையின் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வலிகாமம் வலயத்தின் கல்விப்பணிப்பாளர் சந்திரராஜா கலந்துகொள்ளவுள்ளார். (ம)

## அயர்லாந்தின் ஆலோசகராக வாஸ்



இலங்கை அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் சமிந்த வாஸ் அயர்லாந்து அணிக்கு ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை அணியின் முக்கிய பந்துவீச்சாளராகத் திகழ்ந்த சமிந்த வாஸ், தனது ஓய்வுக்குப் பின்னர் 2012ஆம் ஆண்டு நியூசிலாந்து அணியின் பந்துவீச்சு ஆலோசகராக பணியாற்றினார். அதன்பின் 2013ஆம் ஆண்டில் இருந்து கடந்த ஆண்டு வரை இலங்கை அணியின் பந்துவீச்சுப் பயிற்சியாளராக இருந்தார். இந்நிலையில் இந்தியாவில் நடக்கவிருக்கும் ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் சிறப்பாக செயற்படுவதற்காக அயர்லாந்து அணி, சமிந்த வாஸை தனது ஆலோசகராக நியமித்துள்ளது.

இது பற்றி சமிந்த வாஸ் தெரிவிக்கையில், அயர்லாந்து அணியில் ஏராளமான திறமை மற்றும் அனுபவம் உள்ள வீரர்கள் உள்ளனர். என்னால் அவர்களுக்கு கூடுதலாக வலுச்சேர்க்க முடியும் என்ற நம்பிக்கை உள்ளது. அந்த அணியின் அதிகாரிகளுடன் நான் கலந்து கொள்ள இருப்பது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது- என்றார். (ம)

English Language Adventure School
English Trainer Training (Teacher Training Programme) (500 hrs)
Spoken English (160 hrs) → Diploma in English (240 hrs)
Spoken Sinhala (160 hrs) → IELTS Lifeskills → IELTS
New batches start on
ELAS Sir Pon Ramanathan Rd, Thirunelveli, Jaffna.
Contact No - 076 697 3045, 021 221 2410

## பங்களாதேஷுக்கு மீண்டும் அடி; தொடர் சமநிலையில் முடிவு



சிம்பாப்வே - பங்காளாதேஷ் அணிகளுக்கு இடையிலான நான்காவதும் இறுதியானதுமான ரி-20 ஆட்டத்தில் 18 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது சிம்பாப்வே. இதனால் 4 ஆட்டங்களைக் கொண்ட தொடர் 2:2 என்று சமநிலையில் முடிவடைந்துள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற சிம்பாப்வே முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகள் இழப்புக்கு 180 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக மசகட்சா 93 ஓட்டங்களையும், வோலர் 36 ஓட்டங்களையும், முதும்பானி 32 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் பங்களாதேஷ் சார்பாக மோர்ரசா, கிடர், அகமட், சகிப் அல் கசன் மூவரும் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு களமிறங்கிய பங்களாதேஷ் 19 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 162 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக முகமதுல்லா 54 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் சிம்பாப்வே சார்பாக மட்சிபா 4 இலக்குகளையும், சிசாரோ 3 இலக்குகளையும், ரசா 2 இலக்குகளையும், ஜோங்வி ஓர் இலக்கையும் கைப்பற்றினர். (ம)

## இந்தியா வெள்ளையடிக்கப்படும் எச்சரிக்கிறார் ஆஸியின் சிமித்

இந்தியாவுக்குஎதிரானஒருநாள்தொடரை முழுமையாகக் கைப்பற்றி காட்டுவோம் என்று ஆஸ்திரேலிய அணித்தலைவர் சிமித் எச்சரித்துள்ளார்.

இந்திய அணி ஆஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது. தற்பொழுது ஒருநாள் தொடர் நடைபெற்று வருகிறது. முடிவடைந்த முதல் நான்கு ஆட்டங்களிலும் இந்திய அணி தோல்வியடைந்து 4-0 என தொடரை இழந்துள்ளது. இறுதி ஒருநாள் ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது. இந்த நிலையில் இந்தியாவை 5-0 என வெள்ளையடிப்புச் செய்ய திட்டமிட்டுள்ளதாக ஆஸ்திரேலிய அணியின் தலைவர் சிமித் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், - நாங்கள் இந்தியாவுக்கு எதிராக சிறந்த ஆட்டத்தை ஆடி வருகிறோம். இதனால் நாங்கள் அனைத்தும் கற்றுவிட்டதாக நினைக்கவில்லை. ஆனால் இது எங்களது நம்பிக்கையை அதிகரித்துள்ளது. இந்திய அணியில் சில வீரர்கள் புதிதாக உள்ளனர். இதனால் மத்தி வரிசை அனுபவமில்லாத வீரர்களால் பலவீனமாக உள்ளது. இதைச் சிறப்பாகப் பயன்படுத்தி இறுதி ஆட்டத்திலும் இந்தியாவை வீழ்த்துவோம் என்றார். (ம)

Be a gift to the world
Rotary
யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகத்தின்
பொங்கல் விழா - 2016
இடம் : யாழ்.மாநகர திறந்தவெளி அரங்கம்
(யாழ்.பொது நூலகம் அருகில்)
காலம் : 23.01.2016 சனிக்கிழமை
நேரம் : மு.ப. 9.30 மணிமுதல்
பிரதம விருந்தினர் :
Rtn. ஜோர்ஜ் ஜேசுதாஸன்
(மாவட்ட ஆளுநர் - றோட்டறி மாவட்டம் 3220)
சிறப்பு விருந்தினர் :
Shri. ஏ.நடராஜன்
(துணைத்தூதுவர் - இந்திய துணைத்தூதுவராலயம், யாழ்ப்பாணம்)
கௌரவ விருந்தினர் :
திரு. நா.வேதநாயகன்
(அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்)
நிகழ்வுகள் :
சறுக்கு மரம் ஏறுதல்
தலையணை சண்டை
உறி உடைத்தல்
போன்ற கலாசார நிகழ்வுகளும் இடம்பெறும்.
யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகத்தின் பொங்கல் விழா 16'
ஊடக அனுசரணை : உதயன்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.01.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.